திரு. பக்தவத்ஸலம் அதற்கும் இடம் கொடுத்தார். பின்னர், சிக்கல் அதிகமாகி, நிலவரம் முற்றி, பயங்கர வன்முறையாக வெடித்தபோது, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் கேரளத்திற்குச் சுற்றுப்பயணம் கிளம்பி விட்டார்!

பெரும் பொறுப்பைச் சமாளிக்க வேண்டிய கடமை திரு. பக்தவத்ஸலத்திற்கு ஏற்பட்டது. திறமையுடன் சமாளித்தார். அதனால் மக்கள் மத்தியில், குறிப்பாக இளைஞர்களிடையே, அதிருப்தியைத் தேடிக்கொண்டார்.

திரு. பக்தவத்ஸலத்தின் அரசியல் சிரமங்களுக்கு இவருடைய நெருங்கிய சுற்றத்தார் சிலர் காரணமாக அமைந்தார்கள். அவர்களுடைய சொந்த முன்னேற்றத்திற்காகவும், அரசியல் வளர்ச்சிக்காகவும் இவரது பெயரைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அதைத் தடுக்கும் கடின சித்தம் இவருக்கு இல்லை.

1962-ம் வருட தேர்தலுக்கு முன்பாக உருவான காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சி அப்படியே நீடித்திருந்தால் திரு. பக்தவத்ஸலம் அவர்களின் அரசியல் நிலை இன்னும் நன்றாக இருந்திருக்கும். மறுபடியும், அந்தக் கட்சியிலிருந்து பலரைக் காங்கிரசில் சேர்த்தது, இவருக்குச் சிரமத்தை உண்டாக்கியது.

இருந்து கெடுத்த
இரு தளபதிகள்

செங்கற்பட்டு, தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் வன்னியர் வசமிருந்த பூமிகள் அனைத்தும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, சண்டைகளின் விளைவாகவும், புதிய அரசுகள் ஏற்பட்டதின் பயனாகவும் பல்வேறு இதர சமூகங்களைச் சேர்ந்தவர்களிடம் போய் விட்டன. பல்லவ நாட்டுப் பிராந்தியத்தைச் சேர்ந்த பெரும் பான்மையான வன்னிய மக்கள் உடல் உழைப்பாளர்களாக ஏழை வாழ்வு நடத்த வேண்டிய நிலை உருவாகியது.

1952-ம் ஆண்டில் வயது வந்த ஆண், பெண் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டது. சமுதாயத்தில் ஏற்பட்ட இந்தப் பெரும் புரட்சியின் விளைவை பல காங்கிரஸ் தலைவர்கள் உணர்ந் திடவில்லை. பெருந்தனக்காரர்களை மட்டும் அண்டிய நிலையில், பழைய தேர்தல் முறையையே பின்பற்றினர். அதன் காரணமாகத் தான் இந்தப் பல்லவ பிராந்தியத்தில் காங்கிரசின் செல்வாக்கு குறைந்து நிறைய தோல்வி ஏற்பட்டது.

திரு பக்தவத்ஸலம் அவர்களது தளபதிகளாக இருந்த அய்யரும், ஆச்சாரியாரும் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாறுதலை உணராமல் பழைய முறையிலேயே செயல் பட்டார்கள். அவர்களுடைய தவறுகளுக்கெல்லாம் 1967-ம் ஆண்டு தேர்தலில் திரு. பக்தவத்ஸலம் களப்பலியானார்.

தொகுதி மாறி தேர்தலில் போட்டியிடுமாறு செங்கற்பட்டு மாவட்ட மக்கள் கேட்டுக் கொண்டார்கள். திரு. பக்தவத்ஸலம் அதை ஏற்கவில்லை. தளபதிகளையாவது மாற்றுங்கள் என்று ஊழியர்கள் கேட்டுக் கொண்டார்கள். திரு பக்தவத்ஸலம் அதையும் கேட்கவில்லை. தன்னையே தியாகம் செய்துகொண்டு விட்டார்.

அதன் 'பலன்'தான் போலும், இவருடைய தளபதிகளில் ஒருவரின் குமாரர் இப்போது இவரைப்பற்றி நிறைய எழுதிக் கொண்டே இருக்கிறார்!

1967 தேர்தலில்
'தலைவ'ரின் தொண்டு

1967-ம் வருடப் பொதுத்தேர்தலின்போது, அகில இந்திய தேர்தலை நடத்த வேண்டிய அகில இந்திய காங்கிரஸ் தலைவர், தமிழ்நாட்டில் தொகுதி வாரியாகக் கட்சி வேட்பாளர்களைப் போடும் வேலையில் ஈடுபட்டார். பார்வதி - பரமசிவனைச் சுற்றி வலம் வந்த பிள்ளையார் பழம் பெற்றது போல, திருமலைப் பிள்ளை தெருவில் காத்திருந்தவர்களுக் கெல்லாம் கட்சியின் சார்பில் வேட்பாளர்களாக நிற்க அனுமதி கிடைத்தது!

திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும், திரு. பக்தவத்ஸலமும் தமிழ்நாடு முழுவதும் சுற்றி, கட்சி ஊழியர்களுடன் ஆலோசனை கலந்து, தயாரித்த வேட்பாளர் பட்டியல் தூக்கி யெறிப்பட்டு விட்டது.

தேர்தலுக்கு நிற்பதில்லை என்று திரு. பக்தவத்ஸலம் அப்போது முடிவு செய்திருந்தால், தமிழ்நாட்டு அரசியல் நிச்சயமாகச் சீர்திருத்த மடைந்திருக்கும்.

ஆனால், இவர் திருப்பதி சென்று பெருமாளிடம் தம் கஷ்டத்தை யெல்லாம் சமர்ப்பித்து விட்டு, சென்னை திரும்பி வந்து, தலைவரின் உத்தரவுப்படி செயல்பட ஆரம்பித்து விட்டார்.

1967-ம் வருட தேர்தலில் காங்கிரசுடன் கூட்டு சேரலாம் என்று வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிஸ்ட் கட்சியும் விரும்பின. இது சம்பந்தமாக காங்கிரசிலிருந்து அழைப்பு வரும் என்று 1966-ம் வருடம் அக்டோபர் வரை அந்த இரு கட்சிகளும் பொறுத்திருந்தன. கூட்டு சேர வேண்டும் என்று 1966 ஜனவரியி லிருந்து நான் திரு. காமராஜிடம் வலியுறுத்தி வாதாடினேன். யுத்தக் களத்தில் தனித்து நிற்பது விவேகமல்ல என்று கூறினேன். ஆனால், அது கேளாச் செவிகளில் விழுந்து விட்டது. அதன் விளைவாக 1967-ம் தேர்தலில் காங்கிரசின் அணியிலே இருந்திருக்க வேண்டிய வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிஸ்ட் கட்சியும் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்ட நிலை ஏற்பட்டது.

1967 தேர்தலில் காங்கிரசுக்கு 40 சதவிகிதம் வாக்குகள் கிடைத்தன என்பதையும், தி. மு. க. - சுதந்திரா - முஸ்லிம் லீக்- இடது கம்யூனிஸ்ட் கட்சி கூட்டணிக்கு 42 சதவிகிதம் வாக்குகள் மட்டுமே கிடைத்தன என்பதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டால், காங்கிரஸ் கூட்டணி அமைத்திருந்தால் வெற்றி வாய்ப்பு எவ்வளவு பிரகாசமாக இருந்திருக்கும் என்பது தெளிவாக விளங்கும். தலைவர்களின் தவறான முடிவுகள்தான் தோல்விக்குக் காரணம் என்பதை இன்றும் அவர்கள் ஏற்றுக் கொண்ட பாடில்லை.

அரசியல் தலைமையை
மாற்ற உறுதி

1967-ம் வருட தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, திரு. பக்தவத்ஸலம் அவர்களின் அரசியல் சிந்தனையில் திருப்பம் ஏற்பட்டது. தமிழ்நாட்டில் அரசியல் தலைமையை மாற்றாத வரையில் ஒன்றும் செய்ய முடியாது என்ற நிலைக்கு அவர் வந்து விட்டார்.

அதற்கான ஆயத்தங்களில் அவர் தீவிரமாக ஈடுபட்டார். பிரதேச காங்கிரஸ் கமிட்டியில் பெரும்பான்மை ஆதரவைப் பெற வேலை செய்தார். அதன் விளைவாக மாகாண காங்கிரஸ் கமிட்டி, பல ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகள் ஆகியவற்றில் சாதகமான நிலை ஏற்பட்டது.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியாரைத் தேர்ந்தெடுக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், கடைசி நிமிடத்தில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திரு. அவிநாசிலிங்கம் அவர்களிடம் பேசி தான் தலைவராக வரும் சூழ்நிலை அமைத்துக்கொண்டார்.

திரு. பக்தவத்ஸலம் அவர்கள் செய்த முயற்சிகள், ஏற்பாடுகள் ஆகியவை பற்றி நன்கு அறிந்திராத திரு. சுப்பிரமணியம் காரியக் கமிட்டிக்கு உறுப்பினர்களை நியமிக்கும்போதுகூட திரு. பக்தவத்ஸலத்தை ஆலோசனை கலக்காமல், திரு. பக்தவத்ஸலம் முயற்சியால் கிடைத்திருந்த வெற்றியைத் தியாகம் செய்து, அகில இந்திய காங்கிரஸ் தலைவரின் உத்தரவுப்படி காரியக்கமிட்டியை அமைத்து விட்டார்!

இதன் விளைவாக, திரு. பக்தவத்ஸலம் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின.

மதுரை சந்திப்பும், 'தலைவரி'ன் கொதிப்பும்

1968-ம் ஆண்டில் மதுரை நகரில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்ட மொன்று நடந்தது. திரு. பக்தவத்ஸலம் அவர்கள் அக்கூட்டத் திற்குத் தலைமை தாங்கினார். திரு. ஏ. பி. சி. வீரபாகு, திரு. கே. டி. கோசல்ராம், நான் உள்பட பலர் அதில் கலந்துகொண் டோம். பழம்பெரும் காங்கிரஸ் ஊழியர்கள் பலர் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்கள்.

திரு. காமராஜின் சர்வாதிகாரத்தை எப்படி எதிர்ப்பது என்று அக்கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது. மும்மொழிக் கொள்கையை ஆதரித்துப் பிரசாரம் செய்வது என்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அதன் பயனாக, திரு. பக்தவத்ஸலம், திரு. கோசல்ராம், மற்றும் நான் ஆகிய மூவரையும் கட்சியிலிருந்து சஸ்பெண்ட் செய்ய வேண்டும் என்று அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் திரு. காமராஜ் கோரினார். திரு. காமராஜின் மொழிக் கொள்கை ஈ. வெ. ரா., அண்ணா ஆகியவர்களின் சிந்தனையையே ஒத்திருந்தது.

பின்னர் திரு. நிஜலிங்கப்பா சென்னை வந்தார். என்னையும், திரு. கோசல்ராமையும் சந்தித்துப் பேசினார். ''இப்போது திரு. காமராஜ் மனம் நொந்திருக்கிறார். நீங்கள் தயவுசெய்து அமைதியாக இருங்கள்'' என்று எங்களிடம் கூறிச் சென்றார். அத்துடன் அந்த விஷயத்திற்குத் தற்காலிகமாக முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

இந்திரா காந்தி தலைமையை ஏற்றார்

மீண்டும், அகில இந்திய அளவில் காங்கிரஸ் கட்சியில் பிளவு ஏற்பட்டபோது தமிழகத்தில் பலர் எங்கே போவது என்று நிச்சய மில்லாதிருந்த சமயத்தில், பிரதமர் இந்திரா காந்தியின் பக்கமிருக்க வேண்டும் என்று திரு. பக்தவத்ஸலம் அவர்கள்தான் உறுதியாக இருந்தார்.

1969-ல் திரு. பக்தவத்ஸலம் தள்ளாத வயதில் தமிழகம் எங்கும் சுற்றுப்பயணம் செய்து திருமதி. இந்திரா காந்திக்கு ஆதர வாகப் பல அகில இந்திய காங்கிரஸ் உறுப்பினர்களைத் திரட்டினார்.

ஆனால், 1971-ம் வருட இடைக்காலப் பொதுத் தேர்தலில் நாடு முழுவதும் இவருடைய கட்சி வெற்றி அடைந்த பின்னர், ஆரம்பத்தில் மதில்மேல் பூனையாக இருந்தவர்கள் பயன் பெற்றார்கள்.

திருமதி. இந்திரா காந்தியை எதிர்த்துச் சரமகவி பாடிக் கொண்டிருந்தவர்களில் பலர் இன்று இந்திரா காங்கிரசின் பலத்த தூண்களாக இருப்பதாக பாவனை செய்துகொண்டு, திரு. பக்தவத்ஸலம் அவர்களைக்கூட எள்ளி நகையாடிப் பேசுகிறார்கள்.

தள்ளாத வயதிலும்
முயற்சி தொடருகிறது

திரு. பக்தவத்ஸலம் அவர்களின் திறமை, உழைப்பு, அனுபவம், ஆற்றல் ஆகியவற்றை டில்லி பூரணமாக உணர்ந்து கொள்ளவில்லை என்றாலும், தமிழகத்தில் நீண்ட காலமாகத் தாம் இருந்த பெரும் கட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்று அவர் மேலும் முயன்று கொண்டிருக்கிறார். இந்த முயற்சி எப்படி முடிவடையும் என்பதைக் காலம்தான் சொல்ல வேண்டும்.

திரு. பக்தவத்ஸலம் அவர்களின் தந்தையார் இறந்தபோது அவருக்குச் சுமார் நூறு ஏக்கர் நிலம் இருந்தது. அந்த நிலத்தில் பெரும்பகுதியை அவர் விற்று விட்டார். பூர்வீகமாகக் கிடைத்த பூமியைக்கூட அவருக்குப் பாதுகாத்துக் கொள்ளத் தெரியவில்லை. இன்று ஸ்டாண்டர்ட் அளவில் கூட அவருக்கு நிலமில்லை. அவருடைய மருமகன் திரு. வரதப்பன் அவர்களுக்கு சுமார் ஆயிரம் ஏக்கர் பூமி இருந்தது. அந்த நிலம் அனைத்தும் விற்கப்பட்டு விட்டது என்று கருதுகிறேன்.

இயற்கையின் சோதனை, 1972லிருந்து அவருக்குக் கண் பார்வை சிறிது குறைந்து சிரமம் கொடுத்து வருவதால், பார்லிமெண்ட் தேர்தலில் நின்றிருக்க வேண்டிய அவர் தம் கட்சிக்காக முழு உழைப்பையும் அளித்து வருகிறார்.

என்னைப் பொறுத்த வரையில், அவர் பார்லிமெண்ட் தேர்தலில் நின்றிருந்தால், இந்தியாவின் பொறுப்புள்ள அமைச்சராக ஆகியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அவரைத் தேடி கவர்னர் பதவி பலமுறை வந்தபோது, 'நான் பென்ஷன் வாதி அல்ல, அரசியல் வாதி' என்று சொல்லி அதை ஏற்காமல் விட்டு விட்டார்.

பொது வாழ்வில் இந்த அளவு திறமையும், திட உள்ளமும், விடா முயற்சியும் உள்ளவர்களைக் காண்பது அரிது.

இவருடைய அரசியல் வாழ்க்கை எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் பெருமை உடையது.

நிறைகுணங்களுக்கு இருப்பிடமானவர்

கே. கமலக்கண்ணன்
சென்னை மாநகர முன்னாள் மேயர்

தமிழ்நாட்டின் முன்னணித் தலைவர்களில் முதல்வரும், பாரதத் தாயின் புதல்வரும், முன்னாள் முதலமைச்சரும், பழம்பெரும் தேச பக்தருமான உயர்திரு. எம். பக்தவத்சலம் அவர்களின் 76வது பிறந்த நாளில், அவரைப் பாராட்டித் தொகுப்பு நூல் தயாரிக்கும் பணி சாலச் சிறந்ததாகும். அவர் பணிகளைத் தொகுக்கும் நூலில் விடுதலை இயக்கத்தின் வீர வரலாறும் தேனாகச் சுரந்து நிற்கும்.

பெரியவர் பக்தவத்சலம் அவர்களோடு ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளாக அவர்களைப் பற்றித் தெரிந்து புரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கிருந்தது, என் வாழ்வில் ஒரு பாக்கியமாகும். காங்கிரஸ் கட்சியில் ஒரு எளிய ஊழியனாக இருந்து, நெடுங்காலமாகப் பணியாற்றி வருவதும் அதற்குப் பெரிய உதவியாக இருந்தது.

பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் நிறைகுணங்களுக்கு இருப்பிடமானவர். அன்பு, அடக்கம், அறிவு, ஆற்றல், ஆழ்ந்த கடவுள் பக்தி உடையவர். பரம்பரையாக வந்த தேச பக்தராதலால் அரசியலில் ஒழுக்கமும், பிறர்க்கு உதவும் பரோபகார சிந்தையும் இவரிடத்து குடி கொண்டிருக்கின்றன. 'எண்ணித்துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு' எனும் குறள் மொழிக்கேற்ப எச்செயலையும் ஆராய்ந்து செய்யும் சிறந்த திறமைசாலியாவார்.

1961 ம் ஆண்டு ஒரு சமயம் இப்பெரியார் இல்லத்திற்குச் சென்றிருந்தபோது 'உங்களை வடபழநி ஆண்டவர் கோயிலுக்கு ஓர் அறங்காவலராக நியமிக்க உத்தேசம், உங்களுக்குச் சம்மதம்தானா?' என்று கேட்டார். அது கேட்டு நான் பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல் மகிழ்ச்சி அடைந்தேன். அவர்களுடைய அன்புக் கட்டளைப்படி பத்து ஆண்டுகள் பணிபுரியும் வாய்ப்பு பெற்றேன். இத்தகைய நல்ல வாய்ப்பை நல்கிய அத்தலைவருக்கு எந்நாளும் நன்றி பாராட்டக் கடமைப் பட்டவன் நான்.

திரு. பக்தவத்ஸலம் அவர்கள் அமைச்சர் பதவியில் அடக்கமாக இருந்து கொண்டு, அவ்வப்போது மக்களின் குறை கேட்டு, தக்கவர்களின் தகுதியறிந்து பல ஆண்டுகள் அப்பதவியில் சிறப்பாகப் பணியாற்றினார். பதவியால் பெருந்தகை பக்தவத்சலம் அவர்கள் பெருமையுற்றார் என்பதைவிட, அவரால் பதவிதான் பெருமை பெற்றது என்பது மிகப் பொருத்தமாகும்.

ஐயா அவர்கள் தமிழ் நூல்களில் நல்ல பற்றுடையவராவர். குறிப்பாகப் பெரிய புராணம் முதலிய சமய இலக்கியங்களில் தேர்ந்தவர். கண்டனங்கள், கடுமையான வசைச்சொற்கள் முதலானவற்றை அவர் பேச்சில் காணவே இயலாது. கருத்துக்களைத் தொடர்பாகவும், அமைதியாகவும், மழைத்துளிகள் விழுவதைப் போல் மெதுவாகவும், இதமாகவும் குழைத்துப் பேசும் இயல்பு அவருக்கே உரிய தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இவர் எழுதியுள்ள 'எனது நினைவுகள்' என்ற இவரது வாழ்க்கை வரலாற்று நூலை ஆர்வத்தோடு மூன்று முறை நான் படித்திருக்கிறேன். அந்நூலில் அவர்கள் குறிப்பிட்டுள்ள சில பல நிகழ்ச்சிகள், அடைந்துள்ள அல்லல்கள், மேற்கொண்ட தியாகங்கள் என் மனத்தை நீராய் உருக்கின.

தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு பெரிய கிளர்ச்சியாக வடிவெடுத்த போது அதைத் திறமையாகச் சமாளித்த விதம் என்றும் பாராட்டுக்குரியதாகும். அரசியல் வாழ்விலே பிறருக்கு விட்டுக் கொடுக்குந் தன்மையோடு அவர்களுக்கு ஒத்துழைப்பு தரும் உயர்ந்த எண்ணமும் உடையவர். இவருடைய அரசியல் வாழ்க்கை எல்லோருக்கும் வழிகாட்டியாக விளங்கும் பெருமை உடையதாகும். இருபத்தைந்து ஆண்டுகள் அமைச்சர் பதவியில் இருந்ததால் பழுத்த அனுபவத்தை அழுத்தமாய்ப் பெற்றிருக்கிறார். அதனால் பெருந்தலைவராக விளங்குகிறார்கள். ஒரு சமயம் குமுதம் இதழில் இவரைப்பற்றிய கார்ட்டூன் ஒன்றில் இவர் அமர்ந்திருந்த நாற்காலிப்படத்தைச் சுட்டிக்காட்டி அது வாடாத பதவி என்று எழுதியிருந்தது எனக்கு இன்னும் ஞாபகத்தில் இருக்கிறது.

அறநிலையத்துறையிலும், பொதுநலத்துறையிலும் குறிப்பாக இவர் செய்த சேவை பெரும் புகழுக்குரியது. தமிழ்நாட்டில் சமயத்துறையின் மறுமலர்ச்சிக்கு அடிகோலிய மகத்தான மனிதர் இவர் தான் என்று பலரும் வியந்து பாராட்டுகிறார்கள்.

சமயத்திற்கும், சமூகத்திற்கும், அரசியலுக்கும், அருங்கலைக்கும் அரிய வகையில் தொண்டாற்றிய இந்த அறிஞர் பெருமகனார் மேலும் பல்லாண்டு காலம் இனிது வாழ்க வாழ்க, அவர்புகழ் மேலும் வளர்க வளர்க என ஆண்டவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

சிவ சிவ

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
(தஞ்சை ஜில்லா)

வாழ்த்துரை

பாரத தேசத்துப் பிரதமர்கள் வரிசையில் எல்லாருடைய நெஞ்சிலும் நிற்பவர் நேருஜி ஆவர். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நிரலில் பல ஆண்டுகள் துணை வேந்தராக இருந்தவர் அறிஞர் லட்சுமணசாமி முதலியார். அங்ஙனமே சென்னை அரசாங்க முதல் அமைச்சர்களில் பல தடவை அமைச்சராக இருந்தவர் திரு. பக்தவத்சலம் ஆவர். இவர் மிகப் பழம்பெரும் தேச பக்தர் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் ஆவர். திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் பண்டு தொண்டை நாட்டில் மிகச் சிறந்த தேச பக்தராக இருந்தார். அவருடைய நெருங்கிய உறவினராகவும், அவருடன் இருந்து தேசப்பணியாற்றியவராகவும் திகழ்ந்தமையால் உறைப்புடைய தேசத்தொண்டு செய்வதில் முன்னணியில் நிற்பவர் ஆனார்.

இவர் சென்னை அரசாங்கத்தின் முதல்வராக இருந்தபொழுது அறநிலையப் பாதுகாப்புத்துறையில் சிறந்த சேவை செய்திருக்கிறார். கோயில்களும், அறநிலையங்களும் இவர் காலத்தில் சிறப்புற்றன. இவர்களுடைய சேவையைப் பாராட்டித் தருமபுர ஆதீன 25-வது குருமகா சன்னிதானம் ''கயிலைக்குருமணி'' அவர்களால் ''நல்லறங் காவலர்'' என்று பட்டமளிக்கப்பெற்றவர். ''இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்'' என்ற குறட்கேற்பத் தகுந்த சிறந்த அலுவலர்களை நியமித்து அரசாங்கத்தைச் செவ்வனே நடத்திச் சென்னை அரசாங்கத்தைச் சிறப்புடையதாக ஆக்கிய பெருமை திரு. பக்தவத்சலம் அவர்களையே சாரும்.

தொண்டை நன்னாடு சான்றோருடையது என்பர். சேக்கிழார் போன்று சிறந்த முறையில் சைவ சமயத்துக்குச் சேவை செய்த சான்றோர் திரு. பக்தவத்சலம் ஆவர். இவர் பல்லாண்டு பல்லாண்டு பாரத தேசத்துக்கும், சிறப்பாகத் தமிழ்நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் பொது நலச்சேவை செய்து சிறந்து வாழ்க என்று செந்திலாண்டவன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

சிவசிவ

சிவமயம்

திருவம்பலம் உடையார் துணை

தொண்டை மண்டலாதீனம்
மெய்கண்டதேவர் சந்தான
ஞானபீடத்துக் குருமஹா
சந்நிதானம்

காஞ்சிபுரம்-2
(செங்கற்பட்டு மாவட்டம்)

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய ஸ்வாமிகள்

சாந்த சீலர்

திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள் தமிழக முதலமைச்சர் ஆகியதன் காரணம் அனைவர்க்கும் தெரியும். பெரியவர் சி. என். முத்துரங்க முதலியார் கொடாது கொடுத்த பயிற்சியும், அவரது நெறிவழாத உயரிய பண்புரிமையும், அக்காலத்தில் இருந்த நாட்டின் செம்மை நலமும், கட்டுப்பாட்டிற்குட்படும் மனநிலையும், மட்டுமரியாதிகளும், பெரியோர் பலர் துணைமையும், கல்வியும், அதற்குத் தக்க கருத்தும், நடத்தையும், பிற நலங்களும் நிறைந்த சூழ்நிலையில் வளர்ந்த பெரும் புண்ணியம் உடையவர் திரு பக்தவத்ஸலம் என்பது எல்லாரும் அறிந்த உண்மை.

தென்னாட்டு மன்னர் எனப் போற்றப் பெறும் பெருந்தகைமை வாய்ந்த ஸ்ரீனிவாஸையங்கார் காட்டிய வழியில் தப்பாது ஒழுகிய பெருமைக்குரிய பரம்பரையில் ஒருவர் இன்றும் உள்ளார் எனின், அவர் எவர் என்று எவரும் கேளாமலே அறியத் தக்கவர்; ஐம்பது ஆண்டு பொதுப்பணியாற்றியும் திருப்தி அடையாது, மேலும் பணிபுரிய வன்மையில்லையே என மதிக்கும் பெற்றியுற்ற நம் சாந்த சீலர் திரு பக்தவத்ஸலம் அவர்கள்.

இப்போது தமிழகத்திலே மிக முத்த தலைவர் சி. ஆர். ஒருவரே. அவருக்கு நல்ல துணையாக விளங்கியவர் இவ்விழாத் தலைவர். ஆட்சித்துறையை நோக்கி ஒருவரை மதிப்பது இயலாது. அவரவர் இயல்பை நோக்கி ஆய்தலே உண்மை முடிவைத் தோற்றும். அத்திறத்தில், இளமை முதல் குறிக்கோள் வழாது, நெறி தப்பாது, பொறுமை குறையாது, நல்லோர் எல்லோராலும் மிக மதிக்கப் பெற்று நன்கு வாழ்கின்றவர் இப்பழந் தலைவர். தேச பக்தியில் முன்னைப் பழம் பெருந்தலைமை இவர்க்கு உரியது என்பதில் யார்க்கும் எள்ளளவும் ஐயமில்லை. திரு முதலியார் அவர்கள் இனிது வாழ்க.

பிரமஸ்ரீ சே. ரா. பட்டாபிராமன் அவர்கள் தலைமையில் செயற்படும் குழுவை இனிது வாழ்த்தும் கடப்பாடு இத்தமிழகத்திற்கு உண்டு.

இக் குழுவினரும், இதன் தலைவரும் இனிது வாழ்க.

சிவம்

29—8—72

திருக்கயிலாய பரம்பரைத்
திருக்கோவலூராதீனம்
ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்,

சந்நிதி வீதி,
திருப்பாதிரிப் புலியூர்.

வாழ்த்துரை

பக்தவத்ஸலன்: திருமாலின் பல பெயர்களுள் ஒன்ருக விளங்குகின்றது. தன் பக்தர்களிடம் வாத்ஸல்யம் (மிகுந்த கருணை) உடையவன் என்பது அத்தொடரின் பொருள். நாட்டினிடமும், தான் கடைப்பிடிக்கும் இந்து சமயத்திடத்தும் கரைகாணுத பக்தி பூண்டு, தன் பணிகளிடத்தில் வாத்ஸல்யம் கொண்டு விளங்கும் நம் பக்தவத்ஸலஞர், இன்று எழுபத்தைந்தாண்டு இளைஞராகவும், பொன் விழாப் பூணும் தொண்டராகவும் விளங்குவதில் மகிழ்ச்சி கொள்ளுகிறேம்.

சமயப் பற்றும், நாட்டுப் பற்றுமே ஒவ்வொரு மனிதனுக்கும் இரு கண்கள் போல்வன. அவ்விரு பற்றுக்களோடு விளங்கும் நம் பிள்ளையவர்கள், நாட்டுத் தலைவர்கள் பலரோடு சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சுதந்திர வீரராய்த் திகழ்ந்ததோடு, சுதந்திர நாட்டில், அரும்பெரும் பணிகளை யேற்றுத் தீவிரமாகச் செயலாற்றிய செம்மலுமாவார். நம் தமிழ் மக்களின் வாழ்வு வளம் பெறவென்றே, அமைச்சராகவும், முதலமைச்சராகவும் பொறுப்பேற்ருர். ஆக்கம் பலவும் நம் தமிழர் அடையப் பல பணிகளையும் மேற்கொண்டார்.

குறிப்பாக, நம் பிள்ளையவர்கள் ஆழ்ந்த சமயப்பற்று காரணமாகப் பல திருக்கோயில்கள் செம்மையாக நடக்க வழிசெய்தார். தெய்வத் தானங்கள் பலவற்றில், சிறப்பும் பூசனையும் செம்மையாக நடைபெற வழி வகுத்துத் தந்தார். பற்பல சிறப்புக்களிலும் நேரிற் சென்று கலந்துகொண்டு அவற்றைச் சீரிய முறையில் நடத்திக் கொடுத்து, யாவருக்கும் வழிகாட்டினுர். சமயத் தலைவர் யாவரும் அவரை உளமாரப் போற்றியமையே இதற்குச் சான்ருகும்.

பிள்ளையவர்கள் ஐம்பதாண்டு, நாட்டுப் பணியில் ஈடுபட்டிருக்கிருர்கள். அதனுல் தமிழ் மக்களின் பேரன்புக்குப் பாத்திரராகி இன்ப வாழ்வு வாழ்கிருர்கள். 'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டு விட்டால், இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்னும் பொன்மொழி ஒருநாளும் பொய்யாகாது.

அந்த அன்பர் பணிமேற்கொண்டு, இன்ப நிலை எய்திப் பல்லாண்டு வாழ்க என எம் இறை முருகன் திருவடிகளைப் போற்றிப் பிள்ளையவர்களை வாழ்த்துகின்றேம்.

இங்ஙனம்,
ஸ்ரீமத் - சுவாமிகள்
ஏழாம் பட்டம்.
22 - 8 - 1972

உ

திருச்சிற்றம்பலம்

பகவான் யோகீஸ்வரர் ஸ்ரீலஸ்ரீ
சிவானந்த மவுனகுரு சுவாமிகள்
திருப்பணி தொண்டர்,
சைவ சமரச சன்மார்க்க சங்கப்
பெரும் தலைவர்

திருவலம்
(வடாற்காடு)

நலமுடன் வாழ்க

ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் வாழ்க! வாழ்க!

நல்ல அறம் தொண்டு நலமுடன் வாழ்க! வாழ்க!

அவர்கள் நாட்டின் முதலமைச்சராக இருந்த போது, திருவலத்தில் பெரும் செயலில் யாம் திருப்பணி செய்து வந்த சமயத்தில் அதனைக் கேள்விப்பட்டு அந்தப் பெரும் தொண்டில் அவ்வப்போது கலந்துகொண்டு சிறப்புடன் எங்களுக்குத் தொண்டாற்றிக் கொடுத்தார். அவரது படங்களும் எங்கள் ஆசிரமத்தில் உண்டு.

சென்னை கந்தகோட்டத்தில் யாம் வெள்ளி ரதம் செய்தபோது வெள்ளி ரத உண்டியை அவர்கள் திறந்து வைத்தார். அந்த நற்தொண்டில் நலமுடன் அவ்வப்போது வந்து எம்மிடம் எவ்வளவு பணம் கொடுத்தாலும் நல்ல முறையில் திருப்பணி செய்வார். உலக மக்களுக்கு உற்சாகப் படுத்திவைத்தார். அதனை இன்றும் நாங்கள் மறக்கவில்லை.

அவர்களது நற்தொண்டுகளை ஏட்டில் எழுத அடங்காது. அவர்கள் நலமுடன் இருக்கும்படி ஆசீர்வதிக்கிறேன்.

> திரு. பக்தவத்ஸலம் அவர்களின் நிர்வாகத் திறமை நாடறிந்த ஒன்று ஆகும்.

நிறைகுடம்

ஜி. பூவராகன் எம். பி.
தமிழக முன்னாள் அமைச்சர்

தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் ஐம்பது ஆண்டு பொதுப்பணிகளை எடுத்துக்கூறும் வகையில் ஒரு தொகுப்பு நூலினைத் தயாரிக்கும் முயற்சியை நான் பாராட்டு கின்றேன்.

திரு. பக்தவத்ஸலம் அவர்களுடன் சக அமைச்சராக நான் பணியாற்றி யிருக்கிறேன். பின்னர் அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது அவரது அமைச்சரவையில் இருந்திருக்கிறேன், நான் ஜூனியர் என்று கருதாமல் பல முக்கியமான விஷயங்களை அவர் என்னுடன் கலந்து பேசுவார். கருத்து வேற்றுமைகள் என்று தோன்றக்கூடிய நிலையில், விஷயங்களை அவரிடம் விளக்கினால் ஒத்துக் கொள்வார். அவருடைய மனத்தில் ஒரு செயல் சரியானது என்று நிர்ணயமாகி விட்டால், பின்னர் அந்தச் செயலுக்கு எதிர்ப்பு ஏற் பட்டாலும் அது பற்றிக் கவலைப்படாமல் காரியமாற்றுவார்.

திரு. பக்தவத்ஸலம் அவர்களின் நிர்வாகத் திறமை நாடறிந்த ஒன்று ஆகும். அவரிடம் செல்லும் 'பைல்'களை உடனுக்குடன் பார்த்துப் பைசல் செய்துவிடுவார். அவர் மேஜையில் பைல்கள் ஒருபோதும் தேங்கிக் கிடந்தது கிடையாது. ஒரு முறை, ஒரு விபத்தில் கையில் அடிபட்டு அவர் மருத்துவ மனையில் இருக்க நேரிட்டது. அவருடைய கைக்குக் கட்டு போடப்பட்டிருந்தது. அந்த நிலையிலும் பைல்கள் தேங்க அவர் விடவில்லை. சில பைல்களைச் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பார்த்து முடிவு செய்ய ஏற்பாடு வகுத்தார்.

பின் தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்காகவும், கோயில் களின் திருப்பணிக்காகவும் தயங்காமல் உதவி செய்வார். அவர் முதலமைச்சராக இருந்த போதும், நிதி அமைச்சராக இருந்த

போதும், எனது விருத்தாசலம் தொகுதியில் அரசினர் கல்லூரி, அரசினர் அச்சகம், சாலை அபிவிருத்திப் பணிகள் போன்றவற்றுக்கு மகிழ்ச்சியுடன் அனுமதி அளித்தார்.

முதலமைச்சராக அவர் இருந்தபோது அவரைப் பார்ப்பதில் சிரமம் இருந்தது இல்லை. ஓய்வாக இருக்கிறார் என்றால், அவரை உடனடியாகப் பார்த்து விடலாம். இரவு, பகல், காலை என்று நேரம் நிர்ணயிக்கப்பட்டது கிடையாது. அரசாங்க நிகழ்ச்சிகளிலோ, அல்லது பொது நிகழ்ச்சிகளிலோ அவர் கண்டிப்பாகக் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து விடுவார். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் விவாதங்களுக்கு ஆணித்தரமாகப் பதில் தருவார். நல்ல நினைவாற்றலோடு பல விளக்கங்களை அளிப்பார்.

சுற்றுப்பயணம் செய்கின்ற நேரங்களில் உணவு விஷயத்தில் கட்டுப்பாடு காட்ட மாட்டார். நிகழ்ச்சி சிறியதோ பெரியதோ எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளும் பழக்கம் உண்டு. தனி வசதிகள் எவற்றையும் கோர மாட்டார்.

1962-ம் ஆண்டிலிருந்து 1967-ம் ஆண்டு வரையில் தமிழ் நாட்டில் பொறுப்பில் இருந்த அமைச்சரவை சிறியதாகவும், கட்டுக் கோப்புடன் கூடியதாகவும், ஒருமனத்துடன் இணைந்து செயல்படுவதாகவும் அமைந்திருந்தது. அமைச்சர்களிடையே கருத்து வேற்றுமைகள் முற்றி சந்திக்கு வந்ததில்லை. அமைச்சர்கள் முரண்பட்ட அறிக்கைகளை விடுத்ததில்லை. Team spirit என்று ஆங்கிலத்தில் கூறுவார்களே, அத்தகைய குழு உணர்வுடன் நாங்கள் அனைவரும் செயல்பட்டோம். இதில் பக்தவத்ஸலம் அவர்களின் பங்கு கணிசமானது என்பதில் ஐயமில்லை.

1967-ல் காங்கிரஸ் தோல்வியடைந்ததற்கு இவர்தான் காரணம் என்று காங்கிரஸ் ஊழியர்களில் சிலர் கருதினர். ஆனால், 76-வது வயதில் அடியெடுத்து வைத்துள்ள இந்த வயதிலும் அயராது பல ஊர்களுக்குச் சுற்றுப்பயணம் செய்து, அவ்வப்போது ஆளுங்கட்சி பற்றிய ஆக்க பூர்வமான குற்றச்சாட்டுக்களை எடுத்துரைத்து, ஓய்வு தேடாமல் பணியாற்றும் இந்த நிலையில், காங்கிரஸ் ஊழியர்களின் அந்தப் புகார் நீங்கிவிட்டது என்றே கூறலாம். தமிழக மக்களிடையே ஒரு நிரந்தரமான இடத்தைப் பெற்றுவிட்ட நிலையில் அவரது பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. அவரது சுறுசுறுப்பு வியப்பைத் தருவதாக உள்ளது.

திரு. பக்தவத்ஸலம் அவர்கள் நிறைகுடமாக வாழ்கின்றார். அவர் வாழ்க! அவர் புகழ் வாழ்க!

1967-ல் அவரைப் புரிந்து கொள்ளாததால் வந்த விளைவுகளை இப்போது பார்க்கிறோம்.

எளிமை மிக்க அன்புள்ளம்

பி. ஸி. கல்யாணசுந்தரம்

கவிஞன் உணர்ச்சி வசப்படுபவன் என்பது உண்மைதான்; ஆனால் உணர்ச்சிகள் அவனது புகழுக்காகவோ, இகழுக்காகவோ இருக்குமேயானால் நாம் விரும்புவதில்லை. கவிஞன் குறை உடையவன் என்பார்கள்; ஆனால் அவனது கவிதையில் குறையிருக்குமேயானால் கவிஞனை மதிப்பதில்லை. இவைகளுக்கு எதிர்மாறாக இருப்போரே அரசியல்வாதிகள் என்பர் சிலர். குறைகள் மட்டுமே கொண்டு, புகழை மட்டுமே விரும்பி வாழ்பவர்கள் அவர்கள் என்பர். இது இன்றைக்கு இருக்கும் நிலை.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளாக அரசியல் வாழ்வில் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கும் திரு. பக்தவத்சலம் அவர்கள் தன் வாழ்வினை விளம்பரப்படுத்திக் கொள்ளாமலே இருந்து விட்டமையால் அரசியல் வாதிகளில் நேர்மையானவரே இல்லையென்றதொரு முடிவுக்கு வந்து விட்டார்கள் போலும்.

இருபத்தைந்து ஆண்டுகள் அமைச்சர் பொறுப்பிலிருந்து அரிய சாதனைகள் பல நாட்டுக்கும் மொழிக்கும் செய்திருந்தும் அதைப் பற்றியெல்லாம் பெருமைப்பட்டுக் கொள்ளாமல் அமைதியாக இருக்கும் அந்த நல்லவரின் நண்பன் என்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

கட்சித் தொடர்பிலிருந்து எந்தச் சோதனையிலும் விடுபடாமல் கட்டுப்பட்டு நடந்து கட்சி வரலாற்றில் ஒரு வெற்றி முரசாக விளங்குபவர். அவரது போராட்டங்கள் 1930-ல் இருந்து துவங்கின. சட்டக் கல்லூரியின் மாணவராக இருந்தபோதுதான் முதன் முதலாகப் போராட்டத்தில் கலந்து கொண்டார் என்பதை ஒருமுறை அவரது பேச்சில் தெரிவித்தார்.

அமைச்சராய் இருந்த காலங்களில் அவரது நிர்வாகத் திறமையைப் பாராட்டாதவரே இல்லையெனலாம். அவரது காலத்தில் பைல்கள் (Files) வெகுவேகமாகச் செயல்பட்டன. ஐம்பதாண்டு கட்சியனுபவத்தில் மக்களுக்கு உதவா நாளெல்லாம் 'பிறவா நாளே' போல் அவர் கருதியது எனக்கு நன்றாகத் தெரியும்.

காந்தியின் கொள்கைகளைப் புரிந்து கொண்டு அப்போராட்டம் தேவையானதா என்பதை ஆராய்ந்து அவர் செயலாற்றிய விதம் எனக்கு வியப்பை அளித்தது. அவரோடு நெருங்கிப் பழகிய போதெல்லாம் இவ்வளவு எளிமையோடு தொண்டாற்றும் அன்புள்ளம் மக்களுக்குப் புரிய வேண்டுமே என எதிர்பார்ப்பேன். 1967-ல் அவரைப் புரிந்து கொள்ளாததால் வந்த விளைவுகளை இப்போது பார்க்கிறோம்.

தெய்வீகச் சபையை நிறுவி பக்தியைப் பரப்பினர். தேசபக்தி தெய்வபக்தி இரண்டுமே அவருக்கு இரண்டு கண்கள். அறநிலைய அமைச்சராகப் பொறுப்பேற்றபோது பொருளில்லாப் புண்ணிய இடங்களுக்குப் பொருளுதவினர், இந்து அறநிலைய அமைச்சராக வருவோர்க்குரிய இலக்கணத்தைச் சொல்லியதன் மூலம் அவரை நாம் மிக எளிதாகப் புரிந்து கொள்ளலாம்.

> ''அறநிலையத் துறையை இயக்குவதற்குப் பொறுப்பு வகிப்பவர்கள் நம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபட வேண்டும். கண்காட்சியைத் திறந்து வைப்பதும், கோயில் திருப்பணியைத் தொடங்கி வைப்பதும் ஒரே மாதிரியான பணிகள் அல்ல. மன ஈடுபாடும், ஆழ்ந்த நம்பிக்கையும், நமது புராதனப் பண்பாட்டைப் பேணிக்காக்க வேண்டும் என்ற உறுதியும் உடையவர்கள் தான் கோயில் சம்பந்த மான நிர்வாகப் பொறுப்புகளை நடத்த முடியும்''

இதுபோன்ற அரிய கருத்துக்களை, கொள்கைகளை அகத்தே கொண்டிருந்த அவர் மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்று துணை மேயர் பதவி பெற்றார். துணை மேயர் சட்டம் இயற்றப்பட்டவுடன் இவரே துணை மேயரானர். துணை மேயர் சட்டம் இவரால் கொண்டு வரப்பட்டதேயாகும். அங்கு நடைபெற்ற முறைகேடுகளைக் கண்டித்து உறுப்பினர் பதவியிலிருந்தே விலகிவிட்டார். இதனை 'எனது நினைவுகள்' என்னும் நூலில் விளக்கமாக விளக்கியுள்ளமையும் சான்றுகக் கொள்ளலாம்.

மாணவர்கள் அரசியல் போராட்டங்களில் கலந்து கொண்டு படிப்பைப் பாழாக்கிக் கொள்ளலாகாது என்பதை உணராதார்க்கு அன்று சொன்னவை இன்று பலிப்பது கண்டு திரு. பக்தவத்சலம் சொன்ன படிப்பினை என்பதை ஒப்புக் கொள்கின்றனர். இங்ஙனம் மாணவர்க்காக, மொழிக்கொள்கையில் கூட தமிழ்நாட்டுக்காக மட்டுமே வாதாடி சட்டத்திருத்தம் கொண்டு வந்த பெருமை அன்னாரையே சாரும்.

நாடு, மொழி, காங்கிரஸ் மூன்றுக்காக மட்டுமே உழைத்து மனைவியின் நோயில் கூட சிரத்தை கொள்ளாது கட்சிப் பாசத்தை வளர்த்துக் கொண்ட நம் பெருந்தகை பல்லாண்டு வாழ, பெருஞ் சிறப்பு எய்த மனமார வாழ்த்துகிறேன்.



1964-ல் ''பக்தவத்ஸலம் வாழ்க்கை வரலாறு'' (திரு. கருப்பையா எழுதியது) நூலினை அன்றைய குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் வெளியிடுகின்றார்.

CONNEMARA PUBLIC LIBRARY
11 MAR 1973
MADRAS

புகுமுக வகுப்பில் தமிழில் கற்பிக்கும் திட்டம் வெற்றி பெற்றதற்கும் இவரேதான் காரணம் என்பதனை மறக்க லாகாது

அமைதியும் அமைச்சியலாற்றலும்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்,
(முன்னாள் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகம்)

திரு. பக்தவத்சலம் அவர்கள் ஏறக்குறையத் தொடர்ந்து அமைச்சராக விடுதலை ஊழியில் 1967 வரை தொண்டாற்றினார். குலோத்துங்கச் சோழன் (II) காலத்து அமைச்சரான சேக்கிழார் குடியில் வந்த பொருத்தம் ஒன்று உண்டு என்றாலும், அந்தக்குடிப் பெருமையால் அமைச்சரானார் என்று சொல்லுவதற்கு இல்லை. நல்ல மாணவராக விளங்கி அடியேனோடுதான் வக்கீலாக வெளி வந்தார். ஆனால் அவருடைய அம்மானாகிய திரு. முத்துரங்க முதலியாரின் நெருங்கிய தொடர்பால் இவர் உருவானவர். அந்தப் பெரியவர் வாழ்ந்த வரையிலும் இவர் அவருடைய நிழலைப்போலப் பெருந்தொண்டாற்றி வந்தார். இவர் திரு. கோபாலசாமி முதலி யாரின் மகளாரை மணந்தபின் இல்லற வாழ்க்கையை அந்த அம்மையார் உருவாக்கினார் என்று சொல்லலாம். அன்புக்கும் அமைதிக்கும் இருப்பிடமாகிய குடும்பச் சூழ்நிலை அன்பிற் பழுத்த காந்திய இயக்கப் போர் வீரரான இவரை உருவாக்கியது.

திரு. எஸ். சீநிவாச ஐயங்கார் சுயராச்சிய இயக்கத்தின் தென்னாட்டுத் தலைவரானபோது திரு. பக்தவத்சலம் அவர்களும், நானும் அவருடைய அன்பிற்கு உரியவரானோம். சென்னை நகராண்மைக் கழகத்தைச் சுயராச்சியக் கட்சி கைப்பற்றும் தொண்டில் திரு. பக்தவத்சலம் அவர்கள் திரு. முதலியார் அவர் களோடு வெற்றியோடு ஒத்துழைத்து வந்தார். வேறொரு கட்சியின் கோட்டையாக இருந்த சென்னையும், தமிழ்நாடும் காங்கிரஸ் கோட்டையாக மெல்ல மாறி வந்தன. திரு. வி. க., ஈ. வெ. ரா. முதலியவர்கள் விடுதலைப் போரில் காங்கிரசை வளர்த்த காலம் அது.

திரு. சத்தியமூர்த்தியின் வீரமுழக்கம் எங்கும் எதிரொலித்த காலம். நிர்மாணத் திட்டத்திலேயே முழுவதும் ஈடுபட்ட திரு. ராஜாஜி அவர்கள் பின் காங்கிரசின் முழுத் தலைமையையும் தென்னாட்டில் ஏற்று உப்புச் சத்தியாக்கிரகம் நடத்தித் தமிழ்நாட்டு மூலை முடுக்கில் எல்லாம் புத்துணர்ச்சி வெள்ளமாகப் பொங்கி வழியச் செய்தார். திரு. ராஜாஜியின் நம்பிக்கைக்கும் திரு. பக்தவத்சலம் உரியவரானார். சிறை செல்லும் வாழ்க்கை தொடங்கியது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, ஹரிஜன சங்கம் முதலியவற்றில் பொறுப்பேற்றுத் தொண்டாற்றி வந்தார்.

சென்னை நகராண்மைக் கழகத்தில் ஆல்டர்மென்களை முதல் முதல் தேர்ந்தெடுத்த பொழுது திரு. பக்தவத்சலமும் ஆல்டர்மான் ஆனார். நானும் அப்போது ஆல்டர்மானாக வந்தேன். ஆதலால் அவருடைய தொண்டைப்பற்றி நன்கறிவேன். காங்கிரஸ் சார்பாக சென்னை நகராண்மைக் கழகத்திலும், வெளியிலும் இருந்தவர் களிடம் ஊழல் எழாதபடி நடவடிக்கை நடத்தியதில், முதலிடம் பூண்டவர் திரு. பக்தவத்சலம் அவர்களே ஆவார். இதிலிருந்தே பொது வாழ்வு எப்படி அமைய வேண்டும் என விரும்பினார் என்பது நன்கு தெளிவாகிறது.

அப்போது நாடெங்கும் காங்கிரஸ் அமைச்சர் சபைகள் அமைக்கப்பெற்றன. சென்னை மாநிலக் கீழ்ச் சபை உறுப்பினராகி இவர் அமைச்சரின் சட்டசபைச் செயலாளரானதும், ஆல்டர்மான் பதவியைத் துறந்தார். அன்றிருந்து இன்று வரை அமைச்சியல் அறிவில் ஆழ்ந்து மிகச் சிறந்து விளங்குகின்றார். பல துறைகளிலும் அமைச்சராக விளங்கியதால் தமிழ்நாட்டின் அரசியல் துரைத்தனம் முதலியவற்றைப்பற்றி நேரிடையாக அறிந்திருந்ததால் சிக்கல்கள் எல்லாம் மிக எளிதில் சிக்கல் நீங்கித் தெளிவாயின. இதனால் அரசியல் கோப்புக்களைப் படித்து முடிவெடுப்பதை விளையாட்டே போல மிக விரைவில் மற்றவர் திகைக்கும்படி செய்து வந்தார். அஷ்டாவதானம்கூட இவர் செய்பவர் என்று சொல்லலாம். முன்னே சிலர் கூறுவனவற்றையும் மனத்தில் வாங்கிக் கொண்டு கோப்புக்களையும் படித்துக் கொண்டு முடிவுகளை எழுதிக் கொண்டே இருப்பார். முன்னிருந்து பேசுவோர் கூற்றைக் குறித்துக் கொள்ள வும் மாட்டார். ஆனால் அவற்றையும் மறவாது மனத்திலேயே வைத்திருந்து உடனுக்குடனே வேண்டுவன செய்வார். அவர்களும் எதிர்பாராத அளவுக்கு முடிவுகள் விரைவில் வெளிவரும். பலமுறை இந்த அஷ்டாவதானத்தைக் கண்டு நான் வியந்து நின்றதுண்டு.

சட்டசபைகளிலும் சலிக்காமல் எல்லாவற்றையும் உன்னிப்பாகக் கேட்டும் படித்தும் வரும் ஒரு சிலரில் இவர் முன் நிற்பவர் எனலாம். பெரிய பேச்சாளி அல்லவானாலும், ஆரவாரமின்றி எல்லாவற்றையும்

விளக்கக் கூடிய ஆற்றல் பெற்றுள்ளார். தலைவர்கள், கட்சிகள், நிலையங்கள், நிறுவனங்கள், அலுவலர்கள், அலுவல் துறைகள் — எல்லாம் இவருக்குத் தெள்ளத் தெளியத் தெரியும். அமைச்சராக வெற்றி பெற்றதன் நுட்பம் இவைகளே ஆகும். படபடப்பின்றி பழங்கண்ணோட்டத்தோடு அமைதியாகச் செயலாற்றுவதில் வல்லவர். அறிவின் பயனாக எழும் செயல்கள் அரசியற் சூழ்ச்சி போலவும் தோன்றுவது இதனாலேயே ஆம்.

விடுதலைப் போராட்டத்தை இடையே விட்டு விட்டோம். இரண்டாம் உலகப்போர் எழுந்ததும் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கியது. அமைச்சர் அவைகள் பதவி துறந்தன. தனியார் சத்தியாகிரகமும், ''இந்தியாவை விட்டு வெளியேறு'' என்ற முழக்கத்தோடு இந்தியா முழுவதும் பரவிய விடுதலைப் போராட்டமும் மும்முரமாயின. சிறைச்சாலையே தவச்சாலை யாயிற்று. திரு. பக்தவத்சலம் அதில் எல்லாம் முழுப் பங்கு கொண்டார். திரு. காமராசர் தலைமை ஏற்றார். விடுதலை பெற்றோம். தொடர்ந்து அமைச்சராக இருக்கும் வாய்ப்பு இவரொருவருக்கே கிடைத்தது எனலாம்.

தமிழில் கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர் இவர். தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தின் தலைமையை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்பினார். அதனால் இதனைப் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துக் களையும் ஆர்வத்தையும் நெருங்கி இருந்து காணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திரு. சி. சுப்பிரமணியம் அவர்களும் கல்வி அமைச்ச ராக இருந்தபோது ஒரு மூச்சாக இத்துறையில் பணியாற்றினார்கள். ஆனால் திரு. பக்தவத்சலம் அவர்களோ மேலே கூறிய கழகத்தின் கூட்டம் ஒவ்வொன்றுக்கும் நேரில் வந்து கலந்து கொண்டதை இங்கே குறிப்பிட வேண்டும். பல முறைகளில் நான் கேட்டுக் கொண்டபடி கல்வி இயக்குநர் முதலியவர்கள் வரும் வரையும்கூட இவர் காத்திருந்ததை நினைக்கும்போது அவருக்கிருந்த தமிழன்பும், பொறுமையும், அமைதியும் எவ்வளவு எவ்வளவு என்றே வியக்க வேண்டி யிருக்கிறது. முதலமைச்சராகப் பல தொல்லைகளுக்கிடையே யும் இப்படி ஈடுபட்டார் என்பதனை எண்ணும்போதுதான் இவர் பெருமை விளங்குகிறது.

பல்கலைக் கழகங்களில்-கல்லூரிகளில் தமிழிலே கற்கும் வாய்ப்பு களை மாணவர்கள் பெறவேண்டும் என்று கூறினால் மட்டும் போதாது என உணர்ந்தார். எப்போது அந்த வாய்ப்பினை மாணவர்கள் விரும்பினால் பெற முடியும்? ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழில் கற்க ஒவ்வொரு வகுப்பாவது புகுமுக நிலையில் இருக்க வேண்டும் என்றும், அப்படிப்பட்ட வகுப்புகளின் குறைந்த எண்ணிக்கை இருந்தாலும்

மானியம் உண்டு என்றும் வற்புறுத்திய பெருமை திரு. பக்தவத்சலத்தைச் சாரும். பின்னே, விஞ்ஞானத் துறையிலும் தமிழில் கற்பிக்கும் திட்டத்தை விரிவாக்கியபோது இத்தகைய வற்புறுத்தல் வாராது போகவே, விஞ்ஞானத்தைத் தமிழில் கற்கும் மாணவர் தொகை, கலேயைத் தமிழில் கற்கும் மாணவர் தொகை போல வரவும் இல்லே; வளரவும் இல்லே.

பல்கலேக் கழகங்களேப் பற்றியும் தெளிவான கருத்துக்கள் கொண்டவர் இவர். அண்ணுமலேப் பல்கலேக் கழகத்தில் தொண்டாற்றியபோதே இதனே நான் அறிந்திருந்தேன். ஆனுல் அப்போதே அதனேச் செயலில் உருவாக்காது விட்டனர். மதுரைப் பல்கலேக் கழகம் உருவானபோது இந்தக் கருத்துக்கள் உருவம் பெற்றன. 1965-ல் இவருடைய பிறந்த நாளன்று வாழ்த்தி வணங்கச் சென்றிருந்தேன். அமைதியாகக் கோப்புகளிடையே மூழ்கி இருந்த நிலேயிலேயே ''மதுரைப் பல்கலேக் கழகம் வருகிறது. அதற்கு நீங்கள் உதவ வேண்டும்'' என்ருர். நான் அதன் உட்பொருளே வாங்கிக் கொள்ளாமலே வந்துவிட்டேன். நான் துணே வேந்தனுக வேண்டும் என்ற அவர் கருத்தினேப் பின் அறிய முடிந்தபோது திடுக்கிட்டுப் போனேன். என்மேல் அவர் வைத்த நம்பிக்கையை என்னுல் நம்ப முடியவில்லே. திரு. சி. பி. இராமசாமி ஐயர் அவர்கள்தான் என்னிடத்திலேயே நான் நம்பிக்கை வைக்குமாறு செய்தவர். துணே வேந்தராகத் தொண்டாற்றுவதற்கு வேண்டியன எல்லாம் செய்து தந்தவர் திரு. பக்தவத்சலனுரே. மதுரைப் பல்கலேக் கழகம் இந்தியப் பல்கலேக் கழகங்களில் ஒரு சிறந்த இடத்தைத் தன் முதல் ஐந்தாண்டுகளுக்குள் பெற்றதென்ருல் அதற்கு இவர் எடுத்துக் கொண்ட முன் ஏற்பாடுகளே ஆகும். புகுமுக வகுப்பில் தமிழில் கற்பிக்கும் திட்டம் வெற்றி பெற்றதற்கும் இவரே காரணம் என்பதனேயும் மறத்தலாகாது. பல்கலேக் கழகத்தின் தன்னுரிமையில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ நுழையாது பாதுகாத்த பெருமை இவருக்கு உண்டு.

- **என் சிறு பிராயத்திலேயே சுவாமி விவேகானந்தரைப் பற்றிப் படித்துத் தெரிந்து கொண்டேன். அவரது தத்துவங்களும் உபதேசங்களும் என்னேப் பெரிதும் கவர்ந்தன.**

ஸ்தாபனம், தேசம், மக்கள் தொண்டு இவற்றையே என் கருத்தில் கொண்டிருக்கிறேன். என்னேப் பொறுத்தவரையில் என் வாழ்க்கையில் வேறு அக்கறை எதுவும் இல்லே!

— பக்தவத்ஸலம்.

சிக்கலான பல சந்தர்ப்பங்களில் சர்க்கசில் கம்பி மேல் குடையுடன் உஷாராக நடப்பதைப்போல் நடப்பவர்.

புரிந்து கொள்ள முடியாத புதிர்

கே. ஆர். கல்யாண ராமன்
வாலாஜா தீனபந்து ஆசிரமம்

திரு. பக்தவத்ஸலம் அவர்களது 50 ஆண்டு பொது வாழ்க்கையில் சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அவரை நன்கறிவேன். அவர் பல பதவிகளைப் பெற்று நிர்வாகம் நடத்தியபோது பல சந்தர்ப்பங்களில் அவரைச் சந்தித்துப் பேசி பல அனுபவங்களைப் பெற்றிருக்கிறேன். அவர் புரிந்து கொள்ள முடியாத புதிராகவே இருந்திருக்கிறார். கடல் நீராழத்தைக் கண்டாலும், பக்தவத்ஸலம் அவர்களின் நெஞ்சாழத்தைக் காணவே முடியாது. சிக்கலான பல சந்தர்ப்பங்களில் சர்க்கசில் கம்பி மேல் குடையுடன் உஷாராக நடப்பதைப்போல் நடப்பவர் எனலாம். என் அனுபவங்களில் சில நிகழ்ச்சிகளை உதாரணத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

(1) 1935-ல் அவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி உபதலைவர். நான் இராணிப்பேட்டையில் ஜில்லா போர்டு தேர்தலில் கடுமையான போட்டியில் காங்கிரஸ் அபேட்சகராக நிறுத்தப்பட்டு, மிகவும் கஷ்டத்துடன் வேலை செய்து வந்தேன். திரு. பக்தவத்ஸலம் அவர்களை நேரில் சந்தித்து அவர் உதவியைக் கேளுங்கள் என்று, யாரோ எனக்கு யோசனை கூறினார்கள். அதன்படி நான் சென்னை சென்று தமிழ்நாடு காங்கிரஸ் அலுவலகத்தில் அவரைச் சந்தித்து, எனக்கு உதவுமாறு வேண்டினேன். என்ன உதவி வேண்டுமென்றார். ஒரு கார் கொடுத்தால் அதுவே பேருதவியாக இருக்கும் என்றேன். தேர்தல் நிலவரம், என் வெற்றி வாய்ப்பு இவற்றைப் பற்றியெல்லாம் விவரமாகக் கேட்டறிந்தார். பிறகு, நீங்கள் எப்போது ஊர் திரும்புகிறீர்கள் என்றார். நாளை காலை என்றேன். "கார் இங்கு தயாராக இருக்கும். நீங்கள் அதிலேயே போகலாமே" என்றார். என் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த வண்டியை தேர்தல் முடியும்

வரையில் வைத்துக் கொள்ளலாம் என்றார். தேர்தல் முடியும் வரை கார் என் வசம் இருந்தது. வெற்றிப் பெருவிழா நடந்து முடிந்த பின் கார் டிரைவர் திரும்பிப் போகவும், வந்தபோது பெட்ரோல் போட்டதற்கும், ஒரு மாத வாடகை அத்தனையும் உடனே கணக்கு தீர்த்துக் கொடுக்கும்படி கேட்டார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது! வாடகைக்குத்தானா கார், என்றேன். என்னிடம் பணம் இல்லையே என்றெல்லாம் சமாதானம் சொல்லி, கார் டிரைவர் திருப்தி அடையாமல் கார் ஏற்பாடு செய்த திரு. பக்தவத்ஸலத்தையே நேரில் பார்த்துப் பேசுங்கள் என்றார். அந்த வண்டியிலேயே சென்னை சென்று நேரில் முதலியாரைக் கேட்டேன். ''கார் கேட்டீர்கள், கார் அனுப்பினேன். பெட்ரோலும், வாடகையும் நீங்கள்தானே கொடுக்க வேண்டும். முதலிலேயே இலவசமாக வேண்டுமென்று கேட்டிருந்தால் இந்த நிலைமை வந்திருக்காதே'' என்றார். பணம் கொடுக்க அவகாசம் கேட்டேன். திரும்பப் போய் உடனே பணத்தைக் கணக்குத் தீர்த்துக் கொடுத்து விடுங்கள் என்றார். வேறு வழியின்றி எப்படியோ கணக்கைத் தீர்த்து விட்டேன். இது முதல் அனுபவம்.

(2) இராணிப்பேட்டை தொகுதியில் இரு ஹரிஜன அபேட்சகர்கள் காங்கிரஸ் சார்பாக நிற்க அனுமதி கேட்டிருந்தார்கள். அதில் ஒருவரை ஆதரித்து முதலியாரிடம் சிபாரிசு செய்வதென உறுதியான எண்ணத்துடன் சென்று இருவரைப்பற்றி சாதக பாதக கருத்துக்களை விவரித்தேன். அவர் ''இருவர் விஷயத்திலும் என் கருத்து ஒரே மாதிரிதான். இருவரில் யாரைத் தேர்ந்தெடுத்தாலும் எனக்கு ஆட்சேபணை இல்லை'' என்றார். எனக்கோ பெரும் ஏமாற்றம். முதலியார் தன்னை எதிலும் பிணைத்துக் கொள்ளாமல் நாசூக்காக பதில் சொல்லி தனிநிலையாய் இருந்து விட்டார். முதலியார் இம்மாதிரி எடுத்து அறிவித்தது அறிந்து இரு அபேட்சகர்களுக்குமே திருப்தி!

(3) இராணிப்பேட்டை தொகுதியில் சட்டசபைக்கு ஒரு உப தேர்தல் நடக்க விருந்த சமயம், நான் தொலைபேசி மூலம் யாரை நிறுத்தப் போகிறீர்கள் என்று கேட்டேன். உள்ளூர நானே நிற்கவேண்டுமென ஆசையுடன்தான் பேசினேன். அவர் நீங்கள் யாரை சிபாரிசு செய்கிறீர்கள் என்றார். எனக்கு அதிர்ச்சி! விடாப்பிடியாக நானே நிற்கலாமென உத்தேசம் என்றேன். அவர் வேறு ஏதோ காரணம் பற்றி, ''அதற்குள்ளாகவா?'' என்றார். அதற்குமேல் பேச எனக்கு வாய் வரவே இல்லை!

(4) அவர் அமைச்சராக இருந்தபோது, அமெரிக்காவுக்கு ஒரு விவசாயியை, அரசு சார்பாக அனுப்ப இருந்த சமயம். என் நண்பர் ஒருவரை நேரில் அழைத்துச் சென்று பலமாக சிபாரிசு செய்தேன்.

அவர் பல விவரங்களை அவரைப் பற்றி கேட்டறிந்து இம்மாதிரி ஆர்வமும், திறமையும் உள்ளவர்கள்தான் போவதற்கு தகுதி யானவர்கள் என்றார். எனக்குப் பரம திருப்தி. நண்பருக்கு சான்ஸ் கிடைக்குமென நம்பினேன். ஆனால், முழு ஏமாற்றமே ஏற்பட்டது. அவர் தேர்ந்தெடுத்த மிராசுதாரர் பற்றி யாரும் ஆட்சேபிக்க முடியாத நிலையில் காரியத்தை முடித்து முற்றுப் புள்ளி வைத்து விட்டார்.

(5) அவர் 'பாரத தேவி' பத்திரிகை நிர்வாக ஆசிரியராக இருந்தபோது எனக்கு இன்ஸ்பெக்டர் வேலை கேட்டு பல கடிதங்கள் எழுதி நேரில் சந்தித்து வற்புறுத்தினேன். சம்பளம், அலவன்ஸ் இவற்றுடன் வேலைக்கு நியமன உத்திரவும் அனுப்பி விட்டார். ஆனால் அந்த வேலையை ஒப்புக்கொள்ள இயலாமற் போய்விட்டது. நான் நேரில் சென்று என் நிலையை விளக்கினேன். ''நீங்கள் அவசர மாக வேலை கேட்டீர்கள். உங்கள் நிலையை புறிந்து வேலையும் கொடுத்தேன். தற்போது மறுக்கிறீர்கள். மீண்டும் என்னை வேலை கேட்க மாட்டீர்கள். இந்த நிலையில் எனக்குத் திருப்தி'' என்றார். பேசுவதற்கு என்ன இருக்கிறது? வணக்கம் சொல்லித் திரும்பினேன்.

(6) ஆக்கூர் அனந்தாச்சாரி காலமான பிறகு பாரதியார் சங்கத்திற்கு ஒரு செயலாளரை நியமிப்பது சம்பந்தமாக நேரில் சந்தித்துப் பேச கடித மூலம் அனுமதி கேட்டிருந்தேன். பதில் கடிதத்தில் 'நீங்களே முடிவு செய்யலாமே!' என்று குறிப்பிட் டிருந்தார். நேரில் சென்று பேசாமலே விஷயம் முடிந்து விட்டது.

(7) 1944-க்குப் பிறகு ஒருநாள் பக்தவத்ஸலம் ஆற்காடு வந்தார். நானும் அவர் பிரயாணம் செய்த ரெயிலில் வந்தேன். சென்ட்ரல் ஸ்டேஷனில் அவரைச் சந்தித்தேன். காங்கிரஸ் கமிட்டியா? சங்கமா? என்ற விவாதம் கடுமையாக நடந்த நேரம். அப்போது அவரும் நானும் நேர் எதிர்மாறான கொள்கைகள் கொண்டிருந்தோம். நான் ரயிலில் 'இண்டர்' டிக்கட் வாங்கி யிருந்தேன். அவர் மூன்றாம் வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தார். அமைச்சராக பல ஆண்டுகள் இருந்த அவர் மூன்றாம் வகுப்பில் நெரிசலில் போவது எனக்கு இஷ்டமில்லை. அவரை இண்டரில் பிரயாணம் செய்ய வற்புறுத்தினேன். ''நீங்கள் டிக்கட் வாங்கிய வகுப்பில் நீங்கள் செல்லுங்கள். நான் டிக்கெட் வாங்கிய வகுப்பில் நான் செல்கிறேன்'' என்று அவர் இரண்டு அர்த்தத்தில் சொன்னார். ரயிலில் மாத்திரமல்ல, அரசியலிலும் இருவரும் நேர்மாறாகச் சென்ற நேரம் அதுவல்லவா?

இப்படி அவர் மிகவும் ஆழமான கருத்துக்களைக் கொண்டு அரசியலில் வெற்றிகரமாக பல ஆண்டுகள் கழித்தவர். அவர் நீடூழி வாழ்க! அவர் தொண்டு நீடித்துச் சிறப்பெய்துக!

தூய மெய்யன்பர்

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை

முன்னாள் முதலமைச்சர் உயர்திரு. பக்தவத்ஸலம் அவர்கள் என் மனத்துக்கினிய நண்பர். அன்பும் பண்பும் அறிவும் ஆற்றலும் உள்ளவர். காந்தி பக்தர். சத்திய சாந்த சன்மார்க்க சீலர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உயர் குணமுள்ளவர்.

குற்றம் கடிந்து நல்லறிவூட்டும் குணவான். ஆடம்பரத்தை அறவே நீக்கி எளிய வாழ்க்கை நடத்தும் இயல்பினர்.

காந்தீய சத்தியாக்ருஹக் கைதிகளாக நானும் அவரும் ஒரே சிறையில் (மதுரையில்) இருக்க நேர்ந்ததைப் பெரும் பாக்கியமாகப் பாராட்டுகிறேன். சிறையில் அவர் 'ஏ' வகுப்புக் கைதியாகவும் நான் 'பி' வகுப்புக் கைதியாகவும் இருந்தோம். 'ஏ' வகுப்புக் கைதிகள் தம் சொந்தச் செலவில் சில சௌகரியங்களைத் தேடிக் கொள்ளலாம். அப்படிப்பட்ட சௌகரியங்கள் தமக்குக் கிடைப்பதில் திரு. பக்தவத்ஸலம் எனக்கும் பங்கு தருவார். சிறைவாசம் கழிந்த பின் அவர் என்னைச் சென்னையில் தம்முடைய வீட்டுக்கு அழைத்துச் சென்று பல நாட்கள் விருந்தூட்டி மகிழ்ந்தார்.

அவர் என் மீது கொண்டுள்ள தூய அன்புக்கு உதாரணமாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்வது பொருந்தும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் எனக்குப் பேருபகாரியான உயர்திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர், நான் கனவிலும் கருதாத ஒரு சிறப்பை எனக்குச் செய்தார். அதாவது என்னை ஒரு எம். எல். சி. யாக நியமனம் செய்தார். நியமன அங்கத்தினர்க்குள்ள பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் கழியும் சமயத்தில் திரு. பக்தவத்ஸலம் முதலமைச்சராக இருந்தார். நான், என்னை மீண்டும் நியமனம் செய்யும்படி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதற்கு உடனே பதில் வந்தது.

அந்த பதில்:

''தங்கள் கடிதம் வந்தது. அப்படியே செய்கிறேன்''

என்ற ஒரே வரிதான். அந்தக் கடிதத்தை ஒரு செல்வமாக இன்னும் வைத்திருக்கிறேன்.

அத்தகைய மெய்யன்பராகிய திரு. பக்தவத்ஸலம் அவர்கள் புகழோங்க நெடுங்காலம் சுகமாக வாழ்ந்திருக்க இறைவனை வணங்கி மனமார வாழ்த்துகிறேன்.

குறிப்பு: நாமக்கல் கவிஞர் அவர்கள் இயற்கை எய்தியதற்கு மிகச் சில நாட்களுக்கு முன்பாக 19—8—1972 அன்று இக்கட்டுரையை அன்புடன் அனுப்பி வைத்தார்கள்.

தாயினும் நல்லன், சேயினும் எளியன்

வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

காந்தியின் வழியே நின்று
காங்கிரஸ் சபையில் தூணாய்ச்
சாந்தப்போர் வீர னாகித்
தாய்நில விடுத லைக்கா
ஏந்திய கொடியோன், பன்னாள்
இருஞ்சிறை புகுந்தோன், நல்ல
மாந்தருள் தலைவன், பக்த
வற்சலன் வாழி வாழி.

அரசியல் துறையில் வல்ல
அறிஞன்; நா டாட்சி செய்து
புரவுபூண் டிடுமு தல்வன்;
புரட்டென்ப தறியாச் சான்றோன்
பரவிய விளம்ப ரத்தின்
பக்கமே போகா நல்லோன்,
மரபினை அறிந்தோன், பக்த
வற்சலன் வாழி வாழி!

பற்பல நல்லோ ருக்குப்
பாங்கறி நண்ப னானான்;
பொற்புறு தேசத் தொண்டிற்
பொலிந்துயர் தலைவ னானான்;
நற்கலை தேர்ந்த வர்க்கு
நலந்தரு வள்ள லானான்;
வற்பென லில்லாப் பக்த
வற்சலன் வாழி வாழி!

கோயில்கள் பலவும் ஓங்கக்
குலவிய அறமும் ஓங்கத்
தாயினும் நல்ல னாகித்
தவித்தவர் உவகை ஓங்கச்
சேயினும் எளிய னாகிச்
சேர்ந்தவர்க் குறுதி ஓங்க
வாய்தரு பண்பன் பக்த
வற்சலன் வாழி வாழி!

அடக்கமே உருவாக் கொண்டோன்;
ஆரவா ரஞ்செய் யாதோன்;
படித்ததைச் செயலி னாலே
பழகிய நல்லோன்; அன்பர்
இடித்தது கேட்போன்; எந்த
குன்னற்கும் அஞ்சா நெஞ்சன்;
வடித்தசொல் லுடையான் பக்த
வற்சலன் வாழி வாழி!

> இன்று கோவில்களில் ஒரு புதுப் பொலிவு நிலவுகிறது என்றால், அது இவர்தம் நற்செயல்தான்.

பண்பாளர்

டி. எம். நாராயணசாமி பிள்ளை
முன்னாள் துணைவேந்தர் :
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

உயர்திரு. பக்தவத்சலம் அவர்களை அவர்கள் படித்த காலத்திலிருந்து எனக்கு நன்றாகத் தெரியும். பிறகு அவருடன் பழகுவதற்கு வாய்ப்பு கிடைத்தது, நான் செய்த புண்ணியம். அவர் நல்லவர்; பெருந்தன்மை உடையவர்; பண்பாளர்; உபகாரி; நாட்டுக்கு நல்வழிகாட்டி; சேவை செய்தவர்; திறன் அமைந்த அமைச்சர்; வெகு பெரிய காரியங்களையும் வெகு சுலபமாகவே முடித்து மக்களுக்கு நன்மை செய்து விளங்குபவர்.

தமிழ்நாட்டில் உயர்திரு முத்துரங்க முதலியார் அவர்களைத் தெரியாதவர்கள் இல்லை. தேசப்பற்று நிறைந்தவர்; காங்கிரசில் மிகவும் மதிப்பு பெற்றவர்; அவருடைய மருமகன் உயர்திரு பக்தவத்சலம் அவர்கள். உயர்திரு. முத்துரங்க முதலியாருடைய செல்வாக்கு முழுவதும் நமது பக்தவத்சலம் அவர்களுக்கு இயற்கையாகவே அமைந்தது. சட்ட டிகிரி எடுத்த பிற்பாடு வக்கீலாகப் போகாமல், முதலியார் அவர்களுடன் சேர்ந்து, தன்னையும் தேசப் பணிக்கு உயர்திரு. பக்தவத்சலம் அர்ப்பணித்துக்கொண்டார். தேச விடுதலைக்கு உழைத்துவந்த பெரியோர்கள் வாழ்ந்த பொற்காலம் அது; அந்தப் பொற்காலத்தில் பெரிய, பெரிய தலைவர்களுடன் கலந்து பணிசெய்து, தியாகமும் செய்து விளங்குகின்ற பெரியவர்களில் பக்தவத்சலமும் ஒருவர். பல தடவைகளில் தேச நலனுக்காகச் சிறை சென்றிருக்கிறார். ஒரு முறை போலீசாரால் ரொம்பவும் அடிக்கப்பட்டு அதனால் உடம்பு நலிவுற்றார் என்று ஞாபகம் வருகிறது.

சுமார் 20 வருட காலம் மந்திரியாகவும், முடிவில் முதல் மந்திரியாகவும் இருந்து மக்களிடம் நல்ல மதிப்பையும் அன்பையும் பெற்றிருக்கிறார். மந்திரியாயிருந்தபோது இவர்தான் துணிந்து **Highways Department** ஐ பிரித்து ரோடுகளை எல்லாம் செம்மை

யாக்கி அதில் வெற்றி கண்டவர். அதைப்போலவே பாசனத் திட்டங்களை புதியன புதியனவாக அமைந்து மக்களுக்கு பல நன்மைகளைச் செய்திருக்கிறார். இவர்தான் பவானி, மணிமுத்தாறு முதலிய திட்டங்களுக்கு கர்த்தா.

கிராமங்களைத் தனி பங்கு எடுக்கும்படி செய்து அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று திட்டம் தீட்டினவர் இவர். முதல் மந்திரியாக எல்லோருடனும் அன்புடன் பழகி நமது நாட்டுக்கு அரிய பெரிய சேவை செய்தவர்.

நமது கோயில்கள் மதிப்பிட முடியாத நம்முடைய பொக்கிஷம் என்பதை உணர்ந்து, சீர்கெட்டிருந்த கோவில்களையெல்லாம் புதுப்பிப்பதில் இவர் வெற்றி கண்டார். மதுரை கோவில் இவர் காலத்தில்தான் புதுப்பிக்கப்பட்டது. அதே மாதிரி திருவானைக்காவல் கோவில் திருப்பணி இவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இன்னும் அநேக கோவில்களை இவர் புனருத்தாரணம் செய்வித்தார். இன்று கோவில்களில் ஒரு புதுப் பொலிவு நிலவுகிறது என்றால் அது இவர் தம் நற்செயல்தான். இது எனக்கு நன்றாய்த் தெரியும்.

இவர் காலத்தில் நடந்த நன்மைகள் பலப்பல. இவர் நாடறிந்த நல்லவர்.

இவர் நீடூழி காலம் வாழ்ந்து இன்னும் மக்களுக்குப் பல நன்மைகள் புரிந்து விளங்க வேண்டும் என்று ஸ்ரீ அகிலாண்டேஸ்வரியைப் பிரார்த்திக்கின்றேன்.

- ஒத்துழையாமை இயக்கக் காலத்திலிருந்து எனக்கும், காமராஜுக்கும் நெருக்கமான தொடர்பு இருந்து வந்துள்ளது. சத்தியமூர்த்தி, காமராஜ் இருவருடனும் நல்ல உறவு கொண்டிருந்திருக்கிறேன். பல முக்கியமான விஷயங்கள் பற்றி இருவரும் என்னை ஆலோசனை கலப்பார்கள். காமராஜ் அடிக்கடி என்னிடம் வருவார். இருவரும் ஸ்தாபன விஷயங்கள் பற்றிக் கலந்து பேசுவோம்.

  கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் எனது பரிபூரணமான ஒத்துழைப்பை அவருக்கு அளித்து வந்தேன். ஸ்தாபன, நிர்வாக சம்பந்தமான எந்த விஷயத்திலும் அவரைக் கலக்காமல் நான் செயல்பட்டது கிடையாது. எந்தச் சின்னஞ்சிறு விஷயத்திலும் அவருக்கு எதிராகச் செயல்பட வேண்டும் என்று நான் நினைத்தது கூடக் கிடையாது. மனப்பூர்வமான விசுவாசத்துடன் செயல்பட்டு வந்தேன்.

பக்தவத்ஸலம்.

பதவியிருந்தாலும், பதவியில்லா விட்டாலும் பணி செய்து கிடப்பது தன் கடன் என்று வாழ்பவர் இவர்.

உத்தம சீலர்

ம. ராதாகிருஷ்ண பிள்ளை
சென்னை மாநகர முன்னாள் மேயர்

முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம் உயர்குடிப் பிறப்பும், ஆழ்ந்த தெய்வ புக்தியும் உடையவர். செங்கற்பட்டு ஜில்லாவில் மீஞ்சூர் அவரது ஊர். தெய்வச் சேக்கிழாரின் மரபில் தோன்றிய அவர் ஒழுக்க சீலராக இன்றளவும் வாழ்ந்து வருகிறார். இளமையிலேயே நல்ல கல்வி பயின்று, சட்டக் கல்லூரியில் தேறி உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் திகழ்ந்தார். தொடர்ந்து வழக்கறிஞராக இருந்திருந்தால் அவர் அத்துறையில் மிகுந்த மேன்மை எய்தியிருப்பார்.

தேசம் அவரை அழைத்தது. காந்தி காட்டிய பாதையிலே அவர் தனது மாமன் புகழ் பெற்ற பேட்டை முத்துரங்க முதலியாருடன் தேசப் பணியில் ஈடுபட்டார். காந்தி நடத்திய அத்தனை இயக்கங்களிலும் பங்குகொண்டு பலமுறை சிறைவாசம் செய்திருக்கிறார். அதனால் உடல்நலம் பாதிக்கப்பெற்றும் அவர் அதைப்பொருட்படுத்தவில்லை. அவர் காலத்து இளைஞர்களை அவர் தேசத் தொண்டில் ஊக்கினார்.

விடுதலை வீரர்களில் தமிழகத்தில் அவருக்குத் தனி மதிப்பு உண்டு. பல ஆண்டுகள் தமிழ்நாட்டில் அமைச்சராக அவர் விளங்கினார். அமைச்சராகப் பணியாற்றிய துறைகளில் அவர் அரும்பெரும் பணிகள் செய்திருக்கிறார். அவர் பொதுப் பணித் துறையில் அமைச்சராக இருந்த காலத்தில் தமிழகம் பல வகைகளில் முன்னேற்றம் அடைந்தது.

கோயில்கள் நிர்வாகத்தில் அவர் சிறந்த சீர்திருத்தங்களைச் செய்துள்ளார். ஆலயத் திருப்பணிகள் நல்ல முறையில் செய்து ஆத்திகர் மனத்தில் அழியாத இடம் பெற்றுள்ளார்.

முதலமைச்சராக அவர் விளங்கிய காலத்தில் அவரது நிர்வாகத் திறன் உச்ச நிலையைக் காட்டிற்று. நிர்வாகிகளோடு ஒத்துழைத்து அநாவசியமாக நிர்வாக விஷயங்களில் தலையிடாமல் ஆட்சி நடத்தினார். தமிழகத்தின் முன்னேற்றத்துக்கும், தமிழ்நாட்டின் பெருமையை பாரதத்தில் நிலைநாட்டியதற்கும் அவரைப் புகழாதார் இல்லை.

பதவியிருந்தாலும் இல்லாவிட்டாலும் பணி செய்து கிடப்பது தன் கடன் என்று ஓயாது பாடுபட்டு வருபவர் அவர். தைரியமாக நிர்வாகக் குற்றங்களை அரசுக்கு எடுத்துக்காட்டி நாட்டின் நன்மைக்காக இன்றும் உழைத்து வருபவர் அவர். கட்சிப்பற்றும், அதில் உள்ள குறைகளை நீக்குவதிலும் சளைக்காமல் உழைத்து வருகிறார்.

போற்றுதலுக்கு மயங்காமல், தூற்றுதலுக்குப் பயப்படாமல் உண்மையை எடுத்துரைத்து நாட்டு நலனுக்குப் பாடுபடும் அவ்வுத்தம சீலர் இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து நமக்கு வழிகாட்ட வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

● *அந்தக்காலத்திலேயே காங்கிரஸ் இயக்கத்தின் நெறிகளையொட்டி நிர்மாணத் திட்டப் பணிகள் பலவற்றிலும் நான் முன்னிலையில் நின்று பங்கு கொண்டேன். சீனிவாச அய்யங்கார் அவர்கள் மாகாண காங்கிரஸ் தலைவராக இருந்தபோது 1926-ல் நிர்மாணத் திட்ட வேலைகளுக்காக பல கமிட்டிகள் அமைக்கப்பட்டன. நிர்மாணத் திட்ட வேலைகளில் ஒன்று மது ஒழிப்பு. மது விலக்குப் பிரசாரத்திற்காக ஒரு குழு அமைக்கப் பட்டது. நான் அதற்கு கன்வீனராகத் தேர்ந்தெடுக்கப் பட்டேன். அக்குழுவிற்கு ராஜாஜி தலைவராக இருந்தார்.*

1933-34-ல் தமிழ்நாடு ஹரிஜன சேவக சங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டது. அந்தக் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் கணக்கற்ற கொடுமைகளை அனுபவித்தார்கள். அம்மக்களை எல்லா வகையிலும் உயர்த்தும் பணிகளில் ஹரிஜன சேவக சங்கம் ஈடுபட்டது. அச்சங்கத்தின் முதல் கமிட்டிக்கு நான் துணைத் தலைவராக இருந்து பணியாற்றினேன்.

பக்தவத்ஸலம்.

எண்ணித் துணிந்த காரியத்தை எந்தச் சூழ்நிலையிலும் செய்து முடிக்கும் ஆற்றல் இவரிடம் நிறைந்துள்ளது.

செயல் திறன்

ஏ. ஆர். சுப்பையா முதலியார் எம். எல். ஏ.

முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் வருகின்ற அக்டோபர் திங்களில் 75 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றார்கள். அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ, இறைவன் இன்னருளை வேண்டுகின்றேன்.

தமது வாழ்நாளில் பெரும் பகுதியைப் பொது வாழ்வில் ஈடுபடுத்தியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள். ஐம்பது ஆண்டுக் காலத்தைப் பொது வாழ்விற்கே அர்ப்பணித்த அவர்களுடன், நெருங்கிப்பழகும் வாய்ப்பு எனக்கும் கிட்டியது. அதனை என்னுடைய நற்பேறு என்றே கருதுகின்றேன்.

எந்த ஒரு செயலையும் சிந்தித்துச் செயற்படுத்தும் திறனும், பல்வேறு கோணங்களிலும் எண்ணித் துணிந்த காரியத்தை எந்தச் சூழ்நிலையிலும் சாதிக்கும் ஆற்றலும் அவரிடம் நிறைந்திருந்தன. கடவுள் பக்தி மிக்கவர். பண்பட்ட வாழ்க்கையில் நாட்டம் உடையவர்.

தமிழகத்தில் கல்விப் பணி சிறக்க வேண்டும் என்று விழைந்தார். கிருஸ்தவப் பாதிரிமார்கள், கல்விப் பணி மூலம் தம் சமயத்தை இந்நாட்டில் பரப்பிடும் உண்மையை உணர்ந்தார். நமது இந்து சமயம், நம் மக்களிடையே கல்வியை வளர்க்கத் தவறி விட்டதையும் கண்டார். கல்வித்துறையும், இந்து சமய அறநிலையத்துறையும் அவரிடம் இருந்த காலத்தில் இக்குறை போக்க முன்வந்தார்.

இந்து கோவில்களிலும், மடங்களிலும் இருக்கின்ற எல்லையற்ற நிதி, நாட்டில் நல்ல கல்வியைப் பரப்பப் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை உருவாக்க முனைந்தார். இவர்தம் முயற்சியின் அடிப்படையில் எழுந்தன பல கல்விக் கூடங்கள்.

நமது தமிழ்ச் சமுதாயம் வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டின், நம் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும். அறியாமை இருள் நம் வீடுகளில் சூழ்ந்திருக்கும்போது, நாட்டில் நல்ல ஒளியை எதிர்பார்க்க முடியாது. எனவே தமது முதல் சாதனையாக, திருநெல்வேலி நெல்லையப்பர் தேவஸ்தான நிதி கொண்டு, காந்திமதி அம்பாள் உயர்நிலைப் பள்ளியை நிறுவி நல்ல முறையில் செயற்படச் செய்தார். பல்வேறு அதிகாரிகளின் எதிர்ப்புக்கிடையிலும் தான் நினைத்த நல்ல செயலைச் செய்து முடித்தார். திருநெல்வேலியில் வாழ்கின்ற மக்களுக்கு இன்று அப்பள்ளி, நல்லதொரு வரப்பிரசாத மாக அமைந்துள்ளது.

அமைதியான சூழ்நிலையும், அருவியின் ஒலியும் அகலாது தங்கிடும் திருக்குற்றாலத்தில், உயர்கல்வி பரப்பிடும் கல்விக்கூடம் கட்டாயம் உருவாக்கிட வேண்டும் என்று எண்ணினார். இந்து சமய அறநிலையத் துறையின் ஆதரவோடு கல்லூரி செயற்பட வேண்டும் என்றும், அக்கல்லூரியும் பெண்கள் கல்லூரியாகவே அமைய வேண்டும் என்றும், தம் விருப்பத்தை, அப்போது தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினராகிய என்னிடம் எடுத்தியம்பினார், அவர்தம் ஆசியோடும், ஆதரவோடும் திருக்குற்றாலத்தில் பெண்களுக்கென ஒரு கல்லூரியைத் துவங்கும் நல்ல முயற்சியில் நானும் அன்றைய திருக்குற்றால நாதர் கோயில் தர்மகர்த்தா சங்கர முதலியாரும், நிர்வாக அதிகாரி திரு. ஒ. ஆறுமுகமும், உதவி ஆணையாளர் திரு. சங்கர நாராயணனும் ஈடுபட்டோம். அன்றைய இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர் திரு. சாரங்கபாணி அவர்களும் ஒல்லும் வகையெல்லாம் உதவி புரிந்தார். இந்துக் கோவில்களும், மடங்களும் தமது நிதியிலிருந்து நன்கொடை வழங்கிட ஆணை பிறப்பித்தார். அதன் காரணமாய் தோற்றுவிக்கப்பட்டது திருக்குற்றாலத்தில் உள்ள ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி. கல்லூரிக் கட்டிடங்கள் எழுப்புவதற்குச் சொந்தமான நிலம் தேவைப்பட்டது. இத்தேவையை நிறைவுபடுத்த, திருவனந்த புரம் மன்னரிடம் வேண்டி, குற்றாலத்தில் அவருக்குச் சொந்தமான நிலத்தில் 20 ஏக்கர் நிலத்தைக் கல்லூரிக்கு நன்கொடையாகப் பெற உதவியும் செய்தார்.

நிலம் பெறுவதோடும், நிதி திரட்ட உதவுவதோடு மட்டும் அமையாமல் கல்லூரிக்குத் தக்க பெயரைச் சூட்டுவதிலும் அவர் காட்டிய ஆர்வம், இன்றும் என் மனக்கண்ணில் மறையாது காட்சியளிக்கின்றது. எல்லோரும் எளிதில் சொல்லக்கூடிய இறைத் தன்மை நிறைந்த பெயரைத் தேடினார், குற்றாலத்தோடு தொடர்புடையதாகவும் அது இருக்க வேண்டும் என்றும் விழைந்தார். குற்றாலம் அம்மனின் பெயர் ''குழல்வாய் மொழி அம்மன்.'' தமிழின் சிறப்பு 'ழகரம்.' எல்லோராலும் எளிதில் தெளிவாக

உச்சரிக்க முடியாத ஒன்று. எனவே குற்றாலம் திருக்கோவிலில். உருவமற்ற நிலையில் பீடமாகவே காட்சி தந்திடும் பராசக்தியைத் தேர்ந்தெடுத்தார். பார் அளிக்கும் பராசக்தியின் பெயரைத் தாங்கியதால், மாபெரும் சக்தியால் உந்தப்பட்டு கல்லூரி நாளும் வளர்ந்து வருவதைக் காண்கின்றோம். பெயர் வைப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வத்தின் பொருளை என்னால் இன்றும் உணர முடிகின்றது.

பல்கலைக் கழகத்திற்குக் கல்லூரிக்கென நிரந்தரக் கட்டளை (endowment) நிறுவ வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. உடனே திருக்குற்றாலம் கோவிலுக்குச் சொந்தமான அச்சம்பட்டி கிராமத்தில் உள்ள 24 ஏக்கர் நிலத்தை இக்கல்லூரிக்கே மாற்றிக் கொடுக்கும்படி தனியொரு விதி சமைத்து அதன்படி நிலம் பெற உதவி செய்தார். இந்நாட்டின் வரலாற்றிலேயே இது ஒரு ஒப்பற்ற சாதனையும், முதற் சாதனையுமாகும்.

நல்ல காரியங்களைக் காலந் தாழ்த்தாது விரைவில் சாதிக்கும் ஆற்றல் மிக்கவர். எழுத்து மூலம் ஒரு காரியத்தை நிறைவேற்றக் காலதாமதம் ஆகும் என்பதை உணர்ந்தால், உடனே அதனோடு தொடர்புடைய அதிகாரிகளைக் கூட்டி, அவர்கள் கருத்துக்களை நேரில் கேட்டு, அங்கேயே நல்லதொரு முடிவினை எடுப்பார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 'அபிஷேகப் பட்டி கால் நடை வளர்ச்சிப்பண்ணை' ஏற்படுத்த எத்தனையோ தடங்கல்களும் முட்டுக் கட்டைகளும் ஏற்பட்டன. மேற்கூறிய முறையில் சம்பந்தப் பட்ட அனைவரையும் கூட்டி, பல்வேறு கருத்துக்களையும் அலசி ஆராய்ந்து, இறுதியில் அபிஷேகப்பட்டியில் பண்ணையை நிறுவும்படி முடிவெடுத்தார்.

குற்றம் புரிந்தவர்கள், தம் குற்றம் உணர்ந்து திருந்த முற்படின், அவர்களை மன்னிக்கும் மனப்பக்குவம் பெற்றவர். இவர்தம் இவ்வரிய பெரிய பண்பினால் இன்று வளம்பெற வாழ்கின்ற சிலரைக் காணும்போது, மன்னிக்கும் அவர்தம் பண்புள்ளத்தைப் பாராட்டாமல் இருக்க இயலாது. அனைத்திற்கும் மேலாய் அவர் துவங்கிய நற்காரியங்கள் வளர்ச்சி பெற்றுத் திகழ்வதை அனுப வத்தில் காண்கின்றேன்.

தமிழகத்தில் கல்வி தழைக்க வேண்டும் என்ற அவர்தம் விழைவும், பெண் கல்விக்காக அவர் ஆற்றிய அரும்பெரும் தொண்டும், நமது ஆலயங்கள், மடங்கள் இவற்றின் நிதியை நன் முறையில் பயன்படுத்த அவர் எடுத்த முயற்சிகளும் என்னை அன்றும் கவர்ந்தன, இன்றும் அவரை உளமார வாழ்த்திப் போற்ற உந்து கின்றன என்றுமே என் உள்ளத்தை விட்டு அவை அகலாமல் நிற்கும் என்றும் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.



1962-ல் தமிழ்நாடு அரசு முதன்முறையாக பாரதியாரின் பிறந்த நாளை ஒரு குழு அமைத்துக் கொண்டாடியது. விழாத்தலைவர் அன்றைய மைசூர் முதல்வர் திரு. நிஜலிங்கப்பா, விழாவைத் தொடங்கிய டாக்டர் சி. பி. ராமசாமி அய்யர் ஆகியவர்களுடன் குழுவின் தலைவர் திரு. பக்தவத்ஸலம்.

11 MAR 1973
MADRAS

தமிழர்களின் நல்லதிர்ஷ்டம் நம்மிடையே இன்று ராஜாஜி, காமராஜ், பக்தவத்ஸலம் முதலியோர் இருந்து வருகிறார்கள்.

பதவிக்கொரு பண்பாளர்

பி. மருதைப் பிள்ளை
தொழிலதிபர்

பெரியவர் மதிப்புக்குரிய திரு பக்தவத்சலம் அவர்களின் 75 ம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற விருப்பது தெரிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். தேச விடுதலைக்காகப் பாடுபட்ட பெருந்தலைவர்கள் வரிசையில் உயர்திரு. பக்தவத்சலம் அவர்களைக் குறிப்பிடுவது சாலப்பொருத்தமாகும். ஒரு தலைமுறை மறைந்து புதிய தலைமுறை தோன்றியிருக்கும் இத்தருணத்தில் பழைய தலைமுறையைச் சேர்ந்த பெரும் விடுதலை வீரர் அவர்கள், இன்றும் தமிழகத்தின் அரசியலில் குன்றாத ஆர்வமுடன் ஈடுபட்டு வருவதைப் பார்க்கிறோம்.

விடுதலைப் போரில் பெருந்தியாகங்கள் செய்து தொண்டாற்றிய தலைவர்கள் பலர் மறைந்து விட்டார்கள். தமிழர்களின் நல்லதிர்ஷ்டம் நம்மிடையே இன்று பேரறிஞர் ராஜாஜி, பெருந் தலைவர் காமராஜர், சிறந்த நிர்வாகி திரு பக்தவத்சலம் முதலியோர் இருந்து வருகிறார்கள்.

தேச விடுதலைக்குப்பின் தமிழக நிர்வாகத்தில் அமைச்சராகப் பல்லாண்டுகளாய் தொடர்ந்து பதவி வகித்த பெருமை திரு பக்தவத்சலம் அவர்களையே சாரும். பல்வேறு இலாக்காக்களுக்கும் அமைச்சராகவும், பின்னர் முதலமைச்சராகவும் பணியாற்றி தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் சிறந்த பணியினைச் செய்து வந்திருக்கிறார்கள்.

திரு பக்தவத்சலம் அவர்களின் நிர்வாகத் திறமையையும் கூரிய மதியினையும் அறிஞர்கள் பலரும் பாராட்டி புகழ்ந்து வந்திருக்

கிறார்கள். அது மாத்திரமல்ல. ஆங்கிலத்திலே பட்டதாரி என்பதோடு தமிழிலும் நல்ல புலமையும் பற்றும் கொண்டவர்கள். பத்திரிகைத் துறையிலும் ஈடுபாடுடையவர்கள்.

அரசியலில் ஆரவாரமில்லாது அடக்கத்தோடு பணியாற்றி வருபவர்கள். உயர்ந்த காந்தீயவாதி. நிறைந்த நேர்மையாளர். சிறந்த பக்திமான். பண்பாளர் அவர்களுக்கு தமிழ்நாடும் தமிழர் களும் என்றும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தலைவர்கள் அவர்களை கால் நூற்றாண்டுக்கு மேல் அறிந்தும் பழகியும் தொடர்பு கொண்டு வந்திருக்கிறேன். அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வாய்ப்பை அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

● மாணவனாக இருந்தபோது டாக்டர் அன்னி பெசண்ட் அம்மையார், விபின் சந்திரபால் போன்றவர்களின் ஆவேச மூட்டும் பிரசங்கங்களை மிக்க ஆர்வத்துடன் கேட்பேன். திலகர் பெருமான் சென்னை கடற்கரையில் பேசியதையும் கேட்கக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அவர்களது கூட்டங்கள் எங்கு நடந்தாலும் போய்விடுவேன். அவற்றின் விளைவாக அன்றைய சுதேசி இயக்கத்தைப் பற்றிச் சிறு வயதிலேயே என் மனத்தில் ஆழ்ந்த கருத்துக்கள் பதிந்தன.

சிறு வயது முதல் சூழ்நிலைகள்தாம் என்னை உருவாக்கி வந்துள்ளன. தேசீயத் தலைவர்களின் நூல்கள், தேசீயத் தலைவர்களின் சொற்பொழிவுகள், சுயாட்சி சுதேசிக் கிளர்ச்சிகள், தீவிர தேசிய இயக்கம், குடும்பத்துப் பெரியவர் களின் பொது வாழ்வுப் பணிகள் இவையனைத்தும் ஒன்று சேர்ந்து என்னுடைய வாழ்க்கையை நிர்ணயித்து விட்டன.

பக்தவத்ஸலம்.

அமைச்சரவையில் இருந்த காலத்தில் காந்திய நிர்மாணத் திட்டங்களுக்கு ஊக்கம் கொடுத்து, நல்ல ஆலோசனை யும் இவர் வழங்கி வந்தார்.

தொண்டினால் உயர்ந்தவர்

நா. மு. சா. சுப்பராமன்
மதுரை

ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் தமிழ்நாடு முழுதும் பலதடவை சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். அவர் போகாத கிராமங்கள் இருக்காது. எனவே அவரைப்பற்றி குக்கிராமங்களிலும் நன்கு தெரியும்.

அவர் படித்து வக்கீல் தொழிலை சில ஆண்டுகள்கூட செய்திருக்க மாட்டார் என்று நினைக்கிறேன். மகாத்மா காந்தியடிகளின் விடுதலை இயக்கத்தில் கவரப்பட்டு அதில் சேர்ந்து அப்பொழுதிருந்து தேசப் பணியில் ஈடுபட்டு இன்று வரை தொண்டு புரிந்து வருகின்றார். நேரிடை இயக்கங்களில் கலந்து கொண்டதனால் பலமுறை சிறை வாசம் அனுபவித்திருக்கிறார்.

சட்டசபையில் புகுந்து அங்கிருந்தும் விடுதலை இயக்கத்தை பலப்படுத்த வேண்டும் என்று காங்கிரஸ் முடிவு செய்தபின் 1937-ம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் உறுப்பினர்கள் பெரும்பான்மை இடங்களை சென்னை சட்டசபையில் பெற்றனர். ராஜாஜியின் தலைமையில் அமைச்சர் அவை ஏற்பட்டது. ஒரு இலாகாவில் இவர் செயலாளராக நியமிக்கப்பட்டார். 1947-ல் இந்தியா விடுதலை அடைந்த பிறகு மாநில அமைச்சரவையில் முக்கிய இலாக்காக்களின் அமைச்சராகவும், பின் கடைசியில் முதல் அமைச்சராகவும் இருந்து வந்தது யாவரும் அறிவோம்.

இவர் தம் தொண்டினாலும், உழைப்பாலும், திறனாலும் நாளுக்கு நாள் மேலான பதவிகளை அடைந்தார் என்று சொல்லத் தேவையில்லை.

சட்டசபையில் இவருடைய இலாகா சம்பந்தமாக எந்த பிரச்சினைகள் பற்றி விவாதம் வந்த போதும் அவைகளுக்கு மிகவும் தெளிவாக விளக்கம் கூறி அனைவருக்கும் மகிழ்ச்சியும், மனநிறைவும் கொடுப்பார். பல முன்னேற்ற ஆக்கப்பணிகள் இவர் காலத்தில் ஏற்பட்டன. மின்சாரம், நீர்பாசனம், ஹிந்து தர்ம ஸ்தாபன பரிபாலனம் - இவைகளில் இன்று காணும் பெரும் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் இவர்தான் அடிப்படைக் காரணம் என்று சொல்லலாம். இவைகளால் நம் தமிழ்நாட்டில் தொழில்களும், விவசாயமும் பெரும் அளவில் பெருகியிருப்பதுடன், நகரங்களிலும், கிராமங் களிலும் பல வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன.

கோயில்களின் திருப்பணியில் அவர் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டார். கவனிப்பார் அற்றுக்கிடந்த கோயில்களில் லட்சக் கணக்கான பணத்தைத் திரட்டி திருப்பணிகளைச் சிறப்பாகச் செய்யச் செய்தார். இன்று அவை நம் மக்களுக்குப் புத்துணர்ச்சியுடன் பக்தியும், அமைதியும் கொடுத்து வருகின்றன. அத்துடன் பக்தர் களுக்கும் யாத்திரீகர்களுக்கும் பல நல்ல வசதிகள் செய்துகொடுக்கப் பட்டிருக்கின்றன. இவைகளின் பெருமை முக்கியமாக ஸ்ரீ பக்தவத் சலம் அவர்களுக்குப் போய்ச் சேரும்.

நம் கோயில், பூஜை, அர்ச்சனை சடங்குகள் இவைகளில் சீர்திருத்தங்கள் செய்து மதக் கோட்பாடுகளையும், தத்துவங்களையும், அர்ச்சகர்கள் அறியும் வண்ணம் பயிற்சிகள் நடத்தினார். நம் கலை களையும், சமய அறிவையும் பரப்பவும் வழி வகுத்தார்.

பழனியில் பண்பாட்டுக் கல்லூரியும், தஞ்சை மாவட்டத்தில் தமிழ் நாட்டிற்குத் தனிச் சிறப்பு அளித்துவரும் இசைக்கருவி நாதசுரம் முதலியவைகளின் பயிற்சிக் கல்லூரியும் தொடங்கி வைத்தார்.

காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களிலும் பங்கு கொண்டு ஆதரவு அளித்து வந்தார். அவைகளுக்காகப் பணியாற்றி வரும் நிறுவனங்களுக்கு அமைச்சரவையிலிருந்த காலத்தில் ஊக்கம் கொடுத்து, நல்ல ஆலோசனையும் சொல்லி வந்தார்.

விடுதலை இயக்கம் நடந்து வந்த காலத்திலும், பின் விடுதலை பெற்ற பின்பும் நாட்டில் எத்தனை பிரச்சினைகள், சிக்கல்கள், துன்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன! ஒவ்வொரு சமயத்திலும் பிரச்சினை தீர, அல்லது சமாளிக்க அவர் கூறிய ஆலோசனை மிகவும் பயனுள்ளதாகவும், போற்றக் கூடியதாகவும் இருக்கும்.

இன்றுவரை அவர் ஓய்வு இன்றி தேசத்திற்கும், மக்களுக்கும், பணியாற்றுகிறார். இப்பொழுது சிறிது காலமாகத்தான் அவர் வெளியில் அதிகம் பிரயாணம் செய்வதில்லை. முன்பு மாதத்தின்

பெரும்பான்மையான நாட்களில் சுற்றுப் பிரயாணம் செய்து மக்களிடம் தொடர்பு கொண்டு, அவர்கள் குறைகளை அறிந்து அவைகளை முடிந்தவரை நீக்கிவந்து அவர்களுக்கு வழிகாட்டி வந்தார்.

அதிகாலை எழுந்து, 7 மணிக்கே பொதுப் பணிகளைக் கவனிக்கத் தொடங்கி இரவு 10, 11 மணிவரை வேலை செய்து வருவார். பகலில் அவர் அனேகமாக ஓய்வு எடுத்துக் கொள்வதில்லை.

அரசு பைல்களை பாக்கியில்லாமல் அவ்வப்பொழுது பார்த்து முடித்து விடுவார். கடிதப் போக்குவரத்திலும் சிறிதும் தாமதம் செய்வதில்லை. யார் கடிதம் எழுதினாலும் உடனே இல்லாவிடில் விரைவில் பதில் வந்து விடும்.

அரசாங்க வேலைகள், உத்தியோகஸ்தர்களைப் பார்த்துப் பேசல், பார்க்க வந்த பொது மக்களைச் சந்தித்தல், சட்டசபை நடவடிக்கை, காங்கிரஸ் ஸ்தாபன வேலை, சுற்றுப் பிரயாணம், கடிதப் போக்குவரத்து - இவை அத்தனையிலும் குறைவில்லாமல் பணியாற்றினார் என்றால் அது இவரிடமுள்ள அபூர்வ திறமையைக் காட்டுகிறது.

ஸ்ரீ பக்தவத்சலம் அவர்கள் இன்னும் பல்லாண்டு உடல் நலத்துடனிருந்து பொதுப்பணியாற்ற வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

பெட்பார் சால்பினர்

அன்பு அமு. கருணையானந்தா
மதுரைத் தமிழ்ச் சங்கப் பேராசிரியர்

திருவருட் டுணையால் திருவுளப் பாங்கால்
அருட்பணி புரிதலால் அமைச்சுத் தொழிலால்
சைவப் பணிபுரி தண்ணருட் டிறத்தால்
உய்வினை ஏழையர் உற்றிட உதவிடும்
இரக்கத் தன்மையால் இணையிலாப் பண்பினால்

ஓங்குறு குடியினில் உற்றிடு தவத்தால்
பெரியராய் வாழ்ந்திடும் பெட்பார் சால்பினர்
ஐயா பக்தவத் சலனார் நலமுறும்
எழுபத் தாறும் ஆண்டும் எய்தினர்

மேலும்பல் லாண்டுகள் மேவி வாழ்ந்திடல்
சாலுமே ஆண்டவர் சகல நலங்களும்
தந்தருள் புரிந்திடத் தமிழகம் போற்றிட
வாழ்த்திடல் இனிதே வடிவேல் முருகன்
பார்த்தருள் புரிந்திடப் பணிந்து வாழ்த்துதுமே.

திரு. பக்தவத்சலம் மக்கள் பண்பாட்டில் மிக்கவராகி அரசியல் நெறியை மாசின்றி இலங்கச்செய்து நடந்து காட்டிய அண்ணல்.

பண்போடு வளர்ந்தவர்

புரிசை சு. முருகேசனர்

தேசத் தலைவர், தமிழ்த் தலைவர், சமயத் தலைவர் திரு. வி. க. அவர்கள் இப்போதிருந்திருந்தால், அவர்களது பொருள் செறிந்த பொன்னெழுத்துக்களோடு இச்சிறப்பு நூல் மிளிர்ந்திருக்கும். ஆயினும், பெரியாரவர்களின் சிறப்பிற்கு அடிப்படையான ஒரு செய்தியை திரு. வி. க. அவர்கள் வாயிலாகக் கேட்டதனை விளம்ப நினைக்கின்றேன்.

"முருகவேள் திருவவதாரம்" என்ற தலைப்பில் இராயப்பேட்டையில் 1936-ல் கூட்டுறவுத்துறைப் பெருந்தலைவர் சீ. தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தலைமையில் ஒரு விரிவுரை நடந்தது. அவ் விரிவுரையில் ''கலத்தலை நீங்கலா காகம் போலவே'' என ஒரு சொற்றொடர் வருகின்றது. அது மாகவி கச்சியப்பர் திருவாக்கு. தேவர்கள் சிவபெருமானைப் போற்றி அசுரரையழிக்க ஒரு அருமகவை அளிக்க வேண்டுமென வேண்டினார்கள். அவர்களுக்காகப் பரமன், தனது கனற் கண்ணால் ஆறு தீப்பொறிகளைத் தந்தனன். அவற்றின் பேரொளியைக் கண்டு தேவர்கள் சிதறி ஓடினார்கள். அப்பொறிகள் உலகைச் சுற்றச் சென்று விட்டன. அல்லலுற்றோடிய வானவர்கள், மீண்டும் ஒன்றாக அமலன் கைலையுச்சியை அடைந்தார்கள். இது அங்கு வரும் கதைச் சுருக்கம். கலைந்தோடிய வானவர்கள், மீண்டும் அக்கயிலையையே கூட்டமாகச் சார்ந்ததற்கு வரும் உவமையே, "கலத்தலை நீங்கலா காகம் போலவே" என்ற குறிப்பு. எப்பொழுதும் கூடி வாழும் இயல்புள்ள காகங்களைப் போல பிரிந்தோடிய அமரர்கள் மீண்டும் திரண்டு வந்தனர் என்பது முன்னர் வழக்கிலிருந்து வந்த பொருள்.

அன்று இதற்கொரு புதுப்பொருள் வந்தது. அதாவது, மரக்கலங்கள், கப்பல் துறைக்கு வந்து நிற்கும்பொழுது காகங்கள், அதன் கொடிக்கம்பத்தில் உட்காரும். அவை, கடலில் கிடைக்கும் சிறு பூச்சிகளைப் பிடித்தறுந்த மரக்கலக்கூம்பைத் தமது தங்குமிடமாகக் கொண்டு இயங்கும். பின்னர் மரக்கலம் கடலாழத்திற்குச் செல்லும்பொழுது ஏமாந்து இருந்துவிட்டு கடலலையால் கொடி மரம் புடைக்கும்பொழுதிலே தியங்கி மயங்கிப் பறந்தோடும். எங்கே ஓடுவது? கப்பல் நடுக்கடலைச் சார்ந்து விட்டது. கரை காணவோ வழியில்லை. மேலும் முயன்று பறக்கச் சிறகு வலி போதாது. சோர்வு வரும் நேரம் புகலிடம் மரக்கலக்கூம்புதான். அங்குதானே வந்தாக வேண்டும், வேறே புகலிடம் ஏது? அதுபோல எங்கு பார்த்தாலும் சூரபதுமன் ஆட்சி, வானவருக்குக் கைலையைத் தவிரப் புகலிடமேதும் கிடையாது. தீப்பொறிக்கு அஞ்சி ஓடிய வானவர் திரும்பவும் அமலன் அடியிணைகளைத்தான் அடைய வந்தது. கைலையைத் தவிர்ந்த இடமெல்லாம் காரவுணர் ஆட்சியே. ''கலத்தலை நீங்கலா காகம்'' கல-மரக்கலத்தின், தலை-கொடிகம்பம், நீங்கலா காகம்-விட்டகல வேறு வழியற்ற காகங்கள். இப்புது உரையை திரு. வி. க. அவர்கள் மிக வியந்து மகிழ்ந்தார்கள்.

விரிவுரை முடிந்து கூட்டம் கலைந்த பிறகு திரு. வி. க. ''இந்த உரை மிக நுட்பமானது. இதனைக் கேட்டபொழுது எனக்கு வந்த மகிழ்ச்சி ஒரு சிறந்த குறிக்கோளை நினைவு கூர்ந்ததாகும். காகத்திற்குப் புகலிடமளிக்கும் கப்பல் கூம்பு, காங்கிரஸ் தொண்டர்களுக்குப் புகலிடமளித்த முத்துரங்கர் பேட்டை வீட்டை யொத்ததாகும். வானவருக்கு இருக்க இடம் தந்தது கைலை (அசுராட்சியில்)த் தேசத் தொண்டர்களுக்குத் தங்க இடமென்ன, உண்ண உணவும் தளராமல் அளித்து வந்தது பேட்டைப் பெரியார் இல்லம்'' என்று இசைத்தார்கள். பெரியார் தெய்வ சிகாமணி முதலியாரவர்களும் பொருந்தும் பொருந்துமெனக் கூறி மகிழ்ந்தார்கள்.

அன்று வடநாட்டிலிருந்து போதரும் மாபெருந்தலைவர்களுக்கும், தமிழகம் முற்றிலுமிருந்து கூடும் தொண்டத் தொகையினர்களுக்கும் தெள்ளமுதளித்த வள்ளலாக விளங்கினர் இத் திருவரங்கனர். அரங்கர் அருட்பார்வைக்கிணங்கத் தொண்டர்களுக்குத் தொண்டராயமரும் பெருவாழ்வு நமது பெரியார் பக்தவத்சலனரவர்களுக்கு அடிப்படையாக விளங்கிற்று. இதனுல் பண்பும் படிப்பும் ஒருங்கே வளர் தர தேசத்தொண்டில் திகழ்ந்தனர். இவ்வாய்ப்பு எளியதொன்றல்ல. இப்பெருமை இவர்களுக்கு மட்டுமாகவில்லை. இவர்களை முன்னிற்கக் கொண்ட தமிழகம் முழுதிற்கும் பெருமையாயிற்று. அன்று இவர்கள் தொண்டர்களை வரவேற்றுச் சோறிட்டு தொண்டர்களோடு கூடி வெள்ளையருடன் ஒத்துழையா போரிட்டு

யோகத்தை ஒத்திவைத்துத் தியாகத்திற் றலைப்பட்டு உழந்து உழந்து வாங்கி உதவிய உரிமைப்பேறுதான் யாவரும் நாமெல்லாம் இந் நாட்டு மன்னவரேயெனச் செம்மாந்து பெருமிதப்படும் செயல் களெல்லாம்.

திருவண்ணாமலையில் தேர்தல் கூட்டத்தில் ஒரு நாள் பெரியார் பக்தவத்ஸலம் அவர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். அப் பொழுது எதிர்க்கட்சியில் நின்ற இளைஞரொருவரைக் குறிப்பிட்டு, அவருக்குள்ள சிறப்பியல்புகளை ஒரு சிறிதும் குன்றாமல் விரித்துரைத் தனர். பின்னர், அவர் தம் கட்சியின் கோட்பாடுகளைக் கூறி தேச நலத்திற்கு மாறுபட்ட சில எடுத்துக்காட்டுக்களை யிசைத்து 'எண்ணிப் பாருங்கள் முடிவு வாக்காளர்களுடையதுதானே!' யென, தகைமை பெறக் கூறி முடித்தனர். அப்போது காங்கிரஸ் சார்பில் நின்ற நண்பர் 'இப்படியா பேசுவது? எதிரியைப் புகழ்ந்தால் நமக்கெப்படி ஓட்டு வரும்' என குறைப்பட்டுக் கொண்டதும் உண்டு. இப்படி கொள்கை மாற்றங்களை யன்றி தனித்தவர்களின் சிறப்புக்களைக் காக்கும் பெருந்தகைமை என்றும் அழிவற்ற பெருமைக்குரியதாகும்.

ஒருசேர இருபது ஆண்டுகள் தமிழக அரசுத்தலைமையில் இலங்கிய இவ்வண்ணல், ஒருபோதும் நாங்கள் என்றும் தலைமையிலிருப்போம் எங்களை யாவரும் வெல்ல முடியாது என ஏமாந்து பேசியது என்றுமே யில்லை. தமது கீழுள்ள பணியாளர்களுடனோ, மேலுள்ள ஆட்சித் தலைவர்களுடனோ மாறுபட்டு எதிரிட்டுக் கொள்ள நேர்ந்த காலம் ஒரு சிறு இறைப்பொழுதும் இருந்ததில்லையெனக் கூறினால் இவர் தம் தகுதிக்கு வேறென்ன எடுத்துக்காட்டுக்கள் இசைப்பது?

பொதுப் பணியாளர்களுக்கு வாழ்த்தும் வரும், வசவும் வரும். ஒருவரை வாழ்த்தவோ வையவோ மக்கள் உரிமையுள்ளவர்கள்தான். ஆனால், தாம் நேரேயிதனில் ஈடுபடாமல் பிறரையேவி வாழ்த்தச் செய்வதே சிறப்புடையதல்ல வென்றால், வையச் செய்வது எவ்வளவு கீழ்மையான செயல்? இவ்விழிதகவை தமது வெற்றிக்குதவும் அழகிய வழியாக அகங்கொளும் அரசியல் அன்பர்களும் இல்லாமல் இல்லை. இச்சிறு தீமைகள் நமது பெரியார் பக்தவத்ஸலம் அவர் களைச் சந்திக்க நேர்ந்த காலங்களும் உள. அப்பொழுதெல்லாம், எதிர்த்தவருக்கிரங்கி, யேவியவர்களையும் பொறுத்துக்கொண்ட மிக மேலான தாளாண்மையை நமது தலைவரிடம் கண்டதுண்டு.

இப்படியெல்லாம் மக்கள் பண்பாட்டில் மிக்கவராகி அரசியல் நெறியை மாசின்றி இலங்கச்செய்து நடந்து காட்டிய அண்ணல் அவர் தம் அகத்துறை அமலன் அரங்கத்தரவணையான் அருட்கடல முதத்தால் நீடுழி வாழ வேண்டுமெனப் பல்லாண்டு கூறிப்பணிந்து முடிக்கின்றேன்.

காலத்திற்கேற்ப, எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்க சிறந்த கல்வி முறையை இவர் உருவாக்கினார்.

தேச சேவையில் பெரும் நாட்டம்

வி. கே. ராமசாமி முதலியார்
முன்னாள் மேலவை உறுப்பினர்

பெருந்தலைவர் எம். பக்தவத்சலனாரை அறியாத தமிழ் மக்கள் இலர். ஏன், பாரத நாடு முழுவதும் இவரை நன்கறியும் என்பது மிகையன்று. செங்கை மாவட்டத்தில் பொன்னேரி வட்டத்தில் உள்ள மீஞ்சூர் என்னும் சிற்றூரில் உழுவித்துண்ணும் வேளாளர் குடியிற் பிறந்து, தம் தாய் மாமனும், சிறந்த தேசபக்தருமான திரு. முத்துரங்க முதலியார் அவர்களால் உருவாக்கப்பட்டவர் நம் பக்தவத்சலனார். இயல்பாகவே தேச நலனுக்கு உழைக்கும் பண்போடு தோன்றிய இவரை இவரே கூறுகின்றவாறு, சந்தர்ப்பங்களும், சூழ்நிலையும் இவரது அவாவாகிய தேச விடுதலைக்குப் பாடு படும் நிலைக்கு உயர்த்தி விட்டன.

கல்வி கற்கும் பருவத்திலேயே விபின் சந்திர பால், டாக்டர் அன்னிபெசண்டு அம்மையார், கோபால கிருஷ்ண கோகலே முதலிய விடுதலைத் தொண்டர்களின் சொற்பொழிவுகளை இவர் விடாமல் கேட்டு வந்தார். விவேகாநந்தரின் நூல்கள் இவருடைய தேசீய உணர்ச்சிகளை விரிவுபடுத்தி அவற்றில் ஆழ்ந்த பற்று கொள்ளுமாறு செய்தன. விடுதலை வீரர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் இவரை நாட்டின் நலனுக்குழைக்கும் எண்ணத்தை வளர்த்தன. திலகர் பெருமான் சென்னை கடற்கரையில் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததென்று இவர் பெருமையாகப் பேசுவார். பிரம்ம ஞான சமாஜம் தேசீய உணர்ச்சியின் ஒரு பகுதியே யென்னும் எண்ணம் இவருக் கிருந்தமையால் அதிலும் பங்கு கொண்டார்.

குடும்பத்தில் உண்டான குழப்பத்தால், இளம் பருவத்தில் இவரது கல்விக்குத் தடைகள் உண்டாயின. ஆயினும் இவர் தம் தாய் மாமனாகிய திரு. முத்துரங்க முதலியார் அவர்களின் முயற்சியால் சட்டப்படிப்புவரை இவர்தம் படிப்பு வளர்ந்தது. இவருக்கு வழக்கறிஞராய் இருப்பதில் ஈடுபாடில்லை. தேச சேவை செய்வதிலேயே இவர் நாட்டம் சென்றது.

நாட்டின் விடுதலைக்காகக் காந்தியடிகளாரின் தலைமையில் காங்கிரஸ் மகாசபை நடத்திய போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழகத் தலைவர்களுள்ளும் முன்னணியில் நின்றவர் இவர். ஏறக் குறைய ஐம்பது ஆண்டு அரசியல் அனுபவம் உள்ள இவர் சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொண்டு தடியடி பட்டிருக்கிறார். பலமுறை சிறை சென்று அங்கு மிகக் கொடுமையான துன்பங்களை அனுபவித்திருக்கிறார். தம் வீட்டைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் நாட்டுக்கு உழைப்பதிலேயே காலம் கழித்திருக்கிறார்.

நாடு விடுதலை பெற்றபின் நம்மவர் ஆட்சியை ஏற்றபோது அமைக்கப்பட்ட அமைச்சர்கள் அவைகளில் வெவ்வேறு துறைகளில் அமைச்சராகப் பல ஆண்டுகளும், முதல் அமைச்சராகச் சில ஆண்டு களும் பதவியேற்று மக்களுக்குப் பல நன்மைகளையும் புரிந்திருக்கிறார். காலத்திற்கு ஏற்ப எல்லாரும் ஒப்புக் கொள்ளத் தக்க சிறந்த கல்வி முறையை உருவாக்கினார். ஆங்கிலத்தின் சிறப்பையும் இன்றியமையாமையையும் உணருவதால் தாய் மொழியைப் புறக் கணித்தல் கூடாது என்றும், அறிவைச் சிறந்த முறையில் அளிக்க வல்ல கருவி தாய்மொழியே என்றும் உணர்ந்து மாணவர்களும் அவ்வாறு கற்றுத் தெளிய வேண்டும் என்னும் கருத்தோடுதான் கல்வியில் புதிய திட்டத்தை உருவாக்கினார்.

இவர் விவசாயத் துறை அமைச்சராகப் பதவியேற்றபோது உணவு நிலை மிக மோசமாக விருந்தது. இவர் வெளிநாட்டில் நடக்கும் வேளாண்மை முறையை அறிந்து வந்து நம் மக்களுக்குக் கூறியதால் நல்ல விளைவு உண்டாயிற்று. உற்பத்தி பெருகிற்று. தொழிலாளர் அமைச்சராய் இருந்தபோது தொழிலாளர் விடுமுறைச் சட்டத்தைக் கொணர்ந்தார். தொழிலதிபர்கள், தொழிலாளர் ஆகியவர் இடையே நல்லுறவு பெருகினால்தான் தொழில் வளர்ச்சி அடையும் எனக் கருதி அதற்கானவன செய்தார்.

இவர் உள்துறை அமைச்சராய் இருந்தபோது பாரபட்ச மற்றவராய் நற்பெயர் எடுத்தார். போலீஸ் அமைச்சராயிருந்த போதும் எளிய தோற்றத்துடனே விளங்கினார். இவர்தாமா போலீஸ் அமைச்சர் என்று மக்கள் கூறத்தக்க அளவுக்கு உடை முதலியவற்றில் எளிமையையே மேற்கொண்டிருந்தார்.

சாதி வேறுபாடு கூடாது என்பது இவரது சிறந்த கொள்கை. சமயப் பற்று இவருக்கு மிகுதியாக உண்டு. பல திருக்கோயில்கள் இவரால் நன்னிலை அடைந்தன. தருக்கற்ற நிலையில் அவரவர் பண்பாடறிந்து நடந்து கொள்ளும் இயல்பினர். தமிழ்மொழியில் நல்ல பற்று கொண்டு பல தமிழ் நூல்களைச் சிறந்த முறையில் கற்றோரும் மற்றோரும் பாராட்டும் வண்ணம் எழுதிப் புகழ் அடைந் துள்ளார். இவருக்குப் பேச்சுவன்மையிலும் நல்ல ஆற்றல் உண்டு.

வாழ்க பக்தவத்சலனார், வளர்க அவர்தம் தொண்டு.

தமிழக எல்லைக்கு அப்பால் எல்லா ஊர்களிலும் தமிழ்த் துறை இருப்பதற்கு முதற் காரணர் இவரே.

'மனித'ஞக வாழ்கின்றவர்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

திரு. மீ. பக்தவத்சல முதலியார் அவர்கள் தமிழக வரலாற்றில் நிலைத்த இடம் பெற்றவராவர். இளமை முதற்கொண்டே நாட்டு வாழ்வே தம் வாழ்வெனக் கொண்டு, உரிமைப் போரில் பங்கு கொண்டு தொடக்க நாளில் சிறைத் துன்பத் துழன்றவர். இவருக்கு வழிகாட்டியாகவும் ஒளி விளக்காகவும் நின்றவர் இவர்தம் மாதுலர் பேட்டை முத்துரங்க முதலியார் அவர்களாவர்.

நல்ல பண்பட்ட குடியிற் பிறந்ததோடு நற்பண்புகள் பல நிரம்பப்பெற்று, அரசியல் நெறியறிந்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் நம் பக்தவத்சலனுர் அவர்கள். இளமையிலே அறிவும் திறனும் பெற்றுச் செய்வன திருந்தச் செய்யும் செயல் நல முற்றவராதலின் இவர் அரசியல் வாழ்வில் தெளிவினைக் காண முடிந்தது. இவர் பல துறைகளின் அமைச்சராகவும் முடிவில் முதலமைச்சராகவும் பணியாற்றியபோது, மேற்கொண்ட துறைகள் அனைத்திலும் திறம்படச் செயலாற்றிய பண்பு நாடறியும். பொதுப்பணி அமைச்சராக இருந்த காலத்தில் மின்னியல் வளர்ச்சியும் ஊர் தொறும் பாதை அமைத்தமையும், சிறப்பாக சென்னை பற்றிய ஆந்திரர் கிளர்ச்சிக் காலத்தில் சென்னை வளர இவர் செய்த முயற்சி சிறந்த ஒன்று. உள்ளவற்றைச் செம்மை செய்த வகையும் யாரும் மறக்க முடியாது. இறைபணித் துறையை ஆண்ட காலத்தில் பல கோயில்கள் நலமுற்றன — வளம் பெற்றன. கல்வித்துறையிலும் அவர் கல்வி அமைச்சராக இருந்தபோது பல ஆக்கப் பணிகளைக் கண்டார். தமிழக எல்லைக்கு அப்பால் தில்லி தொடங்கி எல்லா ஊர்களிலும் — பல பல்கலைக்கழகங்களிலும் — தமிழ்த்துறை இருப்பதற்கு முதற் காரணர் திரு. பக்தவத்சலமே என்ற உண்மை பலர் அறிந்திருக்க முடியாது. எனினும் உண்மை அதுதான். பிற

மாநிலங்களில் தமிழ் வளர வேண்டும் என்ற விருப்பால் அவ்வந் நிலத்துப் பல்கலைக் கழகங்களுக்கும், தமிழ்ச் சங்கங்களுக்கும் துறை அமைப்பதற்கும், மாளிகை எழுப்புவதற்கும் மானியம் வழங்கிய பெருமை இவரையே சாரும். இவ்வாறே எல்லாத்துறையிலும் இவர் பண்பு தெளிவுறும். எல்லாவற்றிற்கும் மேலாக இவரது உள்ளம் 'இணைந்த பாரத' வளர்ச்சியினையே உயர்ந்ததாகக் கருதிற்று.

பக்தவத்சலம் அவர்கள் அனைத்திலும் மேலாக 'மனித'னாக வாழ்கின்றவர். 'இன்னா செய்தார்க்கும் இனியவை செய்யும்' இவர் தம் மனிதப் பண்பை பல சமயங்களில் நான் கண்டு வியந் திருக்கிறேன். இந்தப் பண்பினை இவர் மேற்கொண்டமையே பலர் உய்ய வழியா யமைந்தது. மற்றும் நல்லது செய்ய ஆற்றா நிலையில் அமைதியாக 'மௌனம்' பூணும் இவர் பண்பும் எண்ணற் குரியது. இவர் கார் மோதிக் காயமுற்று மருந்தகத்தில் இருந்தபோது, குற்றவாளியாகிய ஒரு பெரிய அலுவலர் பற்றி, பண்பாடுற்ற நல்ல முடிவெடுத்து, அவரை வாழவைத்த தன்மையை எண்ணி எண்ணி நான் வியந்திருக்கிறேன்.

எனவே இத்தகைய நல்ல பண்பாளர், தம் ஐம்பது ஆண்டுகளில் ஆற்றிய பணிகளை எண்ணிப் பார்த்து உண்மையிலேயே உளமகிழ் கின்றேன். மனிதன் முற்றும் உயர்ந்தவன் என்று யாரும் சொல்வ தில்லை. எனவே அத்தகைய மனித இனத்தில் 'மனித'னாக வாழ்ந்து செய்வன திருந்தச் செய்த செயல்வீரர் திரு. மீ. பக்தவத்சலம் அவர்கள் நெடிது வாழ்க என வாழ்த்துகிறேன்.

வாழ்க திரு. பக்தவத்சலம் அவர்கள்! வளர்க அவர் தம் வாணாள்!

- டாக்டர் அன்னிபெஸண்டின், உள்ளத்தைக் கிளர்ந்தெழச் செய்யும் தலைமை, அவரது சகாக்களின் உற்சாகமான போக்கு, அவர் நடத்திய நியூ இந்தியா பத்திரிகை, திரு. வி. க. நடத்திய 'தேசபக்தன்' பத்திரிகை முதலிய வற்றின் பிடிப்பு என்னை முற்றிலும் சூழ்ந்தது. இந்தப் பத்திரிகைகளின் பிரதிகளை நண்பர்கள் தெருக்களிலே விற்பார்கள். நான் இவற்றில் எழுதுவதுண்டு.

பக்தவத்ஸலம்.

சமுதாயத்தின் கீழ்த்தளத்தில் கிடக்கும் மீனவ மாணவர்களுக்கு முதன் முதலாகச் சலுகைகள் வழங்கியவர் இவர்.

மெய்ப்பொருள் காணும் நுண்ணறிவு

டாக்டர் தி. முத்து கண்ணப்பன்

1931 என்று நினைக்கிறேன். சென்னையில் காங்கிரஸ் கூட்டம் ஒன்று நடந்தது. நான் அந்தக் கூட்டத்திற்குப் போயிருந்தேன். அதற்குப் பல தலைவர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவர் சற்றுக் குட்டையான உருவம்; சுமாரான சிவப்பு நிறம்; ஒளி மிகு பார்வை; சிறுகச் சிறுக அடிவைத்து, துறு துறுவென நடந்து வந்தார். அவரை யார் என அறிந்து கொள்ள என் பிஞ்சு மனம் துடித்தது. அருகிலிருந்த உறவினர் திரு. சுந்தரராஜனைக் கேட்டேன். ''அவர் தாம் திரு. எம். பக்தவத்சலம் பி.ஏ., பி.எல். தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் முன்னணியில் உள்ளவர்களில் ஒருவர்; செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஆனால் சென்னையில்தான் வசிக்கிறார்'' என்றார். அன்றுதான் முதலியார் அவர்களை முதன் முறையாக நான் அறிந்துகொண்டேன்.

தமிழ்நாட்டுத் தலைவர்களில் மிகச் சிறந்தவர்—பெரியவர்—திருவாளர் சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள். திருமாலே கண்முன் காட்சியளிப்பது போன்றிருக்கும் அவர் தோற்றம். மக்களிடம் பற்றும் பாசமும் பரிவும் கொண்டு இன்முகத்தோடு பழகுவார். அவருடைய குறைகளைக் கேட்டறிந்து அவற்றைப் போக்குவதில் நாட்டம் கொண்டவர். ஏழை எளிய மக்கள் அவரைக் கண்டாலே தம் குறை தீர்ந்ததாகக் கருதி மகிழ்வார்கள். அப் பெரியாரை இளமையிலேயே தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது.

அறிமுகம்

ஒரு நாள் நாசரத் பேட்டையிலுள்ள அவரது இல்லத்தில் அவருடன் பேசிக்கொண்டிருந்தபோது திரு பக்தவத்சலம் அவர்கள் அங்கு வந்தார்கள். பெரியவர், அவருக்கு என்னை அறிமுகம் செய்து

வைத்தார். ''இந்த இளைஞர் திருவான்மியூரைச் சேர்ந்தவர்; தேசபக்தியும் தொண்டு செய்யும் ஆர்வமும் கொண்டவர். எதிர் காலத்தில் முன்னுக்கு வரக்கூடியவர்'' என்று அவர் கூறிய அறிமுகக் குறிப்புரை இன்றும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அன்று என்னை உரியவரிடம் பணி செய்ய ஒப்படைத்தது போன்ற உணர்ச்சி என் உள்ளத்தே தோன்றியது. பிறகு என்னைக் காணும் போதெல்லாம் திரு. பக்தவத்சலம் அவர்கள் அன்போடு விசாரிப்பார். அவர் பேசும் கூட்டங்களுக்குத் தவறுமல் போவேன்.

அவரது ஆழ்ந்த அரசியல் ஞானம், சற்றும் பதட்டம் இல்லாமல் அமைதியோடு சிந்தித்துச் செயல் புரியும் பாங்கு, சிக்கல்களைத் தீர்ப்பதற்குரிய பரிகாரத்தை விரைந்து கூறும் திண்ணிய அறிவுரை, உள்ளத்திலே அரசியல் பற்றிய குழப்பங்களோ சிக்கல்களோ எவ்வளவு இருந்தாலும் அவற்றைப் பிரதிபலிக்காமல் சலனமற்று தோன்றும் முகம், எப்பொருள் எத்தன்மைத் தாயினும், யார் யார் வாய்க்கேட்பினும் அதன் மெய்ப்பொருள் காணும் நுண்ணறிவு, ஏழை எளியவர்களைக் கண்டு இரங்கி உதவும் ஈர நெஞ்சம், உச்சி மீது வானிடிந்து விழுகின்ற போதிலும் நிலை கலங்காத அச்சமற்ற திண்மை, அரசியல் நேர்மை, அனைத்திலும் மேலாக அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதில் அழுத்தமான நம்பிக்கை, நாட்டின் நலனுக்காக எதையும் விட்டுக்கொடுக்கும் தியாக சிந்தை, பகைவர்க்கும் அருளும் பண்பு—இவையெல்லாம் என்னைப் பெரிதும் கவர்ந்தன. இவ்வருங்குணங்கள் அனைத்தும் ஒருங்கே படைத்துள்ள பிறரைக் காண்பது அரிது—அரிது என்பதே என் உறுதியான நம்பிக்கை.

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் முதலிய கீழ்நிலையிலுள்ள மக்கள் முன்னணிக்கு வந்து கல்வியிலும், நாகரீகத்திலும், பழக்க வழக்கங்களிலும் ஏனைய உயர்நிலையிலுள்ள சமுதாய மக்களோடு சம நிலையில் வாழ வேண்டுமென்பதில் அவர் பேரார்வம் கொண்டவர். அந்த முறையில் அவர் என்பால் அன்பும் ஆதரவும் காட்டி வந்தார்.

யாரையும் கண்டதும் எடை போட்டு விடுவதில் மிகவும் வல்லவர். அவர் போடும் எடை தவறுவதில்லை. ஒருவரை நல்லவர், வல்லவர், நேர்மையானவர் என்று கருதுவாரானுல் அவருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய பின்வாங்க மாட்டார்.

''இதனை இதனுல் இவன் முடிக்கும் என்று அறிந்து
அதனை அவன்கண் விடும்''

இயல் புடையவர். ''தேரான் தெளிவும், தெளிந்தான் கண் ஐயுறவும் பேரா இடும்பை தரும்'' என்பதில் முழு நம்பிக்கை கொண்டவர்.

கைக்கெட்டியது

1946 என்று நினைவு. அவ்வை ஆசிரமப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபொழுது அங்குத் திரு முதலியார் அவர்களை அழைத்து இருந்தோம். மாணவிகளின் பல தரப்பட்ட கைத்தொழில் பொருட்களையெல்லாம் பார்வை யிட்டார். பாய் முடைதல், விசிறி செய்தல், ஓலைப் பெட்டிகள் கிலுகிலுப்பைகள் செய்தல் போன்ற குடிசைத் தொழில்களைக் கற்பிக்கும் பொறுப்பினையும் நானே மேற்கொண்டிருந்தேன். வயது வந்தோருக்குக் குறுகிய காலத்தில் எழுதப் படிக்கக் கற்பிக்கும் தொண்டிலும் ஈடுபட்டிருந்தேன். இவையனைத்தும் அவர் என்பால் கொண்டிருந்த அன்பினையும், நல்லெண்ணத்தையும் மேலும் பெருக்கியுள்ளன என்பதை, அவர் அவ்விழா முடிந்து திரும்பிய பொழுது புன்முறுவலோடு என்னைப் பார்த்த பார்வையிலிருந்து தெரிந்து கொண்டேன்.

முதலியார் அவர்களின் பல அரிய குணங்களில் ஒன்று தாம் ஒருவர்க்கு ஒன்று செய்ய வேண்டுமென்று எண்ணினால் அது நிறை வேறி நிலைபெறும் சமயம் வரை அதைப்பற்றி உரியவர்களிடம் வெளியிடாமல் அந்தரங்கமாக வைத்திருக்கும் அரிய குணமாகும். இதற்கு என் வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

முன்னர் குறிப்பிட்ட அவ்வை ஆசிரமத்தைப் பார்வையிட்டுச் சென்ற சில நாட் கழித்து என்னைக் கூப்பிட்டனுப்பினார். சென்று கண்டபோது ''பொதுக் கல்வித் தகுதி, தொண்டு செய்யும் மனப் பான்மை, குடிசைத் தொழில்களில் ஓரளவு பயிற்சி இவை பெற்றுள்ளவர்கள் யாராவது உங்களுக்குத் தெரிந்தவர்கள் இருந்தால் இரண்டொரு நாட்களில் எனக்குச் சொல்லுங்கள். உங்களைப் போன்ற நிலையில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். அரசாங்கத்தில் அப்படி ஒரு அலுவலரை நியமிக்க எண்ணியிருக் கிறேன்'' என்று கூறினார். இரண்டொரு நாள் சென்ற பின்னர் அவரைப் பார்த்தபோது ''நான் அன்று சொன்னதைக் கவனித்தீர்களா'' என்று கேட்டார். சீக்கிரத்தில் விசாரித்துச் சொல்லுவதாகச் சொன்னேன். ஆனால் மறந்து விட்டேன். ஒரு வாரத்துக்குப்பின் டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் என்னிடத்தில் ''உங்களுக்கு ஒரு பொறுப்பான பதவி கொடுக்க வேண்டுமென்று தான் திரு. பக்தவத்சலம் உங்களைக் கேட்டிருந் தாராம். அவர் எதிர்பார்த்தபடி நீங்கள் பதில் சொல்லவில்லையாம். அத்துடன் உங்களை அவ்வை ஆசிரமப் பொறுப்பிலிருந்து அப்பணிக்கு அழைத்துக்கொண்டால் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி வருத்தப் படுவார் என்று நான் சொன்னதால் திரு. வெங்கடாசலபதி என்பவரை அப்பதவிக்கு நியமித்து விட்டார்'' என்று சொன்ன போது உண்மையில் ஏமாற்றம் அடைந்தேன்.

1957 நவம்பர் மாதம்; ஒரு நாள் முதலியார் அவர்களைக் கண்டு செங்கற்பட்டு மாவட்டப் பொதுநல அலுவலர் பதவி காலியாக இருக்கிறதென்றும், அதற்கு நான் தகுதியானவன் என்று கருதினால் நியமிக்குமாறும் கோரினேன். உடனே சற்றுச் சிந்தித்தார். அவர் மனத்தில் வேறு ஏதோ ஒரு எண்ணம் இருப்பது போல் எனக்குத் தோன்றியது. உடனே தகவல் விளம்பரத்துறை இயக்குநராயிருந்த திரு. திரவியம் அவர்களை அழைத்துப் பேசினார். பின்னர் திரவியம் அவர்கள், 'விரைவில் அந்த வேலைக்கு உத்தரவு வரும்' என்று என்னிடம் கூறினார். ஆனால் மூன்று மாதங்களாகியும் ஒரு செய்தியும் தெரியவில்லை. அப்போது சென்னை மலைச்சாலைக் கலைக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி செய்து கொண்டிருந் தேன். 1958 பிப்ரவரி மாதம் 18-ஆம் தேதி முதலியார் தொலை பேசியில் என்னை அழைத்திருந்தார்.

தொலைபேசியில் 'நீங்கள் இந்த வேலையை ராஜினாமா செய்து விட வேண்டியிருக்கும்.........' என்று தொடங்கிப் பேசினார். நான் திடுக்கிட்டு, ''வேண்டியதில்லையே: கல்வித் துறையிலிருந்து தகவல் விளம்பரத்துறைக்கு என்னை மாற்றி உத்தரவிட வேண்டும்; அவ்வளவுதான். ராஜினாமா செய்தால் அரசாங்க அலுவலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுமே'' என்றேன். அப்போதுதான் உண்மையை வெளியிட்டார்.

''இல்லை, உங்களை மேலவை உறுப்பினராகக் கொண்டுவர முடிவு செய்திருக்கிறோம். மாலையில் தமிழ்நாடு காங்கிரஸ் அலுவல கத்துக்குச் சென்று உங்களைப் பற்றிய குறிப்பு தயார் செய்து வைத்திருப்பார்கள். அதில் கையெழுத்து போட்டுவிட்டு, இரவு எட்டு மணிக்கு என்னை வீட்டில் பாருங்கள்.'' என்று கூறினார். அவ்வாறே, வீட்டில் அவரைச் சந்தித்தபோது ''உங்களை எம்.எல்.சி. யாகக் கொண்டுவர வேண்டுமென்று பல நாட்களாய் நினைத்துக் கொண்டிருந்தேன். முன்னர் செங்கை மாவட்டப் பொது நல அலுவலர் வேலையைப்பற்றி நீங்கள் கேட்டபோது மீண்டும் அந்த எண்ணம் வலுவடைந்தது. காமராஜ் அவர்களிடம் இதனைத் தெரிவித்து அவர் இணங்கினால் எம். எல். சி. ஆக்குவது, இல்லா விடில் நீங்கள் விரும்பியபடி மாவட்டப் பொது நல அலுவலர் பணியில் அமர்த்துவது என்று எண்ணியிருந்தேன். காமராஜிடம் உங்கள் பெயரைக் குறிப்பிட்டதும் மகிழ்ச்சியோடு இணக்கம் தெரிவித்தார். முழுநேரப் பொது நலத் தொண்டராகப் பணி செய்வதற்கு உங்களுக்கு நல்ல வாய்ப்பு. சமூகத்துக்கும் சிறப்பான முறையில் தொண்டு செய்யலாம்'' என்றார்.

நான் இந்தப் பதவியை நினைத்ததும் இல்லை; விரும்பியதுமில்லை; என்னை நாடி வந்தது. அதற்குக் காரணமாயிருந்தவர்களுக்கு முழு

மன நிறைவு கொடுக்க வேண்டும் என்று என் உள்ளம் எனக்கு அறிவுறுத்திக்கொண்டே இருந்தது. அந்தப் பொறுப்புணர்ச்சியோடு அயராது உழைத்து வந்தேன். திரு. பாலசுப்பிரமணிய அய்யர், திரு. சேஷாசாரியார் போன்ற பெரியவர்கள் என் முன்னிலையிலேயே நான் பொறுப்போடு கடமையைச் செய்வதாக முதலியாரிடம் குறிப்பிட்டபோது அவர் முகத்தில் திருப்திக்குறி தென்பட்டதை யறிந்து மகிழ்ச்சியடைந்தேன். நம் மீது நம்பிக்கை கொண்டு ஒரு பொறுப்பினை ஒப்படைப்பவர்கள், நமது நடத்தையினையும் செயலையும் கண்டு மன நிறைவும் மகிழ்ச்சியும் கொள்வார்களாயின் அதைவிட நமக்குப் பேரானந்தம் என்ன இருக்க முடியும்?

அவர் என்னை எம். எல். சி யாகக் கொண்டுவந்ததற்கு மற்ரெரு காரணமும் உண்டு. நான் ஒரு தமிழ்ப் புலவன்; பிற மொழிகள் பால் வெறுப்பில்லாத தமிழ்ப் பற்றுக் கொண்டவன் என்பதுதான். தமிழறிந்தவர்களுக்குச் சட்ட சபையில் இடமளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டவர் முதலியார். ஒரு தமிழ்ப் புலவரை எம். எல். சி. யாகக் கொண்டுவர இருக்கிறேம் என்று சட்டசபை அங்கத்தினர்கள் பலரிடம் கூறியிருக்கிறுர். முதலியார் உண்மையான தமிழ்ப் பரம்பரையிலே தோன்றியவர். சிறந்த தமிழறிஞர். அவர் தமிழ் மொழியின் மீது கொண்டிருக்கும் பற்றும் மதிப்பும் ஈடு இணையற்றது. அவர் உயர் நிலைப்பள்ளியில், சிறந்த தமிழ்ப் பெரும்புலவரும், கலித்தொகை ஆராய்ச்சியுரை ஆசிரியரு மான திரு. அனந்தராமையர் அவர்களிடம் தமிழ் கற்றவர். மாநிலக் கல்லூரியில் தமிழ்த் தாதா டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் மாணவராய் இருந்தவர். நாலாயிர திவ்வியப் பிரபந்தம், தேவாரம், திருவாசகம், திருக்குறள் போன்ற நூல்களை ஆழ்ந்து கற்றவர். விவசாயம் சம்பந்தமான உலகப் பேர் அரங்கம் ஒன்றில்,

''இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்''—

என்ற திருக்குறளைக் குறிப்பிட்டு, உலகத்தார் எல்லாரும் பொது மறையின் பெருமையினைக் கண்டு அதிசயிக்க வைத்த அருந்தமிழ்த் தொண்டரைத் தமிழுலகம் மறக்கலாமோ? இத்தகைய ஒப்பற்ற தமிழ்த் தலைவரை — உத்தமத் தமிழ்த் தொண்டரை குறுகிய நோக்கம் கொண்ட சிலர் புரிந்துகொள்ளாதது துர் அதிர்ஷ்டம் என்று தான் சொல்ல வேண்டும்!

நழுவ விட்டேன்

1964 ஏப்ரலோடு எனது மேலவை அங்கத்தினர் பதவி முடிந்து விட்டது. அரசியலில் தொடர்ந்து இருக்க எனக்கும் உண்மையில் விருப்பில்லை. அரசியல் சேற்றிலிருந்து உதறிக் கரையேறிவிட வேண்டும் என்றே நானும் முடிவு செய்திருந்தேன். ஏற்கெனவே

அரசாங்கக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணி செய்து சீரிய முறையில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த என்னை அரசியலுக் கிழுத்து இப்படிப் பாதியிலே தள்ளி விட்டால் எனது வருங்காலமும் வாழ்க்கையும் என்ன ஆவது என்ற கவலை முதலியாருக்கு இருந்ததை நான் உணர்ந்தேன். ஒரு நாள் அவர் என்னிடத்தில், ''தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தில் உங்களை வேலையில் அமர்த்துகிறேன். அந்தச் செயலாளரோடு கொஞ்ச நாள் பழகுங்கள்'' என்று கூறினர். அது எனக்குச் சம்மதமாக இல்லை. என் நிலைக்கும், தரத்திற்கும் ஒத்ததாகத் தோன்றவில்லை. எண்ணிப் பார்த்தபின் முதலியாரிடம், ''நீங்கள் சொல்வதை இன்று வரை எப்பொழுதுமே நான் மறுத்ததில்லை. நீங்கள் குறிப்பிட்ட இந்த வேலையை ஒத்துக் கொள்ள என் மனம் இடந்தரவில்லை. தயவு செய்து தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள்'' என்று சொன்னேன். அவர் மவுனமாக இருந்தார்.

நான்கைந்து மாதங்கள் ஆன பிறகு அந்தத் துறைக்கு ஒரு பொறுப்பான அதிகாரி நியமிக்கப்பட்டார். அப்போது அதைப் பற்றி முதலியாரிடம் குறிப்பிட்டேன். ''அதை மனத்தில் வைத்துக் கொண்டுதான், 'அந்த வேலையில் அமர்ந்து கொஞ்ச நாள் பழகுங்கள்' என்று சொன்னேன். போதிய பயிற்சியும் அனுபவமும் வந்தபின் அப்பெரிய பதவிக்கு உங்களைப் போடத்தான் திட்ட மிட்டிருந்தேன். நீங்கள்தான் மறுத்து விட்டீர்கள்'' என்று சொன்னதும், மீண்டும் ஒரு முறை நல்ல வாய்ப்பை நழுவ விட்டதை நினைத்து வருந்தினேன்.

அந்த ஏமாற்ற உணர்ச்சியால் ''அதை முன்னரே நீங்கள் சொல்லியிருக்கலாமே.........'' என்று கவலை தோன்றிய குரலில் குறிப்பிட்டேன்.

''இதையெல்லாம் முன் கூட்டியே சொல்லிவிட வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்ப்பது தவறு,'' என்று என்னைப் பரிவோடு பார்த்தார்.

எடுத்த எடுப்பிலேயே முதலியார் எதையும் வெளியிட்டு விட மாட்டார். எதையும் சிந்தித்து திட்டவட்டமாக முடிவு செய்த பின்புதான் சொல்வார். சொன்னதைத் தயங்காமல் செய்தால் எப்போதுமே கை மேல் பலன் காத்திருக்கும். ஆனல் காலம் கடந்தபின் புரிந்து கொண்டதால் என்ன பயன்?

உண்மை அறிந்திட

ஒரு முறை எனது சொந்தக் கிராமத்தில் இரண்டு கட்சிகளுக்குள் கலகம் நடந்தது. ஒரு கட்சியின் தலைவனை இன்னொரு கட்சியினர் பலமாக அடித்து விட்டார்கள். அதற்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லை. போலீஸ், அடிதடி சம்பந்தமான விவகாரங்கள்

முதலியவற்றில் எப்போதுமே நான் தலையிடுவதில்லை. ஆனல் அடிப்பட்ட ஆளுக்கும், அவனது கூட்டத்தினருக்கும் என்மேல் ஆத்திரம். அதனல் நான் ஏதோ அந்தக் கும்பலின் எதிரிகளுக்கு உதவினதாகச் சந்தேகம். அப்பொழுது அந்தப் பகுதியின் போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவர், நடுநிலை வகிக்காமல் ஒரு சார்பாகவே இருந்தார் என்பது எனக்குத் திட்டவட்டமாகத் தெரியும். எப்பொழுதுமே யார் நடு நிலைமை தவறினலும் என் மனம் வெறுக்கும். அது என் சுபாவம். அந்தக் காவல்துறை அதிகாரி அவரது உண்மை நிலையினையும், சேட்டைகளையும் நான் புரிந்து கொண்டு இருக்கிறேன் என்பதனை உணர்ந்திருந்தார். அதனல் அடிபட்ட ஆளும் அந்தக் காவல் அதிகாரியும் சேர்ந்து திட்டமிட்டு, என்னுடைய தூண்டுதலால்தான் கலகமும் அடிதடியும் நடந்தன என்று என்னை முதல் குற்றவாளியாக ஆக்கி, வழக்கு ஜோடித்து என்னைக் கைது செய்யவும் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதைக் கேட்டதும் என் மனம் வேதனையடைந்தது. உடனே முதலியார் அவர்களைக் கோட்டையில் கண்டு செய்திகளைச் சொன்னேன். ஒரு சாரார் நீண்ட நாட்களாய் என்மீது வேண்டு மென்றே பகைமை கொண்டிருக்கிருர்கள் என்பது அவருக்கு ஏற்கெனவே தெரியும். இருந்தாலும், உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைத்தார் போலும். உடனே மாவட்ட காவல் துறை அதிகாரியை அழைத்து ''இப்படி இவர் மேல் கூறப்படுகிறது, கைது செய்யவும் முயற்சி நடக்கிறது, இதன் காரணத்தையும் உண்மையையும் நீங்களே பொறுப்பேற்றுக்கொண்டு, நேரில் சென்று ஆராய்ந்து அறிந்து செய்தியைக் கூறுங்கள்'' என்று உத்தர விட்டார். எனக்கும் நிம்மதி ஏற்பட்டது.

மூன்று நாட்கள் கழித்து எனக்கும் அக்கலகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை, பழைய குடும்பப் பகைக்காகப் பழி தீர்த்துக் கொள்ளச் செய்த திட்டமே இது என்ற உண்மை வெளி யாயிற்று.

நேர்மைக்குப் பாராட்டு

நான் மேலவை அங்கத்தினராக இருந்தபோது செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சிக் குழுவின் அங்கத்தினராயும் இருந்தேன். அதன் சார்பான கல்வி ஆலோசனைக் குழுவின் தலைவராகவும் இருந்தேன். 1962-63 என்று நினைக்கிறேன், கல்விக் குழுவுக்கு வேறு கட்சி அங்கத்தினர் ஒருவர் தலைவராக இருந்தார். அவ்வாண்டு அம் மாவட்டப் பள்ளிகளுக்குரிய பாட நூல்களைக் கல்விக் குழுவே தேர்ந் தெடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருந்தது. பல நூல் வெளியீட்டுக் கழகங்களும் அங்கத்தினர்களுக்கும், மாவட்ட ஆட்சி யாளர்களுக்கும் தங்கள் தங்கள் நூல்களை அனுப்பி யிருந்தார்கள். பாட நூல்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கல்விக்குழு கூட வேண்டும் என்று தலைவர் ஒரு நாளைக் குறிப்பிட்டிருந்தார்.

அதற்கு முன் நாள் மாலே, அவர் தொலே பேசியின் மூலம், ஆறு வெளியீட்டுக் கழக நூல்களேத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றும், அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு வெளியீட்டுக் கழகத்தின் பெயரைக் குறிப்பிடுவதாகச் சிபாரிசு செய்யலாம் என்றும் என்னிடம் குறிப்பிட்டார். எனக்கு அது புதிராக இருந்தது. ''மறுநாள் நடக்கும் கல்விக் குழுக் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியாளர் கொடுக்கும் நூல்களேயெல்லாம் குழுவினர் பெற்றுக் கொண்டு அவற்றை நன்ருகப் படித்துச் சிறந்த ஆறு நூல்களேத் தேர்ந்தெடுக்கலாம். அதுதான் முறை'' என்று அவருக்குச் சொன்னேன். அவர் சொன்ன திட்டத்தின்படி வெளியீட்டுக் கழகத்தினர்களிடமிருந்து அங்கத்தினர்களுக்குப் பெருத்த தொகை கிடைக்கும்; ஆறு பேர்களும் அதனேப் பங்கிட்டுக் கொள்ளலாம் என்ற உண்மை புலஞயிற்று.

அதைப் புரிந்து கொண்டதும், ''இந்த நேர்மையற்ற முறையினே நமது மாவட்டக் கல்விக் குழுவில் புகுத்த முனேயாதீர்கள்'' என்று கடுமையாகக் கூறிவிட்டேன். மறு நாள் பத்து மணிக்குக் கல்விக்குழுக் கூட்டம் நடந்தது. மாவட்ட ஆட்சியாளரின் தனி அலுவலர் வந்திருந்த புத்தகங்களே யெல்லாம் அங்கத்தினர்கள் பார்வைக்கு வைத்திருந்தார். உடனே தலேவர் எழுந்திருந்து, ஆறு வெளியீட்டுக் கழகத்தினேச் சார்ந்த ஆறு நூல்களின் பெயர்களேச் சொல்லி, ''இக்குழு ஏகமனதாக இவற்றைத் தேர்ந்தெடுக்கின்றது.'' என்ற தீர்மானத்தை முன் மொழிந்தார். வேெருரு அங்கத்தினர் அதை வழி மொழிந்தார். இவர்கள் முன்கூட்டியே இப்படித் திட்டமிட்டுத் தீர்மானித்திருக்கின்ருர்கள் என்ற உண்மையைப் புரிந்து கொண்டேன். என்ருலும் எனக்கு இது அதிர்ச்சியாகவே இருந்தது. உடனே நான் எழுந்து, ''இது முறையற்ற செயல். உத்தியோக பூர்வமாக இப்பொழுது தான் நூல்கள் அங்கத்தினர்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே இப்படித் திட்டமிட்டு இங்குத் திடீரென்று தீர்மானம் நிறைவேற்றுவது நேர்மையற்றது. இதை நான் பலமாக மறுக்கிறேன்'' என்று கூறி என் மறுப்புரையைக் காரணத்தோடு குழுவின் குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு கூறிவிட்டு வெளியேறி விட்டேன்.

வெளி நடப்பு செய்த பொழுது, ''நன்றி, உங்கள் பங்கும் எங்களுக்குக் கூடி வருகின்றது.'' என்று அவர்கள் கிண்டலாக—ஆனல் தெம்போடு கூறினர்கள். அப்போது முதலியார் அவர்கள் வெளி நாடு சென்றிருந்தார்கள். காமராஜ் அவர்களிடம் அப்படியே நடந்ததைக் கூறினேன். அவரும் மாவட்ட ஆட்சியாளரிடம் கூறவே அத்தீர்மானம் செயல்படுத்தப் படாது நின்றுவிட்டது.

மாவட்டப் பள்ளிகளுக்கு அவர்கள் நினேத்ததுபோல் பாட நூல்கள் தேர்ந்தெடுத்து வழங்கப்படவில்லே. பாவம், அந்த வெளியீட்டுக் கழகங்களுக்கு ஏமாற்றம்—பெரிய நஷ்டம்!

வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் முடிந்து திரும்பிய பின்பு, முதலியார் என்னைக் கூப்பிட்டிருந்தார். இந்தச் செய்தி அனைத்தும் நன்றாக அறிந்து கொண்டிருந்தார். என்னைப்பார்த்து ''முத்துக் கண்ணப்பருக்கு, வாழவும் தெரியவில்லை, பிறரை வாழவும் விட மாட்டார் என்று கிண்டல் செய்கிறார்களே'' என்று புன்முறுவலோடு கூறினார்.

''உங்கள் நேர்மையையும், கண்டிப்பையும் பாராட்டுகிறேன்'' என்று அவர் பார்வை பிரதிபலித்தது.

மீனவர்க்கு உதவி

சலவைத் தொழிலாளர், க்ஷவரத் தொழிலாளர் என்ற இரண்டு சமூக மாணவருக்கும், ஹரிஜன மாணவர்களுக்கு வழங்கும் கல்விச் சலுகை ஒன்று வழங்கப்படுவதையறிந்தேன். அதாவது அந்த இரண்டு சமுகத்தையும் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் உணவு விடுதிகளில் தங்குவதாயின் அவர்களுக்கு ஹரிஜன மாணவர் களுக்குத் தருவதைப் போன்ற பண உதவி அளிக்கப்பட்டு வந்தது. அந்தத் தரத்தில் உள்ளவர்கள்தான் மீனவ சமுகத்தினரும் என்று ஏற்கெனவே அரசாங்கமும் ஒத்துக்கொண்டிருந்தது.

ஆதலால் அப்போதைய ஹரிஜன அமைச்சர் திரு. கக்கன் மூலம் அரசாங்கத்திற்கு மீனவ மாணவர்களுக்கும் அச்சலுகை வழங்கப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருந்தேன். அவரும் மீனவ மாணவர்களுக்கு அச்சலுகையை வழங்க இணங்கினார். அக் கடிதம் முதலமைச்சர் திரு. காமராஜுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு திரு. காமராஜ் அவர்கள் ஒப்புதல் அளிக்காமை யால் அம் முயற்சி பயனற்றதாகி விட்டது. இது எனக்கு வியப்பையும் ஏமாற்றத்தையும் அளித்தது.

பின்னர் முதலியார் அவர்கள் முதலமைச்சரான பிறகு அவர்களுக்கு இந்தச் சலுகை மீனவ மாணவர்களுக்கும் கொடுக்கப் படல் வேண்டும் என்று எடுத்துக் கூறி, உத்தியோகப் பூர்வமாக அரசாங்கத்திற்கும் விண்ணப்பித்தேன். 1967-ஆம் ஆண்டு தொடக் கத்தில் சாதகமான உத்தரவு கிடைத்து விட்டது. கல்வியிலும், பொருளாதாரத்திலும் கீழ்த்தளத்தில் கிடக்கும் மீனவ மாணவர் களுக்கும் அச்சலுகை கிட்டியது. மீனவ மக்கள் முதலியாரை மனமார வாழ்த்தினார்கள்.

அது மட்டுமல்ல, இப்போதைய அரசாங்கம் நியமித்த பிற்பட்டோர் நல ஆய்வுக் குழுவினர் முதலியார் அவர்களை அழைத்து அவரது கருத்துக்களைக் கேட்டபோதுகூட, மீனவ சமூகத்தை அவர் மறந்து விடவில்லை. அச் சமூக முன்னேற்றத்திற்கு முதலிடம் தரப்பட வேண்டும் என்று வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

வியப்பூட்டும் பொறுமை

என்னை அனைத்திலும் அதிகமாகக் கவர்ந்தது முதலியாருடைய பொறுமைக் குணம்தான். அவர் அலுவலகத்தில் இருந்தாலும், வீட்டில் இருந்தாலும் பலர் காண வருவார்கள். வருபவர்களை எல்லாம் தலையசைத்து வரவேற்பார். சொல்லும் குறைகளையும் முறையீடுகளையும் கவனமாகக் கேட்பார். மறுமொழியும் கூறுவார். அதே சமயத்தில் கடிதங்களையும் கோப்புக்களையும் படித்துக் கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பார்.

அதனைப் புரிந்து கொள்ளாத சிலர் தாங்கள் சொல்லுவதைக் கேளாமல் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறாரே என்று கூடக் குறை சொல்வதுண்டு. இது அவரை நன்கு புரிந்து கொள்ளாத குறைதான்.

சிலர் தாங்கள் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லி, அவர் பதில் சொன்ன பிறகும்கூட விடாமல் சண்டித்தனமாக நச்சரித்துக் கொண்டே இருப்பார்கள். பக்கத்தில் இருப்பவர்களுக்குக்கூட அத்தகையவர்கள் மீது எரிச்சல் வரும்; சீறி விழத்தோன்றும். ஆனால் முதலியார் முகத்தில் எந்தவிதச் சலனமும் ஏற்படாது. அவர் ஆத்திரப்பட்டதையோ, உணர்ச்சி வசப்பட்டதையோ, கோபப் பட்டதையோ நான் என்றுமே பார்த்ததில்லை.

''கல்லாய் இருந்தால் கூடப் பொறுமை இழந்து பேசுமே! இப்படி வருபவர்கள் எது கேட்டாலும் அமைதியோடு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறாரே, இப்படியும் ஒரு விந்தை மனிதர் இருப்பாரா!'' என்று பல நாள் எண்ணி ஆச்சரியமடைந்திருக் கிறேன்.

அவரைக் காண வருபவர்கள் கூறவேண்டியதைக் கூறி முடிந்த பின் அவர்கள் தாமாகவே விடைபெற்றுச் செல்வார்கள். யாரையும் போய்வாருங்கள் என்று அவர் முந்திக்கொண்டு சொன்னதை நான் என்றுமே கண்டதில்லை.

ஓர் அரசியல் வாதி ஏறத்தாழக் கால் நூற்றாண்டுகள் அமைச் சராகத் தொடர்ந்து பணியாற்றியுள்ளார் என்ற புதுமையான வரலாற்றினை முதலியார் படைத்துள்ளார் என்றால், அதன் உண்மை யான காரணம் — இரகசியம், அவர் இந்தத் தமிழ்நாட்டின் ஒப்புயர் வற்ற முதன் முதலமைச்சரான சேக்கிழார் பெருமான் பரம்பரையில் வந்தவர் என்பதும், மேலே குறிப்பிட்ட அருங்குணங்களையெல்லாம் ஒருங்கே பூண்டவர் என்பதும்தான்.

அந்த நேர்மையான அரசியல் ஞானி நெடுநாள் வாழ்வாராக!

சிறந்த கலா ரசிகர். கலையின் வளர்ச்சியிலும், கலைஞர்களின் நல்வாழ்விலும் அக்கறை கொண்டவர்.

கலை வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்

கலைஞர் கே. சாரங்கபாணி
பழம்பெரும் திரைப்பட நடிகர்

சிறந்த வைணவ பக்தரும், ஒழுக்க சீலரும், பரம்பரை பரம்பரையாகவே பெருந்தனக்காரரும், அனைத்து மக்களாலும் பேட்டை முதலியார் எனப் பெருமையுடன் அழைக்கப்பட்டு வந்த காந்தீய - தேசிய - சுதந்திரப் போராட்ட வீர தியாக மணியான நமது முத்துரங்க முதலியார் அவர்களின் அருமை மருமகனை நமது மாபெரும் தலைவரும், காந்தீயவாதியுமான, முன்னாள் முதல் வருமான கனம் திரு பக்தவத்சலம் அவர்களின் 76 - வது பிறந்ததின புனித விழா நூலில் அடியேனின் கட்டுரையும் இடம் பெற விரும்பிய விழாக் குழுவினருக்கு நன்றியும், வணக்கமும்.

அப்பா போல் பிள்ளை என்று சொல்லுவதுதான் வழக்கம். அதற்கு மாறுக மாமனைப் போல் மருமகன் எனும் ஒரு புதிய முறையை உண்டாக்கித் தந்தவர்கள் கனம். பேட்டை முதலியார் அவர்களும், கனம். பக்தவத்சலம் அவர்களும்.

1927 - 28 ம் ஆண்டு முதலே கனம். பக்தவத்சலம் அவர்களை நான் நன்கு அறிவேன். 1927 - 28 ல் சென்னை முகாமில் எங்கள் மதுரை பி. ஜெகன்னுதய்யர் அவர்களின் மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபையுடன் அடியேன் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த சமயம், பகலில் காங்கிரஸ் பந்தல் அமைப்பு வேலைகள் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் அங்குதான் இருப்பேன். இரவில் நடிக்க வந்து விடுவேன்.

விடுதலைப்போராட்டக் காலத்தில் கலைஞர்களும் ஆர்வம் காட்டினேம். அந்த ஆண்டில் டாக்டர் எம். ஏ. அன்சாரி அவர்களின் தலைமையில் காங்கிரஸ் மகாசபை அமைப்பு வேலை நடந்த போதும், சென்னை சேத்துப்பட்டு ஏரி அருகே, மகாநாடு நடந்து

வந்தபோதும், நாட்டின் விடுதலைக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாபெரும் தலைவர். எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்களுக்கு மாமனும், மருமகனும் உறுதுணையாக இருந்து அடக்கத்துடனும் - உற்சாகத்துடனும் உழைத்து வந்த அந்நாளைப்போலவே இன்றும் அதே பண்புடன் அனைவருடனும் பழகி தன் கடமையை நாட்டுக்குச் செய்துவரும் (அதிகார மிருந்தாலும், இல்லா விட்டாலும்) பக்தவத்ஸலம் அவர்களைக் காண்கின்றோம்.

பக்தவத்ஸலம் அவர்கள் தொடர்ந்து சுமார் 20 ஆண்டுகள் அமைச்சராக இருந்து பணியாற்றியவர். சிறந்த சங்கீத - நாட்டிய நாடக ரஸிகர். கலையின் வளர்ச்சியிலும் - கலைஞர்களின் நல்வாழ்விலும் அக்கறையுள்ளவர் என்பதை அடியேனைப் போல் நெருங்கிப் பழகிய கலைஞர்கள் நன்கு அறிவார்கள்.

அடக்கமும், வார்த்தையில் நயமும், அன்பும் உள்ளவர். சிறந்த ஒழுக்க சீலர். சட்டத்திற் குட்பட்டு பல பேர்களுக்கு உதவியைச் செய்தவர். எதிர்கால இந்திய அரசியலுக்கு பக்தவத்சலம் போன்ற பழுத்த அரசியல் வாதிகளின் அறிவையும், அனுபவத்தையும், ஆற்றலையும் மக்களாகிய நாம் பயன்படுத்திக் கொள்வது கடமை என்பதை உணருகிறேன்.

பாரதம் சுதந்திரம் அடைந்து 25 ஆம் ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடும் இந்த சுப மங்கள தினத்தில் - சுதந்திரத்திற்கு முன்னும் - பிறகும் - நாட்டு நலனே - மக்களின் நல்வாழ்வே தன் வாழ்வென அல்லும் பகலும் தன் பணியை அடக்கமாக இன்னும் செய்து கொண்டிருக்கும் மாபெரும் தலைவர் பக்தவத்சலம் அவர்களின் நாட்டுத் தொண்டின் சிறப்பை ''இந்திய அரசு'' தனியாகப் பாராட்டி விழா நடத்தி பக்தவத்ஸலம் அவர்களை உலகமறியச் செய்து - வருங்கால சந்ததிகள் இப் பெரியவரின் சீலத்தையும்- தொண்டையும் அறியும் வகை செய்வது நாட்டுக்குச் செய்யும் பெருந் தொண்டாக இருக்கும் என்பது அடியேனின் வேண்டுகோள்.

- இப்போது போல, காலை வேளைகளில் வேலையில்லாமல் இருக்கும் வழக்கம் முன்பு அரசியல் துறையில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானவர்களிடம் கிடையாது. காலை, பகல், இரவு என்ற வித்தியாசமின்றிக் கடுமையாக உழைப்பதில் இளம் வயதிலேயே எனக்குப் பயிற்சி ஏற்பட்டு விட்டது. எனவே தான், இன்று கூட நிறைய அலுவல்களை சோர்வு, தளர்ச்சி இல்லாமல் கவனிக்க முடிகிறது.

பக்தவத்ஸலம்.

1929-1930 லாகூர் காங்கிரஸ்: அமர்ந்திருப்பவர்களில் திரு. சி. என். முத்துரங்க முதலியார்
திரு. சத்தியமூர்த்தி ஆகியவர்களுடன் திரு. பக்தவத்ஸலம்

MADRAS

ஒல்லும் வகைகளிலெல்லாம் பள்ளி ஆசிரியர்களின் நிலையினையும் உயர்த்திய உயர் குணச் செம்மல் இவர்.

பொது வாழ்வில் ஒரு பீஷ்மர்

டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்,
தமிழ்த் துறைத் தலைவர்;
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி.

பண்புடைய பெருமகனார்

''பண்புடையார் பட்டுண்டு உலகம்''

என்றார் நம் வள்ளுவர் பெருந்தகை. அந்தப் பேருண்மைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் நம் அன்புக்கும், கொண்ட பெருமைக்கும் பாத்திரரான உயர் திருவாளர் எம். பக்தவத்சலனார்; ''நின்றவூர் நித்திலம்'' என்று திருமங்கையாழ்வாரால் சிறப்பிக்கப் பெற்ற எம்பெருமான் பக்தவத்சலப் பெருமாளின் பெயரைத் தாங்கியுள்ள பெருமகனார். இவர் பழம்பெரும் தேசபக்தர்களின் வரிசையிலும், தமிழக முன்னணித் தலைவர்களுள் ஒருவராகவும் திகழ்பவர். இன்றைய பொதுவாழ்வில் வீட்டுமாச்சாரியாரின் நிலையிலிருப்பவர்.

நாம் வாழும் காலத்தில் நம்முடன் பரு உடலுடன் நடமாடி அளவளாவிக் கொண்டு எழுபத்தாறு அகவையை எட்டிப்பிடிக்கும் பெருமகனாரின் ஐம்பதாண்டுப் பொதுப்பணி நமக்கு அகத் தெழுச்சியை (Inspiration) உண்டாக்குவதாக உள்ளது. இளைஞர் சமுதாயமும் மூக்கில் விரலை வைத்து வியக்கும் வண்ணம் உள்ளது; அவர் வழி நடக்க வேண்டும் என்ற அவாவினை அவர்களிடம் எழுப்பவல்ல எடுத்துக்காட்டுப் பெருமகனாகத் திகழ்கின்றார்.

நுண்ணறிவுச் செல்வர்

பிறக்கும்பொழுதே நுண்ணறிவு வாய்க்கப் பெற்ற இவர் தாம் பெற்ற கல்வியறிவினால் அதனை மேலும் திறமையுடையதாக ஆக்கிக்

கொண்டார். இறைவன் திருவருளால் இவர் இருபதாண்டுகட்கு மேல் தமிழக அமைச்சர் அவையில் பணியாற்றும் வாய்ப்பு ஏற்பட்ட காலத்தில் அதனை மிகத்திறமையாக ஆற்றினர்.

''மதி நுட்பம் நூலோ டுடையார்க் கதி நுட்பம்
யாவுள முன்னிற் பவை''

என்ற வள்ளுவத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தார். கல்வித் துறை, நீதித்துறை, நிதித்துறை, பொதுநலத்துறை, அறநிலையத் துறை ஆகிய துறைகளில் பணியாற்றிய காலத்தில் இவருடைய திறமை மிக்க பணியால் அவர் தொட்ட துறைகள் யாவும் பெருமை பெற்றன என்பதைப் பொதுமக்கள் நன்கு அறிவர். கருவிலே திருவுடைய இவர் அவர்கள் மனத்தில் நிலைத்து வாழ்கின்ருர்.

கல்விப் பணியில்:

கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் தமிழகத்தின் கல்வி நிலையை வானுற ஓங்கச் செய்தார். தமிழகத்தின் எதிர்காலக் கல்வி நிலையைப் பற்றிக் கனவு கண்ட பாரதியார், ''தேடு கல்வி இலாத ஊரினைத் தீயினுக் கிரையாக மடுத்தல்'' என்று உள்ளம் வெந்து கூறியதை நினைவிற்கொண்ட நம் பெருமகனுர் ஓரே சமயத்தில் பட்டி தொட்டிகளில் எல்லாம் முந்நூறுக்கு மேற்பட்ட உயர் நிலைப் பள்ளிகளைத் தோற்றுவித்துக் ''கேடில் விழுச்செல்வம்'' பெருகச் செய்தார். ஒல்லும் வகைகளிலெல்லாம் பள்ளி ஆசிரியர்களின் நிலையினையும் உயர்த்திய உயர்குணச் செம்மல் இவர்.

சமயப் பணியில்:

சமயப்பணி இவரது உடன் பிறந்த சொத்து. இவர் அறநிலையத் துறை அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில் சிதிலமான கோயில்கள் இவரது கவனத்தைக் கவர்ந்தன. அரசு ஆதரவுடனும், பொதுமக்கள் துணையுடனும் திருப்பணிகளைத் தொடங்கி அவற்றைச் செம்மையுறச் செய்தார். சைவ வைணவ திருக்கோயில்களில் திருமுறை, பிரபந்தப் பாசுரங்கள் அமைந்த கல்வெட்டுக்களை நிறுவச் செய்தார். சுவர்களில் பக்திச் சுடர் தெறிக்கும் பாசுரங்களை எழுதச் செய்து வழிபாட்டிற்கு வரும் அன்பர்களின் நெஞ்சகத்திலும் அவற்றை நிலைபெறச் செய்தார். இவர் காலத்தில் திருச்செந்தூர் திருக்கோவிலில் நடைபெற்ற நிகழ்ச்சி யொன்றினுல் ''இறைவன் திருமுன் பேதையர் — மேதையர், செல்வர் — வறியர், படித்தவர் — பாமரர், அதிகாரிகள் — பொதுமக்கள் யாவரும் சமமே'' என்பதை உலகோர் அறியச் செய்தது, இன்றும் மக்கள் நினைவில் பசுமை மாருமல் உள்ளது.

''அன்பர் பணி செய்ய எனை
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்து
எய்தும் பராபரமே''

என்ற, தாயுமான அடிகளின் திருவாக்கின் உயிர் நாடியை நன்கு அறிந்து பணியாற்றினர். ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்ற 'நடையருப் பெருந் துறவு' கொண்ட அப்பர் பெருமானின் அடிச்சுவட்டில் நடந்த பெருமகனர் இவர்.

ஏழுமலையானின் தொண்டர்:

'அகலகில்லேன் இறையும்' என்று அலர்மேல் மங்கை உறை மார்பனின் மீது ஆராக்காதல் கொண்டவர் நம் பெருமகனர். கால வெள்ளத்தில் ''ஜனவரி - 1'' திரும்பத் திரும்ப வந்து கொண்டே இருக்கும். அன்றெல்லாம் நம் பக்தவத்சலனரும் ஏழுமலையானின் சந்நிதியில் காட்சி அளிப்பார்.

''ஒழிவில் காலமெல்லாம்
உடையனாய் மன்னி
வழுவிலா அடிமை
செய்ய வேண்டும் நாம்''

என்ற ஆழ்வார் பாசுரத்தை எண்ணித் திருவேங்கட முடையானின் காட்சியில் தன்னை மறந்த நிலையில் இருப்பதைப் பக்தர்கள் யாவரும் நன்கு அறிவர். தமிழக அமைச்சர்களுள் — ஏன் பொதுமக்களுள்— திருவேங்கடமுடையானை அதிகமான தடவைகள் கண்டு தரிசிக்கும் பேறு பெற்றவர் நம் பக்தவத்சலனர் அவர்களே.

இங்ஙனம் பாமரர் முதல் படித்தவர் வரை, பேதையர் முதல் மேதையர் வரை, தம் எண்ணத்தால், சொல்லால், செயலால், ஆற்றும் தொண்டினல், உள்ளத் தூய்மையினல் எல்லோர்க்கும் எடுத்துக் காட்டாகத் திகழும் நம் முதுபெரும் தலைவர்— பழம்பெருந் தொண்டர் — பக்தவத்சலனர் நம்மிடையே பல்லாண்டுகள் வாழ்ந்து ஒல்லும் வகையெல்லால் பணியாற்ற, திருவேங்கட முடையானின் கருணை வெள்ளங்கோத்து மடை திறந்து அவர் மீது பாய்வதாகுக. அவர் வாழ்க பல்லாண்டு! வளர்க அவர்தம் புகழ்!!

> எல்லோரையும் இன்முகத்தோடு பேசி ஆவன செய்வதில் அவருக்கு நிகர் அவரே ஆவர்.

நான் கண்ட பக்தவத்ஸலம்

ஏ. குப்புசாமி நாயுடு,
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

திரு. பக்தவத்சல முதலியார் அவர்களை நான் 1921-ம் ஆண்டு முதல் அறிவேன். அவரும் நானும் 1942-ம் ஆண்டில் சிறையில் ஒன்ருக இருந்தோம். அப்பொழுது அவருடன் மிகவும் நெருங்கிப் பழகி அவருடைய சீரிய பண்புகளை அறிய எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவருக்கு கோபம் வந்து நான் பார்த்து அறியேன். எல்லோரையும் இன்முகத்தோடு பேசி ஆவன செய்வதில் அவருக்கு நிகர் அவரே ஆவர். இவரைப் போல 50 ஆண்டுகள் பொதுப்பணியில் ஈடுபட்டு புகழ் குன்ருமல் வாழ்கிறவர்கள் மிகச் சிலரே ஆவர்.

என்னிடத்தில் இவருக்கு தனி அன்பு உண்டு என்பதற்கு ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன். 1947 சட்டமன்றத் தேர்தலில் நான் வேட்பாளஞக இருந்தேன். அப்பொழுது உத்திர மேரூரிலுள்ள வாக்காளர்கள் அங்கு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். நானும் செய்வதாக வாக்களித்து விட்டேன். தேர்தல் முடிந்து நானும் வெற்றி பெற்ற பிறகு திரு. பக்தவத்சல முதலியார் அவர்களை அணுகி இதற்கு ஆவன செய்யுமாறு வேண்டினேன். அவர் அப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார். 12 கிராமங்களுக்குப் பயன்படும் இந்த அணைக்கட்டு கட்ட செலவாகும் ரூபாய் 7 லட்சம்! நான் மக்களுக்கு வாக்களித்து விட்டேன் என்று அறிந்தவுடன் அவர் இந்த அணைக்கட்டைக் கட்ட உத்தரவிட்டு விரைவில் முடித்துக் கொடுத்தார்.

இத்தகைய பண்பாளரைச் சிறப்பிக்கும் நூலில் நானும் பங்கு கொள்ளும் பேறு பெற்றமைக்குப் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

> நாதஸ்வரக் கலையின் பரவலான வளர்ச்சிக்கு அன்னாரின் பேருதவி அளவிட முடியாதது.

சிறந்த சங்கீத ரசிகர்

நாதஸ்வர வித்துவான்
பி. எஸ். வீருசாமி பிள்ளை

தமிழ்நாட்டின் பழம்பெரும் தேசபக்தர்களுள் திரு. பக்தவத்ஸலமும் ஒருவர். சுமார் 20 ஆண்டுகளாகப் பல்வேறு துறைகளுக்குப் பொறுப்பு வகித்தவர். அமைச்சராகவும், முதலமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர். அன்னாரின் ஐம்பது ஆண்டு பொது வாழ்வுப் பணியை சிறப்பித்துக் கூறும் வகையில் ஒரு நூல் தொகுத்து வெளியிட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. குழுவினரில் நன் முயற்சி வெகுவாகப் பாராட்டத்தக்கதே. அதற்கென ஒரு கட்டுரை எழுதி வழங்குமாறு என்னைப் பணித்துள்ளனர். திரு. பக்தவத்ஸலம் அவர்களுடன் ஆதிநாள் முதல் நெருங்கிய தொடர்பு கொண்டவன் என்ற ஒரே காரணம் பற்றி என்னை எழுதக் கோரியுள்ளனர். அப் பணியைத் திறம்படச் செய்ய எனக்குத் தகுதி கிடையாது. நான் ஒரு எழுத்தாளன் அல்லன்.

திரு. பக்தவத்ஸலம் அவர்களிடம் ஆதி நாள் முதல் எனக்கு நெருங்கிய தொடர்பு உண்டு. அன்னாரிடம் நான் கொண்டுள்ள மரியாதை, அவர் சேர்ந்துள்ள அரசியல் கட்சியில் காரணமாக அல்ல. கலைஞர்கள், கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். அவர் ஒரு சிறந்த சங்கீத ரசிகர். ஆடம்பரமற்றவர். மனிதாபிமான முள்ளவர்.

எல்லாவற்றிலும் உயர்வாகத் தாம் பெற்ற அதிகாரத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி சமூகத்திற்கு உதவியவர். தஞ்சையை ஆண்ட மாமன்னர்களின் தனி உடைமையாயிருந்த அரண்மனை, நிலம் முதலிய செல்வங்கள் இருந்த இடம் தெரியாது மறைந்தொழிந்து விட்டன. ஆயினும் அவர்கள் அமைத்துதவிய பல்வேறு அறக்கட்டளைகள் இன்று அம்மன்னர்களின் நல்லாட்சிக்குச்

சான்று கூறுவனவாய் நிற்கின்றன. எனவே ஒருவன் தன் உடைமை யென மதிக்கும் எப்பொருளும் அவனுக்கு உதவுவதில்லை. பொது உடைமையாக்கிய பொருளே அவனது பொருளாகி அவனை மக்கள் என்றும் மறவாது நினைவில் வைக்க உதவுகிறது.

இந்த உண்மையை ஆரம்பகால முதல் நன்குணர்ந்தவர் திரு. பக்தவத்ஸலம். ஆட்சிப் பதவியில் அமர்ந்தவுடன் அறிவு மயங்கியவர் அல்லர். குறுகிய காலத்தில் மிக அதிகமான சமூக நலப் பணிகளைச் செய்து முடிக்க விழைந்தார். யாரும் செய்ய முன் வராத வகையில் கலைத்தொண்டாற்றினார். தமிழர் கலையை வளர்க்க வித்திட்டவர் திரு. பக்தவத்ஸலம் அவர்கள்தான்.

இசைக் கலை பண்டை நாட்களில் மன்னர்களாலும், மடாதிபதி களாலும், பெரிய நிலப்பிரபுக்களாலும் ஆதரித்து வளர்க்கப் பட்டது. ஆனால் அவர்கள் தந்த ஆதரவு வேறுவிதம். ஒரு கலையில் வல்லுனரான சிலருக்குப் பொன்னும், பொருளும் கொடுத்து மகிழ்ந்தனர். இந்த ஆதரவு அக்கலைஞனின் கலைத்திறனுக்குக் காட்டப்பட்டது. கலைஞர்கள் தோன்றி, உயர இந்த ஆதரவு பயன்படவில்லை. இதைப்பற்றி யாரும் கவலை கொள்ளவில்லை.

நாதசுரக்கலை ஆதிநாள் முதல் குருகுல வாச முறையில் சிறுவர் களால் பயிலப்பட்டது. அவ்வாறு பயிற்றுவிக்கும் ஆசான், தன் தொழிலைக் கவனிப்பதுடன் தன் குடும்பத்தையும் பேணிக்காத்து, ஓய்வு நேரங்களில் தன்னை நாடி வந்துள்ள மாணவனுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். நல்ல வருவாயும், குடும்பத் தொல்லைகளும் அற்ற ஒரு சிலரால் மட்டும் நன்முறையில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க இயன்றது. மற்றவர்கள் எவ்வளவு முயன்றும் திருப்திகர மான பயிற்சி அளிக்க இயலவில்லை. எனவே குடும்பத்தொல்லையோ, தொழில் செய்து பொருளீட்டும் அவசியமோ இல்லாத ஒரு சிலர் முயன்றால் பயிற்சியாளர்களை முன்னுக்குக் கொண்டு வர முடியு மென்று உணரப்பட்டது. ஆயினும் யாரும் இத்திசையில் நடவடிக்கை எடுக்கவில்லை. திரு. பக்தவத்ஸலம் அவர்கள் தன் பதவிக்காலத்தில் இந்த வழியில் தன் கவனத்தைத் செலுத்தியவர். அதுமட்டுமன்றி நம் நாட்டுப் பண்பாடுகளுக்கேற்ப தேவாலயங் களில் நாதசுரம் எவ்வாறு முறையாக வாசிக்கப்படவேண்டுமென' வகைப்படுத்திய பெருமை அன்னாரையே சாரும். தக்க அறிவாளிகள் பலரின் மேற்பார்வையில், சுவாமி மலையில் நாதஸ்வரக் கலைஞர்கள் பலரை ஒன்று கூட்டி, அவர்களுக்கு 6 மாத காலம் இம் முறையில் பயிற்சி அளிக்கச் செய்தார். இதுவே இக்கலைக்கு அவர் ஆற்றிய முதல் தொண்டாகும். தமிழ்நாட்டுக் கோயில்கள் பக்தியுடன் இசையையும் வளர்த்த கேந்திரங்களாகும். யாவரும் மேடையில் இது பற்றி முழங்கி வந்தனர். திரு. பக்தவத்ஸலம் தன் ஆட்சிக்

காலத்தில் பழனி கோயிலின் உபரி நிதியிலிருந்து நாதஸ்வரம், தவுல் ஆகிய வாத்தியங்களை பல மாணவர்களுக்குப் போதிக்கக் கல்லூரி ஒன்றை நிறுவினார். திறமை வாய்ந்த ஆசிரியர்களின் பொறுப்பில் மாணவரின் தேர்ச்சி பெருமைப் படத்தக்க தாயிருந்தது. ஜாதி பேதமன்னியில் விரும்பும் யாவருக்கும் இலவச உணவு, உடை, உறைவிடம் ஆகியவை இலவசமாக அளிக்கப்பட்டதுடன், இசைப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இது அன்னாருடைய மாபெரும் சாதனையாகும்.

தஞ்சையை ஆண்ட மன்னர்கள், கல்வி, கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்கென கணிசமான செல்வத்தை ஒதுக்கி வைத்துச் சென்றனர். அந்த அறக்கட்டளை அரசினரால், சத்திரம் இலாகா என்ற பிரிவினரால் நடத்தப்பெற்று வந்தது. நாதப்பிரும்மம் வாழ்ந்த திருவையாற்றிலே, முன்னதாகவே, வடமொழி, தமிழ் ஆகிய மொழிக் கல்லூரிகள் நடைபெற்று வந்தன. ஆங்கு நாதஸ்வரம், தவுல் ஆகிய கலைகளையும் கற்பிக்க வழிவகுத்தவர் திரு. பக்தவத்ஸலம் தான். இன்று அக் கல்லூரி மிகத் திறமையாக செயல்பட்டு வருகிறது. இப்புகழ் அவருக்கே உரியது.

தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்பது. அதே போல் நாதஸ்வரக் கலையை வளர்க்கும் தொண்டிலும் வழிகாட்டி யாக நின்றது. இதைப் பின்பற்றியே திருப்பதி திருமலை தேவஸ் தானத்திலும், நாதஸ்வரம் போதிக்கவும், அதற்கு இயைபான தவுல் கற்பிக்கவும் வகை செய்யப்பட்டது.

சென்னை கர்நாடக இசைக் கல்லூரிகளிலும் நாதஸ்வரம், தவுல் ஆகிய வாத்தியங்களைக் கற்பிக்க ஓர் பிரிவு பின்னர் துவக்கப்பட்டது. திரு. பக்தவத்ஸலம் அவர்கள்தான் இத்தகைய நன் முயற்சிகளுக் கெல்லாம் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் காரணமாயிருந்தவர். இன்று தஞ்சை மாவட்டம் வலிவலத்திலும் நாதஸ்வரம், தவுல் கலையைப் பயிற்றுவிக்கும் ஒரு கலைக்கூடம் நன் முறையில் பணியாற்றி வருகிறது.

மேலே கூறப்பட்ட நன் முயற்சிகள் தவிர அன்னார், வேத, ஆகம பாடசாலையினையும், தேவார பாடசாலையினையும், சிற்பக் கலைப் போதனைக் கென ஒரு நிறுவனத்தையும் சிறப்புற அமைத்து நடைபெற வகை செய்தார்.

மேலே கூறியவற்றிலிருந்து திரு. பக்தவத்ஸலம் நம் நாட்டுப் பண்டைக் கலைகளின் வளர்ச்சிக்கென செய்துள்ள பெருந்தொண்டு புலனாகும். சிறப்பாக நாதஸ்வரக் கலையின் பரவலான வளர்ச்சிக்கு அன்னாரின் பேருதவி அளவிட முடியாதது. என்னால் என் உயிரினும் மேலாகப் போற்றி வளர்க்கப்பட்ட நாதஸ்வரக் கலையை, எனக்குப்

பல சிறப்புகளையும் ஈந்து, அரசர்களும், ஆண்டிகளும், பண்டிதரும், பாமரரும் விரும்பிக் கேட்டு, எவ்விதக் கட்டணமோ கட்டுப்பாடோ யின்றி பொதுவுடமையாக்கி என்னால் வழங்கப்பட்டதுமான நாதஸ்வரக் கலை வளர பலவிதத்திலும் உதவிய வள்ளல் சேக்கிழார் வழித்தோன்றல் திரு. பக்தவத்ஸலம் அவர்களிடம் எனக்கு ஏற்பட்ட நன்மதிப்பையும், நன்றிப் பெருக்கையும் அளவிட்டுக் கூறமுடியாது.

எல்லாம் வல்ல இறைவன் அன்னாருக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்கியமும் அளித்து தன்னுடைய நன்முயற்சிகள் அளிக்கும் நற்பயனைக் கண்டு மகிழ வாய்ப்பினை நல்குமாறு இறைஞ்சி இக் கட்டுரையை முடிக்கிறேன்.

எனது வழிகாட்டி

எம். டி. தியாகராஜ பிள்ளை
கொரடாச்சேரி.

தமிழக தலைவர்களில் ஒருவரும் — பழம்பெரும் தேசப் பக்தரு மான திரு. பக்தவத்ஸலம் அவர்கள் வழிக்கறிஞர் தொழிலுக்கான தனது படிப்பை முடித்தவுடன் தேசப் பிதா மகாத்மாஜி அவர்களின் விடுதலைப் போராட்டத்தால் கவரப்பட்டு மற்றவர்கட்கு ஒரு வழிகாட்டியாக மும்முறை சிறை சென்ற அவர்கள் தனது வாழ்நாளை இத் தேசத்திற்கே அர்ப்பணித்துக் கொண்டவர் ஆவார்கள்.

அரசாங்கக் காரியதரிசி ஆகவும் — அமைச்சராகவும் — முதல் அமைச்சராகவும் பொறுப்பேற்று — சிறப்பான முறையில் செம்மை யாக நிர்வாகம் நடத்தி வந்தார்கள்.

1923-ஆம் வருடம் நடைபெற்ற கொரடாச்சேரி, திருக் கொள்ளம்புதூர் அரசியல் மாநாடுகளுக்கு வருகை தந்தார்கள்.

என்னால் செய்யப்பட்ட 11 ஆலயங்களின் திருப்பணிகளுக்கும், கும்பாபிஷேகத்துக்கும், எனது கிராம ஆலய கும்பாபிஷேகத்துக்கும் வருகை தந்தார்கள். ஆலயங்களின் திருப்பணிகளுக்கு அவ்வப்போது அறநிலையத் துறையின் அனுமதி உடனுக்குடன் கிடைத்தது என்றால் அவர்களின் தெய்வ பக்தியை காட்டுவதாகும்.

இத் தள்ளாத வயதிலும் அவர்கள் காங்கிரஸ் கூட்டங்களிலும்— பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு வருவது இளைஞர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதாய் உள்ளது.

கண்ணியமாக — நிதானப் போக்குடனும் — கடமையாற்றும் அவர்கள் கவர்னர் பொறுப்பையும் ஏற்கும் வல்லமை உடையவர். நான் மும்முறை 4 வருடம் சிறை செல்லவும் — 20 வருடம் சட்ட பேரவை — பொது ஸ்தாபனங்களிலும் பணியாற்றியதற்கும் — தாமிரப்பட்டயம் — பெறுவதற்கும் — எனது வழிகாட்டி.

நம்மிடையே நற்பணி ஆற்றும் அவர்கள் நீடூழி வாழ்ந்து மக்களுக்கு சேவை செய்ய எல்லா நலன்களும் பெருக இறைவனை பிரார்த்திக்கிறேன்.

என் இதயத்துடன் தெய்வமாய்க் கலந்துவிட்ட தெய்வங்கள் இருவர் —புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒருவர்; பக்தவத்சலனார் மற்றொருவர்.

ஆட்சிப்பெருமை, ஆட்பெருமை

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரை
உறுப்பினர்:
சட்டத்துறை ஆட்சிமொழி ஆணையம்

நாடும் பெருமையும் நற்றமிழ் வாழ்வும் நலங்கனிந்த
பீடும் பிறங்க அரும்பணி யாற்றும் பெருந்தமிழோன்
பாடும் புலவரின் பாவென வாழ்பக்த வத்சலனார்
நீடும் புகழ் இன்னும் நீடுக வேயிந்த நீணிலத்தே!

தேசீய வானகத்து ஒளிமணிகளாய்த் திகழ்ந்த காந்தியடிகள், ஜவாஹர்லால் நேரு, போஸ், பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி ஆகிய பலரது ஒளிகள் என் உள்ளத்தை ஈர்த்து அதன் வழிபாட்டுக்கு இலக்கங்களாய்த் திகழ்ந்ததுண்டு. ஆனால், நாட்டுத் தெய்வங்களாக மட்டுமன்றி என் சிறு வாழ்விலும் பங்கு கொண்டு என் இதயத்துடன் இதயமாய்க் கலந்துவிட்ட இதயமணி களாய்த் திகழும் நெஞ்சுகந்த தெய்வங்கள் இருவர்—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒருவர்; பாரத அன்னை இதயமும், தமிழக அன்னை யின் ஆட்சிமடித்தவிசும் ஒருங்கே ஆட்கொண்ட பக்தவத்சலனார் மற்றொருவர்.

'மெய்த்திரு வந்துற்றபோதும், வெந்துயர் வந்துற்றபோதும்
ஒத்திருக்கும் உள்ளத்து உரவோன்'

என்று தருமபுத்திரரை வேதவியாசர் விளிப்பதாகப் புகழேந்திப் புலவர் பாடியுள்ளார். தருமனுக்கு அது எந்த அளவில்

பொருந்துமோ, அதில் ஒரு சிறிதும் குறையாத அளவுக்குப் பெருந் தமிழனாக மட்டுமன்றி நற்றமிழனாகவும் வாழ்ந்த தேசபக்தச் செம்மல் பக்தவத்சலனாருக்கும் அது பொருந்தும் என்று உறுதியாகக் கூறலாம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் கவிதையுலகின் முடிசூடா மன்னர். திராவிட இயக்கப் பெருந்தலைவர்களும் போற்றும் பெருந் தலைவர். அவர் தூய உள்ளம் தலைவர்களிடையே பன்னீர்த்துளி களாய் ஆடிற்று; பொது மக்களிடம், நல்லாரிடம் ஏரி வெள்ளமாய்ப் பரந்து நிறைந்தது; தலைவர்களிடம் ஒட்டியும் ஒட்டாமலும் அகல நின்று பார்க்கும் பண்பில் நின்ற என் போன்றாரிடம் அது தானாக அருவியாய் வந்து பொழிந்து ஆட்கொண்டியக்கிற்று. அவர் வாழ்வின் ஒரு பகுதி என் வாழ்வாகவும், என் வாழ்வின் ஒரு பகுதி அவர் வாழ்வாகவும் இயங்கிற்று.

என் வாழ்வில் கவிஞர் பாரதிதாசன் தொடர்புடன் போட்டி யிட்ட தொடர்பு பண்பாளர் பக்தவத்சலனார் அதில் கொண்ட தொடர்பு — ஏனெனில் அது தொலை நின்றுவந்த தொடர்பு, வகுப்புணர்வும், கட்சியுணர்வும் கடந்து வந்த தொடர்பு. தேச விடுதலை இயக்கத்தில் அவர் தொண்டர்களில் சிறந்த தொண்டராய், தொண்டர் நாதனாய் இயங்கிய காலத்திலெல்லாம், நான் தேசீய ஆர்வலனாக, தேசீய ஆர்வ எழுத்தாளனாக மட்டுமேயிருந்தேன். அவர் நடத்திய பத்திரிகைகளுக்குத் தொலைவிலிருந்து பயிலும் வாசகனாக, எழுத்தாள வெள்ளத்தின் ஓர் இளந்துளியாக, அப் பத்திரிகைகளின் பரப்பாளர் பலருள் ஒருவனாகவே அவரை அணுக நேர்ந்தது. சிறு கழியிலும் செல்லும் எல்லையற்ற பெருங்கடலின் பொங்கு வேலியாக அவரை நான் முதன்முதலாக நாற்பது ஆண்டு கட்கு முன் கண்டேன். அன்று அவர், அவர் பெயருக்கேற்ப, அடியார்க்கெளியனாய் விளங்கினார்.

தமிழகத் தலைவர்களுள் பெருந்தலைவர் காமராசருடனும், இளவள எழு ஞாயிறும் அறிஞர் அண்ணா அவர்களுடனும், டாக்டர் கலைஞருடனும் மட்டுமே ஒப்புமை கூறத்தக்க ஆட்சிச் செம்மலார் ஆவர், பக்தவத்சலனார். அவர் ஆட்சி அனுபவமும் திறமையும் இந்தியாவிலேயே முன்னணி முதல் வரிசையில் வைத்து எண்ணத் தக்கதாகும். அவர் தென்றலில் மிதந்தவர் மட்டுமல்லர், புயலில், புயல்களில் மிதந்தவர். மண்ணுண்ட பெருமாளாக திருமால் விளங்கியதுபோல, புயலுண்ட பெருமாளாக விளங்குபவர் அவர். தென்றல்கள் வந்துபோயின, புயல்கள் சீறி எழுந்து ஆர்த்து அடங்கி யமைந்தன. தென்றலின் புயலுருவமாக, புயல்களின் தென்றலுருவ மாக அவர் வாழ்விலும் தாழ்விலும் ஒரே படித்தாக, பாரதத்தின் பண்புருவாக நின்று நிலைபெறுகிறார்.

ஆண்டகை பக்தவத்சலனாரின் ஆட்சிப்பெருமை பெரிது. ஆனால் அதனிலும் பெரிது அவர் ஆட்பெருமை. அவர் திறமை பெரிது. ஆனால் அவர் பண்பை நோக்க, அத்திறமைகூடச் சிறுத்து விடுகிறது என்னலாம்.

ஆன்றமைந்த பண்பாளர் பக்தவத்சலனார் வாழ்வில் ஒரு தனிப் பெருநிறைவு உண்டு. அதையே அவர் குறையாகக் கூடக் கூறலாம். அவர் பெருமையை அப்பெருமைக்குப் பின்னணியான அவர் குடிப் பெருமை, மரபுப் பெருமைகளிலிருந்து தெள்ளத்தெளிவாகப் பிரித் தறிய முடியாது. அது கருமையிடையே செம்மையாக விளங்குவ தன்று; செம்மையிடையே தனிச் செம்மையாக விளங்குவது.

முன்னாள் முதல்வராகிய பக்தவத்சலனார் மரபு, முந்தை முதல்வ ராக, ஆயிர ஆண்டுகட்கு முன்னேயே தமிழக மட்டுமன்றி, இந்தியா மட்டுமன்றி, கடல்கடந்த தமிழகமும், கடல்கடந்த இந்தியாவும் ஒரு பெரு முக்குடைக்கீழ் ஆண்ட சோழப் பெரும் பேரரசரிடம் முதலமைச்சராக மட்டுமன்றி முதற்கவிஞராகவும், முதற்கவிஞராக மட்டுமன்றி முதன்மை அருளாட்சியாளராகவும் விளங்கிய பக்திக் கவிக்கொண்டல் சேக்கிழாரின் பொன் வண்ண முகில் மரபு ஆகும்.

மூல மரபாகிய சேக்கிழார் மரபைத் தமிழகம் சற்று மறந்தால் தானே வழிமரபாகிய பக்தவத்சலனார் மரபின் ஒளியை அது நன்கு காண முடியும்!

ஆண்டகை பக்தவத்சலனார் வாழ்வின் செம்மை ஒரு தனி மரத்தின் செம்மையன்று. அது பன்மரம் ஒரு மரமாய் விளங்கும் படராலமரச் சோலையின் செம்மை ஆகும். அவர் புகழ் வாழ்வாகிய கருமனையன் முன்னே நந்தியெம்பெருமானாக, அவர் குடிப்புகழின் கொடிமரமாக அவர் தாய் மாமனாரான அருந்தலைவர் முத்துரங்க முதலியார் விளங்கினார். அவர் குடும்பத்தின் கிளைகொப்புகள் தோறும், அதன் கொழு கொம்புகள் தோறும், கிளைக் கொடிகள் தோறும் நாம் அவர் புகழின் ஒளி படர்ந்து பரவித்திகழ்வது காண் கிறோம். நாட்டு வாழ்வில், கலை கல்வி வாழ்வில், சமுதாயத் தொண்டு வாழ்வில் பல்கிப்படர்ந்த பல பசுமரங்களிடையே ஒரு பசுமரமாய், பெருந்தமிழன் பக்தவத்சலனார் வாழ்வு பல்கூட்டுப் பெருமையுடையதாய்த் திகழ்கிறது.

பெருமிதச் சூழலிடையே பாதி ஒளிர்ந்த பெருமையாக, ஆண்டகை பக்தவத்சலனார் பெருமை அமைந்துள்ளது. ஆனால் அணுக்கமுடையார்க்கு, அணுக்க நோக்குடையார்க்கு, அது பெருமையைக் குறைப்பதல்ல, பெருமைக்குப் பெருமை தருவது ஆகும்.

பெருஞ்சிலைக்கேற்ற பெருஞ்சிலைப் பீடமாய், பெருங்கோயில் பின்னணி வண்ணமாய் அவர் குடியும், மரபும், நாடும், பீடும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டுக் கோயில்கள், பண்டு சோழராட்சி — பாண்டிய ராட்சிக் காலங்களில், கலைக் கூடங்களாய், பல்கலைக் கழகங்களாய், வரலாற்றுக் கருவூலங்களாய்த் திகழ்ந்தன என்று பழமை பாராட்டி அங்கலாய்ப்பர், அறிஞர். அக்கோயில்கள் மீண்டும் அப்புகழ் புதுக்கு வதுடன் நில்லாது புதுப்புகழ்ப் பயிரே வளர்க்க வழிகோலியவர் முன்னாள் முதல்வர் பக்தவத்சலனாரே யாவர். இந்நாளரசும் அதன் பண்பறிந்து போற்றிப் பேணியே வருகிறது.

இந்திய விடுதலை இயக்கக் காலங்களில் தமிழகத்தின் தியாகப் பங்கு, நல்லாட்சிப் பங்கு தோட்டத்தில் பாதி கிணறு என்ற வகை யில் அதன் அளவுக்கு மீறியதாகவே இருந்தது. விடுதலைக்குப்பின் இருபதாண்டு ஆட்சிக் காலத்தில் இப்பண்பு மறக்கப்பட்டது. அணிமையில் புதுப்பிக்கப்பட்ட வ. உ. சிதம்பரனார் நினைவு இதனைக் காட்டுகிறது.

ஆனால் அதன் இறுதி நாட்களில் அச்சரிவை ஓரளவு தடுத்து மென்சரிவாக்கும் நிலையில் அமைந்தவையே பெருந்தலைவர் காமராசர், பெருந்தமிழன் பக்தவத்சலனார் ஆட்சிகள். தமிழரி யக்கம், தமிழியக்கம் தென்றலாகத் தொடங்கி, புயலாக வளர்ந்தது இவ்வாட்சிகளில்தான். இந்திய அரசியலில் தமிழகம் தன் பங்கைத் தலைநிமிர்ந்து ஆற்றத் தொடங்கியது இப்போதுதான்.

தற்காலத் தமிழக ஆட்சி எழு ஞாயிற்றின் ஆட்சியென்றால், அதற்குக் கொடியெடுத்த விடியல் ஒளி ஆட்சி, விடிவெள்ளி ஆட்சி களாக விளங்கிய ஓர் ஆட்சிக் கொழுந்து பக்தவத்சலனாரேயாவர் என்பதனை வரலாறு காணாதிருக்க முடியாது.

எங்கிருந்தாலும் மறைதிரை கீண்டெழ வேண்டிய ஒரு புகழ்க் கீற்றாகவே விளங்கத்தக்க பெருமைக்குன்றம், பீடார்ந்த பக்தவத் சலனார் வாழ்வு.

அவர் உழுது பண்படுத்திய தமிழக வாழ்வின் புதுவிதைப் பயிர், அவர் புகழின் மறுமலர்ச்சியாகப் படர்ந்து பரவுமாக!

இவரது தலைமையில் பாரதியாரின் 82-வது பிறந்த தின விழா நாடே பெருமையுறும் வண்ணம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

சிந்தனைச் செல்வர்

அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்
தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம், திருச்சி

தேனடையைச் சுற்றித் தேனீக்கள் மொய்த்துக் கொண்டிருப்பது இயற்கை. அதைப்போல திரு. எம். பக்தவத்சலம் என்ற தேனடையைச்சுற்றி காங்கிரஸ் ஊழியர்கள் சூழ்ந்திருப்பது என் நினைவுத்திரைக்கு வருகிறது.

திரு. சி. என். முத்துரங்க முதலியார் அவர்கள் தமிழகத்தின் மாபெரும் தலைவராய் விளங்கத்தொடங்கிய காலம் முதல் அப்பொழுது இளைஞராயிருந்த பக்தவத்சலம் அவர்கள் தேசீயப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். சக ஊழியர்களிடம் நேசமும், பாசமும் காட்டிப் பழகக் கூடியவர். ஊழியர்களின் குறைகள் என்னவென்பதைச் சலிக்காது கேட்டு ஆறுதல் கூறக்கூடிய தன்மையான பண்பு அவர்களுக்கு இருக்கும் காரணத்தால், எந்த நேரமும் ஊழியர் குழாம் அவரை வட்டமிட்டபடி இருக்கும்.

திரு. பக்தவத்சலம் அவர்கள் எதையும் ஆராய்ந்து, சீர்தூக்கி திறமையாக செயலாற்றி முடிக்க வல்லவர். சற்றுத் தெளிவாகக் கூறினால் திரு. ராஜாஜி அவர்களின் ராஜதந்திரம் அனைத்தும் பக்தவத்சலம் அவர்களிடம் எதிரொலிக்கக் காணலாம்.

திரு. ராஜாஜி அவர்கள் அமைத்த முதல் மந்திரி சபையில் பக்தவத்சலம் அவர்களை அமைச்சராய் நியமிக்க வேண்டிய பேறு இருந்தாலும், பக்தவத்சலம் அவர்களின் திறமைக்கு ஊக்கம் கொடுக்கவோ என்னவோ, இளைஞராயிருந்த திரு. கோபால் ரெட்டியின் பார்லிமெண்டரி காரியதரிசியாக இவரை நியமித்தார்கள். இந்த நியமனத்தால் தனக்கு ஏதோ கௌரவக் குறைவு வந்ததாகவோ, தன்னை புறமொதுக்கியதாகவோ எண்ணாமல் மிக்க திறமையோடு அதனை நிர்வகித்து தன் திறமையை வெளிக்காட்டினார்.

திரு. காமராஜ் அவர்கள் ஓர் செயல் வீரர் என்றால் திரு. பக்தவத்சலம் அவர்கள் ஓர் சிந்தனைச் செல்வர். பக்தவத்சலம் அவர்களின் சிந்தனையும், காமராஜின் செயல் திறமும் தமிழகத்தை

முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றன என்றால் அது மிகை யில்லை. தமிழக அரசியலில் அமைச்சர் பதவி வகித்தவர்களில்— திரு. பக்தவத்சலம் அவர்கள் எல்லாத் துறைகளிலும் வல்லவராக, எல்லோருக்கும் நல்லவராக, எல்லோருக்கும் இனியவராக, பல்லாண்டுகள் பணி புரிந்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது.

தனக்கு இடப்பட்ட பொறுப்பு எதுவாயினும் அதனை திறமை யுடன் செய்து முடிக்கும் வீரராக பக்தவத்சலம் அவர்கள் இருந்தாலும் ஊழியர்கள் உள்ளத்தில் இடம் பெற்றதுபோல் மக்கள் உள்ளத்தில் இடம் பெற அவருக்கு அலங்காரமாகப் பேசத் தெரியவில்லை என்பதுதான் அவரிடம் உள்ள ஒரே குறை. இந்த ஒரு குறையைத் தவிர வேறு குறையேதும் இல்லாத நிறைமனிதர் திரு. பக்தவத்சலம் அவர்கள்.

அவர் அமைச்சராக இருந்த காலத்தில் அரசாங்க அலுவல்கள் முடிந்தவுடன் அருகிலிருக்கும் தேவாலயங்களுக்குச் சென்று வழிபடத் தவறுவதே யில்லை. அமைச்சர் என்ற அதிகார தோரணை இல்லாமல் சாதாரணக் குடிமகன் என்ற முறையில் அவர் ஆலய வழிபாடு செய்வது தனி அழகுடையது. தமிழகத்தில் உள்ள தேவாலயங்கள் புதுமையும், பொலிவும் பெற விளங்கியதற்குக் காரணம் திரு. பக்தவத்சலம் என்றால் அது மிகையில்லை. ஆலய நிர்வாகிகளைத் தூண்டி பற்பல கோயில்களில் திருப்பணிக்கு ஏற்பாடு செய்தவரும் அவரே.

பண்டைய காலத்தில் மாமன்னர்கள் ஆலயத் திருப்பணிகளில் ஈடுபட்ட வரலாற்றையும், சிறப்பையும் மீண்டும் மக்களுக்கு நினைவூட்டிய பெருந்தகை இவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

கொள்கையில் உறுதிப்பாடும், சுயநலமற்ற போக்கும் அவருக்கு நெஞ்சில் ஓர் உறுதியையே உண்டாக்கி விட்டது. எவருடைய எதிர்ப்பையும் லட்சியம் செய்யாது கொள்கையில் உறுதியாக இருந்த காரணத்தால் அவரோடு பிணங்கியவர் பலர் என்றாலும் கூட பக்தவத்சலம் அவர்களின் நேர்மையை எவரும் சந்தேகிக்க முடியாது.

தமிழக அரசியலில் பழம்பெரும் தேசபக்தர்கள் வரிசையில் தொண்டனாகவும், தலைவனாகவும் விளங்கி சிறப்புறுபவர் திரு. பக்தவத்சலம் அவர்கள். அவரது மேற்பார்வையில் பாரதியின் 82வது ஜன்ம தின விழா நாடே பெருமையுறும் வண்ணம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

தொண்டனாகவும், தலைவனாகவும், பத்திராதிபராகவும் விளங்கும் திரு. பக்தவத்சலம் அவர்களும், திரு. காமராஜ் அவர்களும் ஒன்றுபட்டு தமிழக அரசியலில் தொண்டு புரிய வேண்டும் என்று விழையும் பல்லாயிரக் கணக்கான காங்கிரஸ் ஊழியர்களில் அடியேனும் ஒருவன். 'அந்த நாள் வாராதா' என்று ஏங்குகிறவர் களில் நானும் ஒருவன்.

நிர்வாக இயந்திரத்தைச் சீராக நடத்துவதில் அவர் ஒரு சிறந்த மேதை.

நிர்வாக மேதை

திருலோக சீதாராம்
ஆசிரியர், "சிவாஜி"

ராஜாஜி மந்திரி சபையில் முதன்முதலாகப் பார்லிமெண்டரி காரியதரிசியாகப் பதவி வகிக்கத் தொடங்கி, தமிழகத்தின் முதலமைச்சராகத் தமது பதவிக் காலத்தை முடித்துக் கொண்டவர் திரு. பக்தவத்சலம். ஆயினும் தேசீய இயக்கத்தில் அவரது பங்கு இன்னும் நெடியதொரு வரலாற்றை யுடையதாகும்.

கால் நூற்றுண்டு அமைச்சராகப் பொறுப்பில் இருந்தவர். அதற்கு முன்னும் பின்னுமாக ஒரு கால் நூற்றுண்டு அவரது பொதுச் சேவையைச் சேர்த்து அரை நூற்றுண்டு நமது தேசீய வரலாற்றுடன் அவரது வாழ்வு பின்னிக் கிடக்கிறது.

விடுதலைப் போராட்டங்களில் மும்முறை சிறை சென்றும், காந்தீய நிர்மாணப் பணிகளில் முக்கிய பங்கு கொண்டும் அவர் ஆற்றிய தொண்டு தமிழ் மக்கள் பெருமைப்படத் தக்கதாகும். நம்மிடையுள்ள முதுபெரும் தேசீயத் தலைவர்களில் ஒருவராக அவர் திகழ்கிருர்.

அவரிடம் ஊழியர்களாகிய பலருக்கு ஒரு பெருங்குறையுண்டு. அவர் திருச்சி ஜங்க்ஷனுக்கு குறிப்பிட்ட வண்டியில் வந்து இறங்கு கிருர் என்று தகவல் வரும். அவரை வரவேற்பதற்காக ரயிலடிக்கு நாங்கள் கும்பலாகப் பல பேர் போவோம். எங்களிடையே சட்ட மன்ற அங்கத்தினர்கள், காங்கிரஸ் கமிட்டி தலைவர், செயலாளர்கள், அரசாங்க அதிகாரிகள், தொண்டர்கள் இப்படிப் பல தரப்பட்டவர் களும் இருப்போம்.

நள்ளிரவில் சென்னையிலிருந்து திருச்சி ஜங்க்ஷனுக்கு வண்டி வந்து சேரும். வண்டியிலிருந்து அவர் இறங்குவார். வரவேற்புக் கோஷ்டியின் தலைவர் அவருக்கு மாலையிடுவார். குனிந்த தலை

நிமிராமல் அந்த மரியாதையை ஏற்றுக்கொண்டு விடுவிடு என்று வேகமாக நடந்து பிளாட்பாரத்தை விட்டு வெளியே சென்று தயாராக இருக்கும் காரில் ஏறி உரிய இடத்திற்குப் போய்விடுவார்.

பிளாட்பாரத்தில் இறங்கியவுடனே சற்று நிற்பதோ, கூட்டத்தினரை ஒருமுறை பெருமிதம் தொனிக்க ஒரு கண்ணோட்டம் விடுவதோ, புன்னகை புரிவதோ, தனிப்பட்ட சிலருடன் மட்டும் அளவளாவுவதோ, இப்படி ஒன்றும் செய்ய மாட்டார்.

எங்களுக் கெல்லாம் ‘எதற்காக ரயிலடிக்கு வந்தோம், இவர் நம்மைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே’ என்று வருத்தமாகவும் கூட இருக்கும். பப்ளிக் ரிலேஷன்ஸ் இவருக்குத் தெரியவில்லையே என்றுகூடத் தோன்றும். அவர் இதைப்பற்றி யெல்லாம் கவலைப்பட மாட்டார். அவர் எண்ணத்தில் எத்தனையோ காரியங்கள் சிந்தனைக் குரியனவாக இருக்கும். பதவியை ஒரு பெருமைக்குரிய காரியமாக அவர் நினைத்ததில்லை. பலரையும் தாஜா பண்ணி வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதும் அவருக்குத் தெரியாது. தான் ஏற்ற பொறுப்புண்டு, தன் கடமையுண்டு என்பதில்தான் அவருக்குக் கவனம். அதனாலேயே இப்படி ஆள் பிடிக்கிற காரியம் அவருக்குப் புரிவதே இல்லை.

ஏதோ வேண்டியவர் தெரிந்தவர் என்று சொல்லிக் கொண்டு யாரும் அவரிடம் போய் எந்தக் காரியத்தையும் சாதித்துக் கொண்டு விட முடியாது. தெரியாதவர், புதியவர் என்பதனாலேயே அவரை அணுகிப் பேசுவதற்கு எவ்விதத் தடையும் இருந்தது கிடையாது.

நியாயமான எந்தக் காரியமாக இருந்தாலும் யார் போய் சொன்னாலும் பொறுமையுடன் கேட்பார். அதை ஆராய்ந்து உரியபடி பரிகாரம் செய்வார். அதற்குமேல் முகதாட்சண்யம், வேண்டியவர், வேண்டாதவர் என்றெல்லாம் அவர் எதையும் கவனிப்பதில்லை.

அரசாங்க அதிகாரிகளை, கட்சியைச் சேர்ந்தவர்கள் தலையிட்டு ஒன்றைச் சாதித்துக் கொள்வதோ, மிரட்டுவதோ இவையொன்றும் அவர் காலத்தில் நடைபெற்றதில்லை. எதை யெதை அல்லது யார் யாரை எப்படி நடத்த வேண்டுமோ அப்படி அப்படி அளவறிந்து நிர்வாகம் செய்வதில் அவருக்கு இணை அவரேதான்.

நிர்வாக இயந்திரத்தைச் சீராக நடத்துவதில் அவர் ஒரு சிறந்த மேதை. அரசியல் வாதி என்பதாலேயே அரசாங்க அதிகாரிகள் அவரைக் கடந்து தம்மிச்சையாக பொதுநலனுக்குப் புறம்பாக எதுவும் செய்து விட முடியாது.

கலை, இலக்கியம் போன்றவற்றில் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. கலைஞர்களை அவர் நன்ருக இனம் கண்டு கொள்வார். இயன்ற போதெல்லாம் தகுதியுள்ளவர்களுக்குத் தமது ஆதரவைக் காட்டத் தயங்கியதில்லை.

மாபெரும் தேசீயத் தலைவர்களில் ஒருவராகவும், தமிழ்நாட்டின் தவப்புதல்வராகவும் விளங்கிய திரு. முத்துரங்க முதலியாரின் மருமகர். அவர்தான் இவருடைய தேசீய வாழ்க்கைக்கு வழிகாட்டி. தயாள குணமும், பக்திச் செல்வமும், பழம் பண்பாட்டின் பாதுகாவலராக விளங்கிய பெருந்தன்மையும் கொண்ட முத்துரங்க முதலியாரின் வழித் தோன்றல் என்று என்னைப் போன்றவர்கள் திரு. பக்தவத்சலம் அவர்களிடம் இடையருத நட்பும் அன்பும் பேணி வருகிறோம்.

தமிழ்நாட்டின் அரசியலில் பெரும் புயல்கள் தோன்றி பல பேர் இருக்குமிடம் தெரியாமல் சிதறிப்போய் விட்டார்கள். எந்தப் புயலுக்கும் ஈடு கொடுத்துக் கொண்டு அரை நூற்றுண்டுக் காலம் நாட்டின் விடுதலைக்கும் மறுவாழ்வுக்கும் அரும்பணி புரிந்த அயராத தொண்டர்களிடையே திரு. பக்தவத்சலம் அவர்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு.

அவருடைய ஐம்பதாண்டு பொதுப்பணி நமது தமிழ்நாட்டின் —பாரத நாட்டின்—வரலாற்றையே விளக்கும். இளைஞர் சமுதாயத்திற்கு அவரது உழைப்பு, தியாகம், பொறுமை, சீலம், நட்புறவு, நடுநிலை போன்ற உன்னதப் பண்புகள் நிச்சயம் வழிகாட்டும்.

அவரது புகழ் தனிப்பட்ட மனிதரின் புகழ் அன்று. உயர்ந்த குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்ற ஒரு உத்தமத் தமிழனின் — இந்தியனின்—புகழ். இதைப் பாராட்டுவது பெருமைக் குரியது.

மூதறிஞர்

திருமுருக கிருபானந்தவாரியார்

எந்நாளும் எவ்விடத்தும் எல்லோரும் ஏத்துகின்ற
முன்னாள் முதலமைச்சர் மூதறிஞர்—பண்ணுளும்
நாட்டுக் குழைத்த நவில்பக்த வத்சலன்சீர்
ஏட்டுக் கடங்கா இயல்.

மாநில அளவில் பழம்பொருள் ஆய்வுத்துறை தொடங்க இவர் செய்த பணியே இவரது பணி களில் தலையாயது.

ஒப்பற்ற இரு பணிகள்

சா. கணேசன், எம்.எல்.சி.
ஸ்தாபகர்: கம்பன் கழகம்

முன்னாள் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களை நான் பல்லாண்டுகளாய் நன்கறிவேன். 1935 முதல் பல்லாற்றானும் நெருங்கிப் பழகி வந்துள்ளேன். இந்திய தேசியக் காங்கிரஸில் ஒரு நோக்குடன் இணைந்து பணியாற்றிய அந்தப் பழைய நினைவுகள் இன்றும் என் நெஞ்சில் பசுமையுடன் நின்று மகிழ்வூட்டுகின்றன.

அமரர்களான எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார், முத்துரங்க முதலியார், வேதரத்னம், ஓமாந்தூரார் முதலியவர்களுடன் பல்வேறு நிகழ்ச்சி களில் கலந்துகொண்டு திரு. பக்தவத்சலமும் ஆற்றிய அரும்பணிகளை நான் நன்கறிவேன். அவர்களுடன் என்றும் இணைந்து பணியாற்றிய சிறப்பை எல்லாம் எண்ணும்போது என்னுள்ளம் பெருமையால் பூரிக்கின்றது. அன்றெல்லாம் யார் அதிகம் கஷ்ட நஷ்டங்கட்கு ஆளானார்கள் என்று ஒருவர்க்கொருவர் போட்டி போட்டுக்கொண் டதை எண்ணும் பொழுது ஏற்படுகிற உள்ள நிறைவுதான் இன்னும் பலரை ஊக்குவிக்கும் அருமருந்தாய் — டானிக்காய் — இருக்கிறது.

அவற்றை எல்லாம் இப்பொழுது கூறினல் கட்டுக்கதை போலக் கூடத் தோன்றலாம். எனவே அவற்றை எல்லாம் அசைபோட்டு மகிழ்வதுடன் வைத்துக் கொண்டு, சமீப காலத்தில் திரு. பக்தவத் சலம் முதலமைச்சராய் இருந்த காலத்தில் நிகழ்ந்தவற்றுள் இரண்டை மட்டும் கூறிவிட்டு இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

''தமிழக வரலாறு செம்மையாக எழுதப்படவில்லை. வரலாறு எழுத இன்றியமையாது வேண்டத்தக்க பிடிபாட்டுச் சான்றுகள் தமிழகத்தில் உள்ள அளவு வேறெங்குமே இல்லை. பல்வேறு செய்திகள் பல்வேறு இடங்களில் கல்வெட்டுக்களாக உள்ளன. கல்வெட்டுக்களில் மிகமிகப் பெரும்பாலானவை ஆலயங்களிலேதான் உள்ளன. சுமார் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள்

தமிழகத்தில் உள்ளன. அவற்றில் கி. மு. மூன்றும் நூற்றுண்டு தொடங்கி சங்கிலி வளையம் போலத் தொடர்பு அறுமல் பற்பல சான்றுகள் புலப்படுத்தப் பட்டுள்ளன. அரசியல், சமுதாயம், வாணிகம், சமயம், நீதி, நிர்வாகம், போர், தேர்தல், கல்வி, தொழில், கலை முதலான பற்பல துறைகளைப் பற்றிய செய்திகள் காலம், இடம், மன்னர், விவரங்களுடன் குறிக்கப்பட்டுள்ளன.

''இவற்றை எல்லாம் தொகுத்துப் படி எடுத்து, அச்சிட்டு வழங்கினுல்தான் தமிழகத்தின் சரியான வரலாறு செம்மையாக எழுதப்பட முடியும். அதற்கு மைய அரசு போதிய அக்கறை காட்டவில்லை. மைய அரசு நிர்வகிக்கும் பழம்பொருள் ஆய்வுத் துறைக்குக் கெட்ட எண்ணம் இல்லாவிட்டாலும் அலட்சிய புத்தியும், சோம்பேறித்தனமும் அதிகம். ஆனதால்தான் படி எடுத்த கல்வெட்டுக்கள்கூடப் பதிப்பிக்கப் படவில்லை'' என்று, இவற்றை யெல்லாம் சான்றுகளுடன் விரிவாகச் சட்டப் பேரவையில் எடுத்துக் கூறினேன்.

முதலமைச்சராக இருந்த திரு பக்தவத்சலம் கல்வி - நிதி - அறநிலை மூன்று துறைகளையும் நிர்வகிப்பவராகவும் இருந்தார். என் பேச்சு முடிந்து அதற்கு விடைகூறும் பொழுது எனது பேச்சைப் பாராட்டி ஆவன செய்வதாக அவையில் கூறினுர். பிறகு என்னிடம் தனியாக வந்து தம்மைச் சந்திக்கும்படியும் கூறினுர். அங்ஙனமே சில தினங்களில் அவரை அவரது அலுவலக அறையில் சந்தித்து விஷயத்தை எடுத்துரைத்தேன். மிகுந்த அக்கறையுடன் அதைக் கேட்ட அவர் மாநில அரசு நிலையில் பழம்பொருள் ஆய்வுத்துறை ஒன்றை அமைக்க ஒரு திட்டம் தயாரித்துத் தரும்படி சொன்னுர்.

அதன்படி ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்தேன். அதைப் படித்துப் பார்த்துவிட்டு இத்துறையில் ஈடுபாடுள்ள சிலரைக் கொண்ட ஒரு நிபுணர் குழுவைக் கூட்டி அதில் இதைப் பரிசீலித்து அறிக்கை சமர்ப்பிக்கச் செய்தார்.

அரசாங்க அதிகாரிகள் இருவரும், பல்கலைக் கழகத்து வரலாற்றுப் பேராசிரியர்கள், பழம்பொருள் துறையினர் முதலிய சுமார் ஏழெட்டுப் பெயர்கள் கூடி என் திட்டத்தைப் பரிசீலனை செய்து அங்கீகரிக்கப் பெற்றது. உடனே முதலமைச்சர் அதை ஏற்றுக்கொண்டு அதற்கான சட்டத்தைத் தயாரிக்கச் செய்து உடனடியாக நிறைவேற்றியும் வைத்தார். அதன் காரணமாகவே மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையில்கூட இல்லாத நிலையில் நமது மாநிலத் தொல்பொருள் துறைக் கென்றே தனியாக ஓர் அச்சகமும் ஏற்பட்டிருக்கிறது. இத் துறைதான் கோலாலம்பூரில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டுக்கருத்தரங்கிலும், சென்னையில் நடந்த மாநாட்டுக் கலைக் காட்சியிலும் அரிய வரலாற்றுச் சான்றுகளை யெல்லாம் தொகுத்தடுக்கிப் பேரும் புகழும் சூடிக் கொண்டது.

அன்றியும், சென்னையிலும், மதுரையிலும் கல்வெட்டுக். கருத்தரங்குகள் நடத்தி எத்தனையோ இளைஞர்கட்குக் கல்வெட்டுப் பயிற்சி கொடுத்துச் சிறந்த பணியாற்றியுள்ளது. நிச்சயமாகச் சொல்கிறேன், இவை எல்லாம் திரு. பக்தவத்சலம் அளித்த ஆக்கத்தாலேதான் நடந்தன. நாட்டிற்கு அவர் எவ்வளவோ பாடுபட்டிருக்கலாம்; தொண்டாற்றியிருக்கலாம்; நன்மை செய் திருக்கலாம். நான் நினைக்கிறேன், இந்தப் பணிதான் அனைத்திற்கும் தலையாய தென்று!

மற்றொன்று சட்டசபைக் காலம் முடியும் தருவாயில் நடந்தது. தமிழ்நாட்டின் பெருமையும், நன்மையும் பல்லாயிரக் கணக்கான திருக்கோயில்களிலேதான் இருக்கிறது என்று நம்புபவன் நான். நில உச்ச வரம்புச் சட்டம் வந்தபோது நான் அதனைப் பலமாக எதிர்த் தவன். மேலும் ''ஆலயங்கள் போன்ற அறநிலையங்கள் இச்சட்டம் அமலானால் நிச்சயம் அழிந்துபோகும். அதன் பிறகு தமிழச் சாதி இருந்தும் ஒன்றுதான்; இல்லாமற் போனாலும் ஒன்றுதான்'' என்று, ஆலயங்களின் பணியையும், அவற்றின் இன்றியமையாமையையும் பற்றி உருக்கமாக எடுத்துரைத்தேன். இயல்பாகவே ஆலயங்களின் தேவையை நன்குணர்ந்துள்ள முதலமைச்சர் திரு பக்தவத்ஸலம், என் உரையை ஏற்றுக் கொண்டாலும் அரசாங்கம் கொணர்ந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய கடமையுடையவரா யிருந்தார். சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகு இச் சட்டத்தால் கோயில் எப்படிப் பாதிக்கப்படும், எவ்வளவுக்குப் பாதிக்கப்படும் என்பதை ஓர் உயர்நிலை அதிகாரியைக் கொண்டு ஆராயச் செய்தார். அது முடிவு பெற்று உருவெடுத்து அந்த அதிகாரின் அறிக்கையாக அரசுக்கு வந்த போது சட்டசபை கலையச் சில நாட்களே இருந்தன.

அவசர அவசரமாக ஏற்கெனவே நிறைவேற்றப்பட்ட அந்த உச்சவரம்புச் சட்டத்திற்கு ஒரு விதிவிலக்குத் திருத்தம் கொண்டு வரப்பெற்றது. உறுப்பினர்களில் சிலர் காலக்கெடு பற்றி ஆட் சேபணை செய்தனர். எதிர்க்கட்சியிலிருந்த நான் அவர்களை எல்லாம் பெரிதும் வேண்டிக்கொண்டேன். அவர்களும் பெரிய மனத்துடன் ஆட்சேபணையை வற்புறுத்தாமல் விட்டனர். ஆனதால்தான், ''கோவில், மசூதி, மாதா கோயில், மற்றும் அறநிலையங்கள் போன்றவற்றின் நிலங்கட்கு இச் சட்டம் செல்லுபடியாகாது'' என்ற திருத்தம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப் பெற்றது. இச்சட்டம் நிறைவேறிய சில நாட்களில் சட்டப் பேரவையும் கலைந்தது. மறு தேர்தலும் வந்தது.

இந்த இரண்டு பணிகளும் ஒப்பற்ற பணிகள். திரு. எம். பக்தவத்சலம் பெயரைப் புகழைப் பன்னெடும் காலம் பரப்பிக் கொண்டிருக்கும்.

தாம் கொண்ட கருத்தை திடமாகப் பற்றி நிற்பவர்; எதிர்ப்புகளையும் தாங்கிச் சகித்துக் கொள்ளும் ஆற்றலுடையவர்.

கொள்கைப் பற்று மிக்கவர்

ரா. கிருஷ்ணசாமி நாயுடு, எம். எல். சி.
முன்னாள் தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களைப் பற்றிய சிறப்பு நூலுக்கு ஒரு கட்டுரை எழுதியனுப்புமாறு வேண்டிக் கொண்ட தொகுப்பு நூல் தயாரிப்புக் குழுவினருக்கு நன்றி.

பரிச்சயம் :

ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்களைக் கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். பின்னைய 25 ஆண்டுகள் அவர்களிடம் எனக்குப் பரிச்சயமும், தொடர்பும் வளர்ந்து வந்திருக்கிறது. காங்கிரசில் பணிகளாற்றி வந்த காலத்திலும், சுதந்திரப் போராட்ட காலத்திலும் அவர்களுக்கும் எனக்கும் இருந்த தொடர்பைக் காட்டிலும், அவர்கள் அரசு நிர்வாகப் பொறுப்பிலிருந்து வந்த காலத்தில்தான் அவர்களிடம் எனக்கு நெருங்கிய தொடர்பிருந்திருக்கிறது என்று குறிப்பிடுவது பொருத்தமாகும்.

தொடர்புகள் :

காங்கிரஸ் நிர்மாணத் திட்டப் பணிகளிலும், கிராம புனருத்தாரணம், பிர்க்கா டெவலப்மெண்ட், சமுதாய நலத்திட்டம், கூட்டுறவு கல்வி ஆகிய ஆக்கப் பணிகளிலும் நான் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்திருப்பதே அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளக் காரணமாயமைந்தது.

ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் மந்திரி பதவியிலிருந்து வந்த காலத்தில் மேற்சொன்ன பொதுப்பணிகள் சம்மந்தமாக அவர்களிடம் நான் கோரிய அரசின் உதவிகள் எதையும் பெறுதிருந்ததில்லை.

முதல் மந்திரி-கட்சித் தலைவர்:

ஸ்ரீ பக்தவத்ஸலம் முதல் மந்திரியாயிருந்த கால முழுவதும் நான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராயிருந்து வந்திருக்கிறேன். அவ்வமயம், எங்களிருவருக்கு மிடையே பஞ்சாயத்துக்கள் நிர்வாகம் பற்றிய கருத்து வேற்றுமைகள் தவிர, வேறெதிலும் மாறுபட்ட கருத்துக்கள் இருந்ததில்லை. பஞ்சாயத்துக்களைப் பிடித்த அந்த கிரஹணம் — இன்னும் நீங்கிய பாடில்லை. அவர் போட்ட முடிச்சை யாராலும் கழற்ற இயலாது போலும்!

கொள்கைப் பற்றும், மன ஊறுதியும்:

தாம் கொண்ட கருத்தைத் திடமாகப் பற்றி நிற்பவர் ஸ்ரீ பக்தவத்ஸலம். எதிர்ப்புகளையும் தாங்கிச் சகித்துக் கொள்ளும் ஆற்றலுடையவர். சிறிய உருவினராய்த் தோன்றிலும் அறிவின் பலமும், நெஞ்சுறுதியும், தீரமும் வாய்ந்தவர். இந்தி எதிர்ப்புக் கலவரங்களின் போது அதை ஸ்ரீ பக்தவத்ஸலம் சமாளித்த விதமே இதற்குச் சான்று. எனவேதான் எந்த மந்திரி சபை அமைவதற்கும் அவர் இன்றியமையாதவராயிருந்து வந்தார். அவர் நிர்வகிக்காத அரசாங்கத் துறை ஏதேனுமிருந்ததா வென்பது ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

கர்மமே கண்ணாயிருப்பவர்:

தம் முன்னுள்ள வேலைகளைக் கண்டு மலைக்காதவர் ஸ்ரீ பக்தவத்ஸலம். வந்தவர்களுடன் பேசிக் கொண்டே பைல்களைப் பார்த்துத் தள்ளிக் கொண்டே யிருப்பார். அவரைக் காண வந்தவர் களில் சிலருக்கு இது பிடிக்காது. தம்மை அலட்சியம் செய்வதாகக் கருதுவோரும் உண்டு. நான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராயிருந்தா லும் மற்றவர்களைப் போன்றே சீட்டனுப்பி அனுமதி பெற்றுத்தான் சென்று பார்ப்பேன். செக்ரட்டரிகள் போன்ற இலாகா தலைமை யினர் முதலமைச்சரைக் காண வந்நால் அவர்களைக் காத்திருக்க வைக்க மாட்டார். எனவே, நான் முன்னமே அங்கு சென்றிருந் தாலும் அவர்கள் சென்று பார்த்துவரும் வரை காத்திருப்பேன். எந்த மந்திரியையும் நான் பார்ப்பது இவ்வாறே. ஒரு மந்திரி யேனும் நாம் சொல்லும் காரியமாக செக்ரட்டரியேட்டிலுள்ள எந்த அதிகாரியையும் கூப்பிட்டு நம் எதிரில் வைத்து விவாதிக்க மாட்டார். அது அந்தக் காலம்.

ஞாபக சக்தி:

ஸ்ரீ பக்தவத்ஸலம் ஞாபகத்தில் கொள்ள வேண்டியதை மறக்காதவர். தம் முன்வரும் பிரச்னைகளைத் துருவி யறிந்து கவனத் தில் கொள்பவர். ஒருமுறை ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மீது

வந்த புகார் பற்றி பேச்சு வாக்கில் சொல்ல நேர்ந்ததை ஞாபகத்தில் கொண்டு ஐ. ஜி. அருள் என்பவரிடம் சொல்லியிருக்கிறார். அவர் என்னுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு ''அந்த சப் இன்ஸ்பெக்டரை மாற்ற வேண்டு மென்பது உங்கள் கருத்தா?'' எனக் கேட்டார். ''விசாரித்து அறிந்துதான் சொல்ல வேண்டும். ஒன்றும் செய்ய வேண்டாம்'' என்று அவருக்கு பதிலளித்துவிட்டு, விசாரித்தறிந்த பின் அவர் அங்கேயே இருக்கலாமென்று சில நாட்களில் அவருக்குச் சொல்லி விட்டேன். அது ஒரு காலம்.

சிரமமேற்பவர் :

ஸ்ரீ பக்தவத்ஸலம் உட்கொள்ளும் உணவின் பரிமாணத்தைக் கொண்டு அவருடைய உழைப்பையும், நீண்ட பிரயாணம் மேற்கொள்வதையும் கருதிப் பார்க்க முடியாது. திருச்செந்தூரில் மதிய உணவு, பழனியில் மாலை 3 மணிக்கு ஒரு அலுவல். இரண்டும் படை வீடுகளாகையால் தூரம் தொலைந்து விடுமோ என்னவோ! வெயில் எரிக்கிறது. காரில் சுகமாகப் பிரயாணம் செய்கிறார். நம்மால், ஏன்? என்றால் இதை நினைத்துப் பார்க்கவே முடியாது. சுற்றுப் பிரயாணத்தில் நிகழ்ச்சிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று பலரும் கேட்பார்கள். அதைத் தொல்லையாகக் கருதாமல் அத்தனை நிகழ்ச்சிகளும் இடம் பெறுவதற்கேற்ற வகையில் அமைத்துக் கொள்ள முயல்வார். சுற்றுப் பிரயாணங்களில் ஏற்படும் சிரமங்களையும் வசதிக் குறைவுகளையும் கருதி அவர் அலுத்துக் கொள்வதையோ, சலிப்புத் தெரிவித்துக் கொள்வதையோ நான் கண்டதில்லை. மாறாக இவ்வளவு சிரமங்களைத் தாங்கும் வலிமை கண்டு வியப்பதுண்டு. அவருடைய வருகைக் கெனவும், அவர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளுக் கெனவும் விசேஷ விமரிசையான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்க வேண்டுமென்று அவர் கருதியதில்லை.

கடவுள் பக்தி :

ஸ்ரீ பக்தவத்ஸலம் வைஷ்ணவரா, சைவரா என ஆராய்ந்து கணிக்கப்புகுபவர்கள் தோல்வியே காண்பர். தெய்வ பக்தியுள்ளவர். செல்லுமிடங்கள் தோறுமுள்ள ஆலயங்களை எத்தனை முறை அங்கு சென்றாலும் சென்று தொழுதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார். ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடியருளியுள்ள பாடல்களின் கருத்துக்களை இவர் பேசும்போது பலமுறை சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தப் பாடலை அப்படியே அவர் சொல்லக் கேட்டதில்லை. ஆலயத் திருப்பணிகளில் அதிக அக்கரை காட்டி வந்துள்ளார். முக்கியத்துவம் பெறாத பணிகளை பொது மக்களின் நலனுக்குகந்த பணிகள் என்ற பேரால், மந்திரிகளுக்கோ, வேண்டியவர்களுக்கோ அவரவர் பகுதிகளில் விரும்பும் பணிகளைச் செய்து கொள்ளக் கருதி, ஆலயங்களின் நிதிகளைச் சுரண்டி அள்ளி வீசுவதற்குச் சற்றும் இடந்தர மாட்டார். இது அக்காலத்தில்.

சோதனைக் காலம்:

மனத்துக்குகந்த தல்லாவிடினும், விசித்திரமான போக்குகளையும், அதன் விளைவுகளையும் நாடு கடந்து கொண்டிருக்கும் இக்காலத்தில் நாம் வாழ்ந்து அதனையும் காணும் வாய்ப்பைப் பெற்றிருப்பதும் ஓர் விசேஷ அனுபவந்தான் என்று கருதிக்கொள்ள வேண்டிய நிலைமையில் நாமிருக்கிறோம். அரசியலில் ஆரோக்கியம் நிலவுமா என்ற ஐயப்பாடு தோன்றும் இந்த நிலையிலும், வயோதிகம் காரணமாகத் தமக்குள்ள அசௌகரியங்களைச் சிறிதும் கருதாமல் சந்தர்ப்பம் வாய்ந்த போதெல்லாம் தமது அரசியல் கருத்துக்களையும், தீய சக்திகள் செயல்பட்டு வருவது பற்றியும் விமர்சித்துப் பேசி செயலாற்றிவரும் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் அமோக திடகாத்திரராய் நீடு வாழ அருள் புரியவேண்டி இறைவனை இறைஞ்சுகின்றேன்.

அந்த நாள் காந்தி நேரு தலைமையிலின்ப முற்றோம்
இந்த நாள் எங்கோ நாடு செல்கின்ற மாற்றம் கண்டோம்
வந்த நாள் அந்த நாளைத் திரும்பியே பார்த்திடாதோ
எந்த நாள் வரினும் நன்னாளாகுக வென்றிருப்போம்.

இசைக் கல்லூரிக்கு உதவியவர்

எம். எம். தண்டபாணி தேசிகர்
தர்மபுரம் ஆதீன இசைப்புலவர்

எனது மதிப்பிற்கும் அன்பிற்கும் உரிய தேசபக்தர், அமைச்சர், சமயப்பணியாளர், தமிழ்—தமிழர்—தமிழ் இசை ஆர்வமுள்ளவர், அறப்பணியாளர், தேசியத் தலைவர், கனம் உயர்திரு. எம். பக்தவத்ஸலம் அவர்கள், ஐம்பது ஆண்டு பொதுப்பணி (பொன் விழாப்பணி) சிறப்புநூல் வெளியிடுவது கண்டு மிக மிக மகிழ்ச்சி கொள்கிறேன்.

இசைத்துறையில் கர்நாடக இசைக் கல்லூரி வளர்ச்சிக்கு திரு. பக்தவத்ஸலம் அவர்கள் மிகவும் உதவியாயிருந்தார்கள். பல இசைவாணர்களுக்கும், புலவர்களுக்கும் தாமே தலைமை தாங்கி பட்டங்கள் வழங்கிப் பாராட்டியுள்ளார்கள்.

தெய்வீகத் திருமுறைகள், தேவாரப் பாடல்கள் வளர்ச்சியடைவதற்கும், ஆலயப்பணிகள் சிறப்பாக நடைபெறுவதற்கும் ஆக்கம் அளித்தவர்கள். இவர்கள் பல துறைகளிலும் பங்கு கொண்டு ஆர்வத்துடன் பணியாற்றியது குறிப்பிடத் தக்கது. இவர்கள் தொண்டு பல நூற்றாண்டு நம் நாட்டிற்குப் பயன் பெற இவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ வேண்டுமென்று இறையருளை வணங்குகிறேன்.

11 MAR 1973
MADRAS



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி நிகழ்ச்சியில்
பிரதமர் நேரு, திரு. காமராஜ், பல்கலைக்கழகத் துணை வேந்தர்
டாக்டர் ஏ. எல். முதலியார் ஆகியோருடன் திரு. பக்தவத்ஸலம்

கட்சித் தலைமைக்குக் கடைசிவரை பெருமதிப்பளித்து வந்துள்ள பெருமை அவருக்குண்டு.

தியாகிகளுக்கு உதவியவர்

மு. சுப்பிரமணிய முதலியார்
தலைவர், காங்கிரஸ் அரசியல் தியாகிகள் சங்கம்,
சோழவந்தான்.

1920 - ல் உசிலம்பட்டி தாலுகா போர்டு ஆபீஸில் வேலை பார்த்து வந்த நான், காந்தியடிகள் மதுரைக்கு வருவது அறிந்து மதுரை சென்று அவரது பிரசங்கத்தைக் கேட்டேன். அதன் பலன் வேலையை விட்டு விட்டு பழம்பெரும் தேச பக்தர் முனகால எஸ். பட்டாபிராமய்யா, மட்டப்பாறை ஆர். எஸ். வெங்கட்டராமய்யர் ஆகியவர்கள் தலைமையில் தேசத் தொண்டில் ஈடுபட்டேன். 1922-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 - ந்தேதி ஓராண்டு சிறைவாசம் எங்களுக்குக் கிட்டியது.

1923 ஆகஸ்ட் 30 - ந் தேதி தண்டனை முடிந்து கடலூர் சிறையிலிருந்து வெளி வந்தோம். நான்கு தலை முறைகளாக எங்கள் முன்னோர்களுக்கும், புகழ் மிக்க பாளையத்தார் குடும்பத்துக்கும் நெருங்கிய நட்புறவு உண்டு. அக்குடும்பத்தில் உதித்த திரு பி. டி. ராஜன் அச்சமயம் சென்னை சட்ட மன்றத்தில் பிராமணர் அல்லாதார் கட்சிக்குக் கொறடாவாக இருந்தார். அன்றைக்கு மிகப் பிரபலமான, உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு டி. வி. கோபால்சாமி முதலியார் அவர்களின் இரண்டாவது மகளைத் திருமணம் செய்ய நிச்சயித்து அந்தத் திருமணம் 1923 ல் சென்னை மைலாப்பூரில் நடைபெற்றது. அத்திருமணத்திற்கு நீண்ட கால நட்புறவு காரணமாக நானும் சென்றிருந்தேன். சென்னையில் நடைபெற்ற மிகப் பெரிய திருமணங்களின் வரிசையில் அதுவுமொன்று.

திரு. கோபால்சாமி முதலியார் அவர்களின் மூத்த மகளைத் திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்கு மணமுடித்திருந்தது தெரிந்த பின் எனக்குள்ளே பக்தவத்சலம் அவர்களிடம், பற்றுதலும், பிணைப்பும்

என்னையறியாமலே உதித்தன. ஜஸ்டிஸ் கட்சி கொடி கட்டி ஆட்சி நடத்திய அந்நாளில் அதற்கு ஈடுகொடுத்து மக்களைத் தன் வயப் படுத்துவதற்குச் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டவர்களில் எஸ். சீனிவாசய்யங் கார், எஸ். சத்தியமூர்த்தி, திரு. வி. க, திரு சி. என். முத்துரங்க முதலியார், திரு டி. வி. கோபால்சாமி முதலியார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

ஜஸ்டிஸ் கட்சியில் பிரபல பேச்சாளர்களில் முக்கியமானவர்கள் ஜனசங்கர கண்ணப்பர், ஜே. என். ராமநாதன், டி. வி.ா சுப்பிரமணியன் ஆகியோர். அவர்கள் பிராமணர், பிராமணரல்ல தவர் பிரச்னைகளை முன் வைத்துக் காரசாரமாகப் பேசுவார்கள். தனிப்பட்டவர்களைப் பற்றியும் ஏசுவார்கள். பிராமணரல்லாத காங்கிரஸ் தலைவர்களை பூணூல் போடாத பார்ப்பனர் என்றெல்லாம் ஏசுவார்கள். இத்தாக்குதலுக்கு ஆளானவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் முத்துரங்க முதலியார் அவர்களும், கோபால்சாமி முதலியார் அவர்களும், இன்னும் சிலரும் ஆவர்.

பக்தவத்சலம் அவர்கள் தீவிர காங்கிரஸ்காரர். இதனால் அவர் பால், மரியாதை கலந்த அன்பால் நான் பிணைக்கப்பட்டேன்.

இயல்பாகவே கூச்ச சுபாவமும், தன்னடக்கமும், கொண்ட அவர் சத்தியம், அஹிம்சை, தெய்வ நம்பிக்கை, தேசப்பற்று ஆகிய பண்புகள் மிக்கவர். பேட்டை முதலியார் என்று சுற்று வட்டாரங் களில் மிக மரியாதையுடனும், நன்றி கலந்த நெஞ்சுடனும் அழைக்கப் பெற்ற தாய்மாமன் மார்களின் அரவணைப்பிலும், ஆதரவிலும், பராமரிப்பிலும், கண்காணிப்பிலும் சிறு பிராயத்தி லிருந்தே பயிற்சி பெற்று வளர்ந்த பெருமை இவருக்கு உண்டு.

அப்பயிற்சி முதிர்ச்சி யுற்றபோது சகல விஷயங்களையும் நுணுகி ஆராய்ந்து முடிக்கும் திறனும் தகுதியும் பெற்றார்.

1919-ல் ரௌலட் சட்ட அறிவிப்பும், பின்னர் ஜாலியன் வாலாபாக் படுகொலைகளும், காந்தியடிகளை இந்திய அரசியல் அரங்கில் தீவிரமாக ஈடுபடுத்தியது.

காந்தியடிகள் நாடு முழுவதும் பிரயாணம் செய்து அர சாங்கத்தை எதிர்த்து ஒத்துழையாமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளும்படி மக்களை உருக்கமாக வேண்டினார். அதற்கிணங்க மக்கள் பல்லாயிரக் கணக்கில் திரண்டெழுந்து போர்க்கொடி ஏந்தினர். சகல விதமான தியாகங்களையும் நாட்டுக்கு அளிக்க முன் வந்தனர்.

பக்தவத்சலம் அத்தகைய தியாக வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு நாட்டுப் பணியில் இன்றுவரை அயராது சேவை புரிந்து வருகிறார். அவர் மும்முறை சிறை சென்றுள்ளார். காங்கிரஸ் நடத்திய போராட்டங்களில் சட்டசபையில் நுழைந்து போராடுவது என்ற திருப்பம் ஏற்பட்டதும் 1937-ல் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ராஜாஜி அமைத்த அமைச்சரவையில் பார்லிமெண்டரி காரியதரிசி பதவி அளிக்கப் பெற்றார்.

ஏற்கெனவே தான் வகித்து வந்த மக்கள் தொடர்புள்ள பல நிறுவனங்களில் சிறப்பாகச் செயலாற்றியதன் மூலம் எஸ். சீனிவாசய்யங்கார், ராஜாஜி, சத்திய மூர்த்தி போன்ற தலைவர்களின் நன்மதிப்பை எய்தியதின் காரணங்களால் அடுத்தடுத்து ஏற்பட்ட அமைச்சரவைகளில் அவர் அமைச்சர் பதவி வழங்கப் பெற்றார்.

நம்பிக்கை, நாணயம், சத்திய நெறி நிற்றல், புண்படப் பேசாத இனிய குணம், ஆரவார ஆடம்பரமற்ற எளிய நடத்தை, கூரிய அறிவுடன், விஷயங்களை விளக்கும் பாங்கு ஆகிய மேலான தன்மைகள் அவரது அரசியல் ஈடுபாட்டை பரிமளிக்கச் செய்தன.

மந்திரி சபைகள் மாறிய பல்வேறு சமயங்களிலும் அமைச்சரவையில் பக்தவத்சலம் அவர்களுக்கு இடமளிக்கப்பட்டதுடன், இறுதியாக அவர் முதலமைச்சர் பதவியும் பெற்றார். அரசாங்க அமைப்பிலுள்ள பல்வேறு துறைகளிலும் செயலாற்றிய அனுபவம், முதலமைச்சரின் பொறுப்பு மிக்க பணியினுக்கு அரண் செய்தன. தீர்க்கப்பட வேண்டிய கட்டுகளடங்கிய வேலைகளின் தரமறிந்து குறிப்பெழுதி ஆணை வழங்கும் அவரது திறனை அரசியல் அறிஞர்கள் மெச்சுகிறார்கள்.

கட்சித் தலைமைக்குக் கடைசிவரை பெருமதிப்பளித்து வந்த பெருமை அவருக்குண்டு. தக்க சமயத்தில் வரும் பொருள் தெரிந்து கொண்ட பக்தவத்சலம், மக்களுக்கு ஜனநாயக சோஷலிசத்தில் நம்பிக்கை ஏற்படும் வகையில் திறமை மிக்க பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் அணியில் நின்று தொண்டாற்றி வருகிறார்.

தெய்வ பக்தி நிறைந்தவரும், நாலாயிரப் பிரபந்த முதல் திருமூலர் திருமந்திர நூல்வரை கற்றுத் தெளிந்த ஞானமுடையவரும், பொறுப்புள்ள பெரும் பதவிகளுக்குரிய பணிகளில் சிறப்புறச் செயலாற்றியவரும், பதவிகளில்லாத போது அன்றாட அவல நிலைகளை மக்களுக்கு எடுத்தியம்பி விழிப்புறச் செய்யும் ஆற்றல் படைத்தவரும், எளிய உடை, இனிய பேச்சு உடையவரும், தனக்கு இதுதான் வேண்டும் என்று இதுவரை யாரையும் கேட்டுப் பெறாதவரும், தள்ளாத வயதில் ஏற்படும் பலஹீனங்களைப் பொருட்படுத்தாது அழைக்குமிடம் எல்லாம் அயராது சென்று பயனுள்ள பணியாற்றி வருபவருமான பக்தவத்ஸலம் அவர்களுக்கு தக்கதொரு

இடமளிக்க மனமில்லாத கட்சித் தலைமை, மக்களுக்குச் சரியான வழிகாட்டும் திறனுடையாரின் சேவையை இழக்கும் கேட்டை உணர்ந்ததாகத் தெரியவில்லை. கட்சியின் தூண்களென்று தங்களை பாவித்துக் கொள்வோர், கட்சி நலனையும் மக்கள் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு செயல்படின் சிறப்பு மிகும் என்பது என் துணிபு.

பக்தவத்ஸலம் அவர்களைப் பொறுத்த மட்டில் ''எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே'' என்றபடி துணிவுடன் திரும்பிப் பாராமலே முன்னேறிக் கொண்டிருக்கிறார். ஆளுங்கட்சியினர் அளித்த வாக் குறுதிகளை நிறைவேற்றாமையையும், ஆட்சியில் அவ்வப்போது ஏற்படும் குறைபாடுகளையும் விளக்கி மக்கள் அறியும்படி செய்வது ஜனநாயகத்தில் எதிர்க்கட்சிகளின் தலையாய கடமைகள். அவைகளை நிறைவேற்ற துணிவுடமையும், இன்னல்களையும், அல்லல்களையும் எதிர்த்து நிலைப்பட நிற்கும் தியாக மனப்பான்மையும் இன்றியமை யாதவை. ஆபத்து நிறைந்த இப்பெருந் தொண்டை எவருக்கும் பின்னடையாது அயராது ஆற்றி வருகிறார் நம் தலைவர்.

மூதறிஞர் ராஜாஜியிலிருந்து வரிசையாக முதலமைச்சர் பீடத்தை அலங்கரித்தவர்கள் செய்யாத செம்பணியை தாம் முதல்வராயிருந்த போது தியாகிகளுக்கு உதவி நிதி வழங்கியதன் மூலம் இவர் செய்திருக்கிறார். அதன் அடிப்படையில் இன்று மத்திய அரசும் விடுதலை வீரர்களுக்கு மாதந்தோறும் கணிசமான அளவில் நிதியளிக்க முன் வந்திருக்கிற தென்பதை தியாகிகள் நினைவில் கொள்ள வேண்டுமாறு கோருகிறேன்.

திரு. பக்தவத்ஸலம் அவர்கள் எவ்வித சிபாரிசுக்காகவோ உறவுக்காகவோ ஆளாகாது, தகுதி அடிப்படையையே முன் வைத்து உரிய கோரிக்கைகளை மதிப்பிடுவார். மக்கள் தொண்டே மகத்தான உயிர் மூச்செனக் கருதி 50 ஆண்டுகளாக சோர்வில்லா புனிதப் பணியாற்றி வரும் நம் மதிப்பிற்குரிய அப்பழுக்கற்ற தூய மக்கள் தலைவர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் மேலும் பல்லாண்டு வாழ்ந்து மக்கள் நல்வாழ்க்காக உழைக்க, மனமிரங்கி அருள் புரியுமாறு இறைவனை வேண்டுகிறேன்.

நல்லாரைக் கண்டும், நல்லார் சொற்கேட்டும், இணங்கியிருந்தும் வந்த எனக்கு அவரது குணங்களுரைப்பதற்கு வாய்ப்பளித்த கமிட்டி யாருக்கு என் உளம் நிறைந்த நன்றியறிதலைப் பணிவுடன் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்குக.
நம் தேயத்தினர் நாடொறும் உயர்க.

வந்தே மாதரம்.

இலவசக் கல்வித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்த பெருமை நம் பெருமகனூர்க்கே உரியது என்று அறுதியிட்டுக் கூறலாம்.

பக்திசால் பெருந்தகை

எஸ். நரசிம்மன்

தலைமை ஆசிரியர், எம். சிடி. முத்தையா செட்டியார் உயர்நிலைப்பள்ளி, சென்னை

பாரோர் போற்றும் பெருமை மிகு பாரதத்தில் பெருந்தலைவர்களுள் பெருந்தமிழர் பக்தவத்சலனூரும் ஒருவர் எனின் மிகையாகாது. 'தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து' என்ற பண்டைப் புலவரின் பொன்மொழியை நிலைநிறுத்தத் தோன்றிய சான்றோர்களில் இவர் தலையாய சான்றோர் எனில் சாலப் பொருத்தமே. கரிகால் பெருவளத்தானைப் போன்று கருவிலே திருவுடையார் இவர். பேட்டையிலே தோன்றிக் கோட்டையிலே செங்கோலோச்சிய செந்தமிழர். புரசையிலே கல்வி கற்றதனால் அரசாளும் ஆற்றலும், மயிலையிலேயே வாழ்ந்ததனால் சமய ஞானமும் பெற்றவர் எனின் மிகையாகாது. வேளிர் குடியில் தோன்றியதனால் தாளாண்மையும், அருட் குணமும் பெருகிய ஆன்றோராய்த் திகழ்கின்றார். இவர் வரலாறு இந்திய விடுதலை வரலாற்றோடு இரண்டறக் கலந்ததென்று இன்பமாய்க் கூறலாம்.

வருங்கால இந்தியாவை எழிலாக்க நினைக்கும் இன்றைய இந்திய இளைஞர்கட்கு இவர் தம் வரலாறு நல்வழிகாட்டியாம். பெருந்தமிழர் அவர்கள் 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கேற்ப இளமையிலேயே கற்பனவற்றைக் கருத்தூன்றிக் கற்றார். பின்னர் நாட்டு விடுதலையிலே நாட்டங்கொண்டு அல்லும் பகலும் அயராது உழைத்தார். சாந்தமுறும் காந்தியடிகளைப் பின்பற்றிச் சந்ததமும் ஆற்றிய தொண்டினால் நாடும் விடுதலை பெற்றது. அவ்விடுதலை பெற்ற நம் பாரதத்தின் வெள்ளி விழா ஆண்டிலே பொன்மனச் செல்வரின் பொதுத் தொண்டின் பொன்விழாவும் நிகழ்வது நாட்டுப் பற்றிலே நாட்டம் கொண்ட நல்லோர் அனைவருக்கும் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போன்ற பேரின்பம் தருவதாம்.

காந்தியடிகள் மேற்கொண்ட சாந்த குணமும், சீனிவாச ஐயங்காரின் சீர்த்தி மிக்க பெருமிதமும், இராஜாஜியின் கூர்த்த மதியும், சத்திய மூர்த்தியின் கல்வியறிவும், காமராஜரின் பொது நலத் தொண்டும் ஒன்ருய் இணைந்த ஒருருவினர் இவர் என ஆராய்ந் தறிந்தவர் கூறுவர்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்ற பெரியாரின் வாக்கைப் பொன்னே போல் போற்றி உழைத்து உழைத்து உயர் நிலையை அடைந்த உத்தமர் இவர்.

1937 ஆம் ஆண்டிலே தோன்றிய முதல் காங்கிரஸ் மந்திரி சபையில் பார்லிமெண்ட் செகரட்டரியாகத் தொடங்கிய இவர்தம் அரசியல் வாழ்வு படிப்படியாக வளர்ந்து, தமிழகத்தின் தலைமை அமைச்சர் பதவி வரை இவரை உயர்த்தியவை, அறிவுக் கூர்மையும், அஞ்சாமையும், அயரா உழைப்புமேயாகும்.

அறவாணராம் திருவாளர் பக்தவத்சலனார் அவர்கள் அறநிலைய அமைச்சராக விளங்கிய காலத்தில் திருக்கோவில்கள் பெருநிலை உற்றன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடிய பக்திப் பாசுரங்கள் என்றென்றும் விளங்கும் வகையில் அந்த அந்தத் திருத் தலங்களில், பளிங்குக் கற்களிலே அவர்தம் பாசுரங்கள் பொறிக்கப் பட்டன. மேலும் கோவில்கள் சீர்திருத்தப்பட்டன. எதிர் காலத்தைப் பற்றி அறிவதில் இணையற்றவர் என்பது, இவர் பொதுப் பணித்துறை அமைச்சராய் இருந்தபோது தோற்றுவித்த 'கீழ் பவானித்திட்ட'த்தால் அறியலாம். எல்லோரும் கற்க வேண்டும், நல்லோராய் வாழ வேண்டும் என்ற உயரிய நோக்கை நிலை நிறுத்த, இலவசக் கல்வித் திட்டத்தை இந்தியாவிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்த பெருமை நம் பெருமகனார்க்கே உரியது என்று அறுதியிட்டுக் கூறலாம்.

உலகம் சுற்றி, உலகியல் அறிந்து இன்று உலகு போற்றும் விதத்தில் வாழும் உயர்திருவாளர் பக்தவத்சலனார் அவர்களை இந்நிலைக்கு உயர்த்திய பெரியார்களில் தலையாயவர் மறைந்த மேதை, நாலாயிரப் பிரபந்தம் கற்ற தோல்வி காணா நாவினர், மூதறிஞர் முத்துரங்க முதலியார் ஆவர். அவர்தம் புகழ் நின்று நிலவுக.

சேக்கிழார் குடியிலே தோன்றி, அவர் போன்று பக்தியும், முதலமைச்சர் பதவியும் ஒருங்கே பெற்று, மரபு வழி சிறக்கச் செய்த செம்மல், செந்தமிழ்ச் சிங்கம், பைந்தமிழ்ப் பக்தவத்ஸலனார் வளம் எல்லாம் பெற்று, பல்லாண்டு வாழ வேங்கடவனை வேண்டுகின்றனன்.

பெருந்தமிழர் பக்தவத்சலனார் வாழ்க!
அவர்தம் நறுந்தொண்டு நாளும் வளர்க!
பாருள்ளளவும் பக்தவத்சலனார் புகழ் நிலவுக!

சேக்கிழார் மரபின் சிந்தாமணி

கவியோகி சுத்தானந்த பாரதியார்

பரந்த அறிவும்
பணிந்த நடையும்
நிறைந்த மனமும்
நேரிய ஒழுக்கமும்
சிறந்த படிப்பும்
சீரிய சிந்தையும்
கனிந்த மொழியும்
கருணை யுள்ளமும்
தெளிந்த சொல்லும்
சினவாப் பொறுமையும்
எல்லா ருக்கும்
இனியது செய்யும்
நல்லான், செந்தமிழ்
நாட்டுச் செம்மல்—
புதுத்தமி ழகத்தின்
புண்ணியச் சிற்பி
முதுபெரு வயதிலும்
முயற்சியில் அயரான்
மந்திரி என்ருல்
இந்த ஒருவனே—
வந்தினும் பலநலம்
வழங்காஞே என
நாடெலாம் போற்றும்
வீடெலாம் போற்றும்
சேக்கிழார் மரபின்
சிந்தா மணியிவன்
ஆக்கிய பணி நலம்
ஆயிரம் ஆயிரம்!
ஆலய மணிகள்
அடிக்குந் தோறும்
வாழிய பக்த
வத்ஸலம் என்போம்!

மாசிலா வாழ்வு கண்டாய்

எம். சின்னச்சாமி பிள்ளை
சுதந்திரப் போராட்ட வீரர், சோழவந்தான்

அறநெறி பின்பற்றி அடிமை வாழ் வகற்றிட
அரசியல் வாழ்வு பூண்டாய்
சரசமாய்ச் சுதந்திரப் போரிடைச் சலியாது
சகலமும் போற்ற நின்ருய்
மரகதச் சோலைசூழ் மயிலை யம்பதி தனில்
மாசிலா வாழ்வு கண்டாய்
வரதனும் மகிழ்ந்திட சரோஜினி நங்கையை
மகளாகப் பெற் றெடுத்தாய்
புரவலர் போலவே தியாகிகள் தழைத்திட
போற்றிடும் பென்ஷன் தந்தாய்
விரசமாய்ப் பேசிடும் வீணர்கள் வெட்கவே
வேணபணி செய்து வந்தாய்
நிரந்தர மாகவே செந்தமிழ் நாட்டிடை
நின்புகழ் நீளும் ஐயா!
வரகவியின் புகழ் போல் நின்புகழும் இப்புவியில்
வாழ்கவே! வாழ்த் துகின்றோம்

* * * *

தெய்வீகச் சார்பும் தேசியப் பற்றும் திகழ்கின்ற
பக்த வத்சலம்
ஆய்கின்ற நீதிக்கும் அருமைமிகு பண்பிற்கும் ஆழியாம்
பக்த வத்சலம்
வாய்மையும் நேர்மையும் வழுவாமல் காத்திடும் வாகனும்
பக்த வத்சலம்
காய்கின்ற எதிரியும் கருத்துடன் சிந்திக்கும் கலைஞனும்
பக்த வத்சலம்
பாய்கின்ற சொல்லம்பைப் பாங்குடன் ஏற்றுமே பதில்விடும்
பக்த வத்சலம்
தாயகம் போற்றிடும் தண்டமிழ் நாட்டினில் தன்யனும்
பக்த வத்சலம்
நோய் ஏதுமின்றியே பல்லாண்டு வாழ்கவே! நின்னை நாம்
வாழ்த்துகின்றோம்!

திருமங்கலம் தாலூகா மக்கள் அவரது பணிகளை நினைத்து நன்றி கூறுகிறார்கள்.

சாதனைகள் பல கண்டவர்

புலி மீனாட்சிசுந்தரம்
திருமங்கலம்.

இந்திய அரசியலில், குறிப்பாகத் தென்னாட்டு அரசியல் வானில் மாசு மறுவற்று மங்காத சுந்தர சுடரொளியாகத் திகழ்ந்து வருபவர் நமது பெருமதிப்புக்குரிய தேச பக்தச் செம்மல் திரு. பக்தவத்ஸலம் ஆவர். அன்னாரது 76வது பிறந்த நாள் விழாவில் பாராட்டி வாழ்த்தும் நல்வாய்ப்பினை எனக்கு அளித்த, ''பக்தவத்ஸலம் — 50 ஆண்டு பொதுப் பணி தொகுப்பு நூல் தயாரிப்புக்குழு'' தலைவர் அவர்களுக்கு என்றும் நன்றியுணர்வுடன் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர்திரு பக்தவத்ஸலம் அவர்கள் பழுத்த தேசீய மரபில் வந்தவர் ஆவர். செங்கல்பட்டு மாவட்டத்து சீரும் சிறப்பும் பெற்று தன்னிகரில்லா செல்வாக்குடன் வாழ்ந்த தேச பக்த சீலர் உயர்திரு சி. என். முத்துரங்க முதலியார் அவர்களின் அன்புக்குரிய மருகர் திரு. பக்தவத்ஸலம். கல்லூரி நாட்களிலிருந்து கல்வியறிவையும் நாட்டுப் பற்றையும் ஒருங்கே வளர்த்து வந்தவர். சட்டக் கல்லூரி பயிற்சி முடிந்ததும் அந்நாட்களில் நிகரற்ற தேச பக்த வள்ளலாக விளங்கிய உயர்திரு எஸ். சீனிவாசய்யங்கார் அவர்களின் அரசியல் நேர்மையும் பண்பும் நமது திரு. பக்தவத்ஸலத்தை ஆட்கொண்டன. தனது வாக்கு வன்மையினால், வல்லரசான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை வாட்டி வதைத்த வீரர் உயர்திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களின் தேசீய ஆவேசத்தால் ஆட்கொள்ளப் பட்டவர் திரு. பக்தவத்ஸலம்.

பிறப்பினாலும், வளர்ப்பினாலும், சூழ்நிலையாலும் தேசீயம் ஒன்றையே தனது மூச்சுக்காற்றாகக் கொண்டு சென்ற 50 ஆண்டு காலமாக உயர் அரசியல் வாழ்வு வாழ்ந்து வருகின்றார் திரு பக்தவத்ஸலம். அன்னாரைச் சென்ற நாற்பது ஆண்டு காலத்திற்கு அதிகமாக நான் அறிவேன். அவருடன் மிக நெருக்கமாகப் பழகி அவருடைய உயர்ந்த பண்பியல்களை அறிந்திருக்கின்றேன்.

எந்த நிலையிலும் ஏழை எளியவர்கட்கும், பின் தங்கிய வகுப்பாருக்கும், ஹரிஜனங்களுக்கும் உகந்த நலன்களை கருத்திற்கொண்டு அரசியல் சமூகப்பணிகள் ஆற்றி வந்திருக்கின்றார்,

இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் உயர்திரு பாபு ராஜேந்திர பிரஸாத் அவர்களுடன் திரு பக்தவத்ஸலம் தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளிலுள்ள பட்டி தொட்டிகளுக்கு எல்லாம் சென்று, தீவிர அரசியல் பிரசாரம் செய்து வந்ததை என் போன்ற தொண்டர்கள் என்றும் மறக்க முடியாது. அன்னாருடைய அயராத உழைப்பினால் தான் தமிழ்நாட்டில் தேசீய ஆர்வம் வெள்ளமெனப் பெருக்கெடுத்தது என்று சொன்னால் அது மிகையாகாது. பல பொதுநலத் துறைகளில் பங்கெடுத்துக்கொண்டு — அயராது உழைத்து வந்திருக்கின்றார்.

செங்கல்பட்டு மாவட்டம் ஜில்லா போர்டு மெம்பராகவும் சென்னை துணைமேயராகவும் அவர்கள் ஆற்றிய பணிகளை தமிழ்நாடு நன்கறியும். மேலும் அரசியல் ரீதியில் சட்ட மன்றத்திலும் பல பதவிகள் ஏற்று முடிவில் தமிழ்நாட்டின் முதன் மந்திரியும் ஆனார்.

தமிழ்நாட்டின் தலைசிறந்த தேசபக்தரும் மூதறிஞருமான உயர்திரு சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களின் தலைமையின் கீழ் அமைச்சரவை பயிற்சி பெற்று அடக்கத்தின் சிகரமாகத் திகழ்ந்தார். சமுதாய நலத்திட்டப் பணிகளில் பேரார்வம் கொண்டு கிராமங்கள், சமுதாய, பொருளாதார விஷயங்களில் சிறந்து விளங்கி பல பணிகள் ஆற்றி யிருக்கின்றார். கிராமங்களை மின்சார மயமாக்கி விவசாயிகளின் கஷ்டங்களை உணர்ந்து பல இடங்களில் அணைக் கட்டுகள் கட்டி நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்தி விவசாய வளத்தைப் பெருக்கி யிருக்கின்றார். திருமங்கலம் தாலூகா மக்கள் திரு பக்தவத் ஸலம் அவர்கள் அமைத்து தந்த வைகை அணைக்கட்டினையும் விவசாயத்திற்கு நீர் கொடுக்கும் அதன் அருமையினையும் நினைத்து நன்றி கூறுகிறார்கள்.

இத்தகைய அரசியல் மேம்பாடுடைய திரு பக்தவத்ஸலம் அவர்கள் ஆழ்ந்த மத நம்பிக்கைகொண்டவர் என்றால் அது பலருக்கு நம்ப முடியாத அதிசயமாகத் தோன்றலாம். தமிழ்நாட்டில் சமய ஒருமைப்பாட்டிற்கு திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகள் மூலமாகவும், கூட்டு வழிபாட்டு முறைகளாலும் வித்து இட்டவர் திரு பக்தவத்ஸலம். சிதிலமடைந்து சீர் குன்றியிருந்த தெய்வத் திருத் தலங்கள் பலவற்றிலும் ஆலயத் திருப்பணிகள் செய்து குடமுழுக் கினுக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தவர் நமது திரு பக்தவத்ஸலம். ஆலவாய் அங்கயற் கண்ணியின் ஆலயத்திற்குத் திருப்பணி செய்து குடமுழுக்காட்டிய சிறப்பினை பாண்டிய நாடு நன்கறியும்.

என்றும் இன்சொலும் இன்முகமும் கொண்ட இனியராய் விளங்கிவரும் திரு பக்தவத்ஸலம் அவர்கள் காஞ்சி பெரியவர்கள் அவர்களிடம் ஆழ்ந்த பக்தி கொண்டவர் என்ற ஒரு பண்பே அவர் எத்தகைய மனித உத்தமர் என்பதை விளக்கும். அன்னார் பல்லாண்டு பல்லாண்டு பல காலம் வாழ்ந்து தமிழ்நாட்டுக்குச் சீரும் சிறப்பும் பெற்றுக் கொடுக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ஆடம்பர அரசியலை அறவே நீக்கி அடக்கமாக இருந்து அரசியலை நடத்துபவர் இவர்.

தமிழகத்தின் தனித்தலைவர்

கலைஞர் டி. என். சிவதாணு

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திரமுமின்றி
வஞ்சனை செய்வாரடி — கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி,

என்று நடிப்புச் சுதேசிகளைப் பற்றித்தான் மனம் நொந்து பாடியிருக்கிறார் தேசியக் கவி பாரதியார். தேசிய இயக்கத்தின் சரித்திரம் மாறிவரும் இந்தக் காலத்தில் திடீரென்று இந்தப் பாட்டின் ஞாபகம் வந்தது.

நெஞ்சில் உரங்கொண்டு, நேர்மையைக் கடைப்பிடித்து மக்களுக்கு நல்லதெனத் தோன்றுவதைத் துணிந்து செயல்படுத்த வேண்டும் என்று நினைத்து, தன்னுடைய பதவிகளை மக்கள் சேவைக்கே உபயோகப்படுத்திக் கொண்டிருந்ததோடு, நாணயமும், ஒழுக்கமும் நிறைந்த அரசியல்தான் நாட்டுக்குத் தேவையென்று சொல்லளவிலே இல்லாமல் செயல்பட்டு வருபவர்தான் நமது அருமைத் தலைவர் பக்தவத்சலனார் அவர்கள்.

அரசியலைச் சூதாக நினைத்து சமயத்திற்குத் தகுந்தாற்போல் மக்களை பகடைக்காய்களாக்கி அரசியல் அரங்கத்திலே ஆனந்தக் கூத்தாடும் அரசியல் தலைவர்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட தலைவராக விளங்குவதோடு, ''கட்சி மக்களுக்காகத்தான் இருக்க வேண்டும், சொந்த நலனுக்காகக் கட்சியைப் பயன்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும், கட்சியின் நன்னோக்கங்களுக்கு மாறாக நடக்கும் தொண்டனைக் கூடக் கண்டிக்காமல் இருந்து விட்டால் கட்சிக்கு பாதகமேற்படும்'' என்ற உண்மையை நன்குணர்ந்து ஆடம்பர அரசியலை அறவே வெறுத்து அடக்கமாக இருந்து அரசியலை நடத்தும் ஆற்றல் நிறைந்தவர் நமது அன்புத்தலைவர்.

தேமலி சுவைக்கனி பல செறுந் துயர்
காமரம் வளைதல் போற் கலையு ணர்ந்திடும்
தூமென மாட்சியோர் தொழுவர் யாரையும்
பாமர ரெவரையும் பணிந்தி டார்களே.

மக்களுக்குத் தேவையான தேன் நிறைந்த சுவை மிக்க பழங்களைக் குலைக்குலையாய்க் காய்த்துக் கொண்டிருக்கும் சோலை மரங்கள் தானாகவே வளைந்து கொடுக்கும் தன்மைபோல் எல்லா வகையும் கற்றுணர்ந்த பெரியோர்கள்எல்லோருக்கும் பணிவார்கள். ஒன்றும் தெரியாதவர்கள் யாரையும் பணியாமல் தான் செய்யும் தவறைக்கூட சரியெனச் சொல்லுவார்கள், என்ற பெரியோர்களின் மூதுரைப்படி மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பு கொடுத்து அரசியலில் ஒழுக்கம் காண விரும்புபவர் தான் பக்தவத்சலனார்.

சுதந்திரத்திற்குப் பிறகு தமிழ்நாட்டில் அவரில்லாத மந்திரி சபை இல்லையென்றே சொல்லலாம். அவர் வகிக்காத துறைகளே யில்லை. மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசியிலிருந்து முதலமைச்சர் பதவிவரை வகித்து, பதவி யென்பது வெறும் அந்தஸ் திற்கு உரியதல்ல, மக்களுக்குச் சேவை செய்வதுதான் என்று அவர் வகித்த ஒவ்வொரு துறையையும் மக்களுக்குப் பயன்படச் செய்து வந்திருக்கிறார்.

காங்கிரஸ்காரருக்கு மக்களிடையே களங்கம் வரக்கூடாது என்று நினைத்தவர். அதனால் காங்கிரசில் சுயநலவாதிகள் சிலருக்கு அவரைப்பிடிக்காமல் இருந்திருக்கலாம்.

உதாரணமாக ஒரு சம்பவம். சர்க்காரின் பணத்தை வாங்கி பள்ளிக்கூடம் நடத்திவந்த ஒரு காங்கிரஸ் தியாக தம்பதிகள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களிடம் பள்ளியை நடத்து வதற்குப் பணம் போதாது என்று கேட்கிறார்கள். கொடுத்த பணம் என்னவாயிற்று என்று கேட்கிறார் முதலமைச்சர். பள்ளியை நடத்தும் சுதந்திரத்தியாகத் தம்பதிகள் அதற்கு ஏதோ சாக்குகள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய சமாதானத்தை இவர் ஏற்க வில்லை. சற்றுக் கோபத்துடன் ''மக்களின் பணத்தை வீண் விரயம் செய்வதற்கு காங்கிரஸ்காரர்கள் சுதந்திரத்திற்குப் போராடவில்லை, பதவிக்கும் வரவில்லை. நாட்டு மக்களின் நல்வாழ்வில் நாம் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். உங்களைப்போல் உள்ளவர்களால் தான் காங்கிரஸ் கட்சிக்கு கெட்ட பெயர் வருகிறது'' என்று முதலமைச்சர் கூறுகிறார். இந்தச் சம்பவத்தை நான் கண்ணாலே கண்டேன்.

தம்மையுந்தங் கடமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழி யினுஞ் செல்வ ரிடர் தீர்ப்பர்,

உத்தமர்கள் தங்கள் பெருமையை விட்டுத் தங்களைப்போல் மற்றவர்களை நினைத்து அவர்களைத் தேடிச்சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்கள் என்பதுபோல், தன் தள்ளாத வயதிலும் மக்கள் சேவையே தெய்வ சேவையெனக் கருதி பணியாற்றிவரும், தமிழகத்தின் தனித்தலைவர் — சேக்கிழார் வழிவந்த செம்மல்—பக்தவத்சலனார் திரு நாமம் என்றென்றும் வாழ வேண்டும் என்பதே நாட்டு மக்களின் நன்மையை நாடும் ஒவ்வொருவரின் கருத்தாகயிருக்க வேண்டும்.

● எஸ். சீனிவாச அய்யங்கார் செல்வத்திலேயே பிறந்து செல்வாக்குடன் வாழ்ந்தவர். அவருக்கு அபார மூளை. தேர்ந்த வழக்கறிஞர். சட்ட நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து அறிந்தவர். நியாயவாதத்தில் அவருக்கு இணை எவரும் இல்லை என்ற பெயருடன் விளங்கினர். சிறந்த வரவேற்புடன் பொதுவாழ்வில் ஈடுபட்டார். மாகாண மகாநாட்டின் தலைவராகவும் அவர் வரிக்கப் பட்டார்.

பெருந்தலைவராக இருந்தும், சாதாரண ஏழை, எளிய ஊழியர்களிடம் சீனிவாச அய்யங்கார் அன்புடன் அளவளாவுவார். என்னிடத்தில் சீனிவாச அய்யங்காருக்கு மிகவும் அன்பு உண்டு. என்னைப்பற்றி இதர சகாக்களிடம் புகழ்ந்து பேசுவார். அது சில சமயங்களில் எனக்குச் சங்கடத்தை விளைவிக்கும். என் மாமன் முத்துரங்க முதலியார் அவர்களும், நானும் அவருடன் பல சுற்றுப்பயணங்களில் உடன் செல்வோம். பெரிய மேதாவியான அவர் ஒரு குழந்தை போல் எல்லோரிடமும் பழகுவார்.

பக்தவத்ஸலம்

காவிரி நதிநீர்ப் பிரச்சினை யின் ஒவ்வொரு அங்கமும் நன்குணர்ந்தவர்.

ஆட்சி வல்லுநர், அறப்பணியாளர்

டி. சம்பத்
முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்.

ஆட்சி வல்லுநர்

இன்று 75 ஆண்டுகள் நிறைவுறும் தலைவர் திரு. பக்தவத்ஸலம் அவர்களுடைய வாழ்க்கை பெரும்பாலும் வெற்றி மிக்க ஆட்சி நிர்வாகத்தில் கழிந்தது என்பது ஒன்றே ஆட்சியை நடத்துவதில் வல்லவர் அவர் என்பதற்குச் சான்று. இதுவே அன்னவரது பொது வாழ்வுப் பணியின் பொன்விழாவாகவும் அமைவது மகிழ்ச்சிக் குரியது!

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் (குறள்)

முதலமைச்சராக ராஜாஜி இருந்தாலும், காமராஜ் இருந்தாலும், மற்றும் பிரகாசம், ஓமாந்தூரார், குமாரசாமி ராஜா யார் இருந் தாலும் அவர்கள் பக்தவத்ஸலம் அவர்களைத் தமது அமைச்சரவை யில் சேர்த்துக்கொண்டு அவரிடத்தில் பொறுப்புள்ள இலாகாவை ஒப்படைத்தனர்.

மலைபோல் மேஜை மீது குவிந்திருக்கும் ஃபைல்களை — நம்முடன் பேசிக்கொண்டே — அனுயாசமாக முடிவெடுத்து உத்தரவுகள் போடும் அளவுக்கு பிரச்சினைகளை நன்கு அறிந்தவர்கள். அவ்வாறு அளிக்கும் உத்தரவுகள் ''குறிப்பிற் குறிப்புணர்வதாக''வும் - தெளி வானவையாகவும் இருக்கும்.

தம்மிடம் உதவி நாடி வருபவர்களுக்கு இயன்ற அளவு உதவுவார். முடியாவிட்டால் அதை அவரே ஒப்புக்கொள்ளும் அளவுக்கும் இதமாக எடுத்துச் சொல்லியனுப்புவார். இது அவர் களிடமுள்ள தனி ஆற்றல்!

திரு பக்தவத்ஸலம் அவர்கள் வெறும் புத்தக சித்தாந்தங்களை நம்பிப் பின்பற்றுபவர் அல்ல. பிரத்தியட்ச நிலைகளைக் கருத்தில் கொண்டு அனுபவசாலிகளை நெருங்கி ஆலோசனைகள் பெற்று அதன் பேரில் சட்டங்களை உருவாக்குவார். நில உச்சவரம்புச் சட்டத்தைக் கொணர்ந்துவந்தபோது இம்முறையை அனுசரித்துத்தான் வெற்றி கண்டார்.

காவிரி நதிநீர்ப் பிரச்சினையின் ஒவ்வொரு அங்கமும் நன்குணர்ந்தவர். எதையும் தெளிவாகத் தாமும் உணர்ந்து மற்றவர்க்கும் விளக்குவதிலும் இவர் சமர்த்தர்.

எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும் இயல்புடையவர். அறிவும் செயலாற்றுத் துடிப்பும் கொண்டவராக இருந்ததால், தமிழகத் தலைமைச் செயலகத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பல துறை அமைச்சராகத் திகழ்ந்து, முடிவில் 1967 வரை முதலமைச்சராகவும் இருந்து பல அரிய விஷயங்களுக்கு முதல் உவமையாளராகவே நிற்கின்றார்!

அறப்பணியாளர் :

எம் கடன் பணிசெய்து கிடப்பதே!

பெருங்குடித் தோன்றல் ஆதலின், தெய்வப் பணிகளில் மனமொப்பி ஈடுபட்டார். தமது ஆட்சிக் காலத்தில், தமிழகத்தில் ஏராளமான ஆலயங்களைப் புதுப்பிக்கவும், கும்பாபிஷேகம் செய்யவும் வகை செய்தார்கள். நேரில் முன்னின்று நடத்தி வைப்பார்கள். நாடு மறக்க முடியாத சம்பவங்கள் இவை. குடந்தை ஸ்ரீ சாரங்க பாணி கோயிலைப் புதுப்பிப்பதில் ஆர்வம் காட்டி நமக்கு நல்லாதரவு தந்ததன் பயனாக, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக ''கருமை'' ஏறிக் கிடந்த பெரிய கோபுரம் இன்று கம்பீரமாக வண்ணக்கலையாக விளங்குகிறது.

செல்வம் மிக்க ஆலய நிதிகளிலிருந்து ஏழ்மையான கோவில் களுக்கு நிதி உதவும் ஓர் ஏற்பாட்டைத் திட்டமிட்டு, **Doctrine of Sypre''** — படி ஹிந்து அறநிலையச் சட்டத்தைத் திருத்தியமைத்தார்.

இத்தகைய இவரது அறப்பணிக்கு ஆத்திக உலகம் இவருக்குப் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

இன்றும் ஓய்வு காலத்தில் இத்தகைய பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்!

தேசிய உணர்வு!

பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானில் நனி சிறந்தனவே!

நாட்டுப் பற்றில் பக்தவத்ஸலம் அவர்கள் யாருக்கும் இளைத்தவரல்ல. பலமுறை சிறை சென்று பல இன்னல்களுக்கு ஆளாகி இவர் செய்த தியாகங்கள் மறத்தற் பாலதன்று!

காந்தியடிகள், பண்டித நேரு, ராஜாஜி, முத்துரங்க முதலியார் போன்ற முதிய தலைவர்கள் மட்டுமன்றி, சமகாலத் தலைவர் காமராஜ், பிரதமர் திருமதி இந்திராகாந்தி போன்ற வழித்தலைமுறையினரும் திரு பக்தவத்ஸலத்திடம் தனி நம்பிக்கையும் அன்பும் கொண்டவர்கள். இத்தனைக்கும் பாத்திரமாக இவர் விளங்க இவரிடம் குடி கொண்டுள்ள ஆழ்ந்த தேசிய உணர்வே காரணம். எந்தப் பிரச்சினையாயினும் நாட்டு நலனையே முன்வைத்துச் சிந்திப்பவர்!

வாழ்க! புகழ் வளர்க!

'பக்தவத்ஸலம்' என்றால் அன்பர்க்கு அன்பன் என்று பொருள். தன்னைச் சேர்ந்தவர்கட்கு மட்டுமன்றி மாற்றாரேயாயினும் உரிய மரியாதையோடு நடத்தும் பண்புடையவர்.

இவர் காலத்தில் ஓர் எம். எல். ஏ. ஆகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்ததை ஓர் பெருதற்கரிய பேறாக எண்ணுகிறேன்.

அன்னவர் புகழ் பலவும் பரவிப்
பன்னாள் வாழிய வாழிய என்று
இறைவனை வாழ்த்துவோமாக!

- *1942-ல் ஆகஸ்ட் இயக்கத்தை ராஜாஜி எதிர்த்தார். காங்கிரசுக்கு விரோதமாக அவர் சென்றபோது நான் அவரை எதிர்த்தேன். அந்த நிலையில் அவரைக் கண்டிக்க நான் தயங்கியதே இல்லை. பின்னால் அவர் சுதந்திரக் கட்சியைத் துவக்கிய போது கொள்கை ரீதியாக அதைக் கடுமையாக இன்றுவரை விமரிசனம் செய்து வந்திருக்கிறேன்.*

  ஆனால் என்னிடம் நம்பிக்கையும், அன்பும் அவருக்கு என்றைக்கும் உண்டு.

பக்தவத்ஸலம்,



1927 சென்னை காங்கிரஸ் மகாநாட்டின் தலைவர் டாக்டர் அன்ஸாரி அவர்களுடன் வரவேற்புக் குழுவினர்:
திரு. முத்துரங்க முதலியார், திரு. சீனிவாச அய்யங்கார், திரு. ஏ. ரங்கசாமி அய்யங்கார்,
திரு. பக்தவத்ஸலம்

MADRAS

பக்தவத்சலனார் வாழ்க !

ஸ்ரீமான் நா. பார்த்தசாரதி

எத்திசையும் புகழ்மணக்க இருந்த தமிழ்த் திருநாட்டின்
எல்லார்க்கும் நன்மைசெயும் முதல்வரானீர்
கற்றுயரும் பலகல்விப் பணிபுரிந்த பெருமையினால்
காலமெலாம் மறவாமல் நினைவிருத்திப்
பெற்றவரும் மற்றவரும் புகழவரும் ஒருபெரியீர்
பேரருளிற் கொடைநலத்திற் கருணையினில்
பக்தவத்சல ரென்றழைத்துயரும் பாங்கான பெயருடையீர்
பரவிடுக பரவிடுக நும்புகழே !

சீராரும் குடிப்பிறப்பும் தெளிவான கலையறிவும்
தென்னாட்டில் எந்நாளும் மறவாத
பேராகும் பலதொண்டும் நிலையான பொதுப்பணியும்
பெரியோர்கள் தந்ததவ நல்வாழ்த்தும்
காராகும் கொடைநலனும் சற்குணமும் புண்ணியமும்
கருதரிய தேசியநற்குடியின் கண்ணியமும் சிறைவாழ்வும்
ஊராரும் உலகோரும் உள்ளவரை மறவாத
உத்தமரே நீர்வாழ்க நிலையெனவே !

தியாகத்திற்காகவும், நாட்டின் சேவைக்காகவும் அரசியலுக்கு வந்த பண்பாளர் இவர்.

இந்த மனிதரின் நிதி நிலைமை

அகிலன்

இந்த அரசியல் தலைவரின் ஒரே ஒரு பண்பைப் பற்றி மட்டுமே நான் இதில் குறிப்பிட விரும்புகிறேன். திருவாளர் பக்தவத்சலம் அவர்கள் தமது இடைவிடாத உழைப்பால் இந்த நாட்டுக்கும் இதன் மக்களுக்கும் கொடுத்திருப்பது எவ்வளவு? இந்த நாட்டினிடமிருந்து அவர் எடுத்துக்கொண்டுள்ள அவரது சொந்தச் சொத்து எவ்வளவு? —எந்த ஓர் அரசியல் தலைவரின் நாணயத்தையும் நான் இந்த ஓர் அளவு கோலை மட்டும் வைத்துக்கொண்டே அளக்க விரும்புகிறேன்.

'மயிலாப்பூர் வக்கீல்' என்றால் அந்தக் காலத்தில் காசு மரத்தில் பணம் குலுக்குகிற தொழில் என்று பெயர். 'மயிலாப்பூர் வக்கீல் வீட்டு மாட்டுப் பெண்ணாவேன்' என்று ஓர் இளம்பெண் மயிலாப்பூர் வக்கீல் வீட்டில் வாழ்க்கைப்பட விரும்புவதாக ஒரு சினிமாப் பாட்டுக்கூட மிகவும் பிரபலமாகி யிருந்தது.

ஓரளவு படிப்பும் வசதியும் இருந்த குடும்பத்தில் பிறந்த சிலர் அந்தக் காலத்தில் வெள்ளைக்கார ஆட்சியோடு கொஞ்சிக் குலவி பல வசதிகளைப் பெற்றுக் கொண்டார்கள். வக்கீலுக்குப் படித்த திரு. பக்தவத்சலம் வக்கீலாகிப் பண மரத்தை உலுக்கி யிருக்கலாம். அவரது திறமைக்கு அவருக்கு நீதிபதி பதவி கிட்டியிருக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

அவர் தொழில் செய்து காசு மரத்தைக் குலுக்கவில்லை. விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டுக் கடுமையாக உழைக்கலானார். பிழைக்க வேறு வழி இல்லாததாலோ தெரியாததாலோ அவர் அரசியலுக்கு வரவில்லை. அடிதடி, சிறைச்சாலை, துன்பங்கள், துயரங்கள் முதலிய வற்றைத் தெரிந்துகொண்டே அரசியலுக்குப் போனார். ஆட்சிப் பீடத்தால் கவரப்பட்டு அரசியலுக்கு வந்தவரில்லை இவர். இவர் அமைச்சராகவும் முதலமைச்சராகவும் வர முடியும் என்று கனவு கூடக் காண முடியாத காலம் இவர் அரசியலில் நுழைந்த காலம்.

பின்னர் விடுதலைக்கு முன்பு ஏற்பட்ட இடைக்கால ஆட்சியின் போதும், விடுதலை பெற்ற பிறகும் இவர் நாட்டுக்காக உழைத்திருக்கும் உழைப்பு கொஞ்சநஞ்சமல்ல. இவர் எங்கே இருந்தாலும் எப்படி இருந்தாலும் இவர் கீழ் உள்ள நிர்வாக இயந்திரத்தை இவர் பம்பரமாய்ச் சுழற்றிக் கொண்டிருந்தார். 'அஷ்டாவதானம்' என்று சொல்வார்களே, அதை இவர் நிர்வாகத் துறையில் அநாயாசமாகச் செய்துகொண்டிருந்தார்.

பணத்தைப் பொறுத்த மட்டில் பல லட்சங்களல்ல, பல கோடிகள் புழங்கக்கூடிய இடங்கள் இவர் வீற்றிருந்த இடங்கள். ஒரு சில ஆண்டுகள் மட்டுமல்ல; பலப்பல ஆண்டுகள் பணத்துக்குள்ளேயே புரண்டு கொண்டிருந்திருக்கிறார். இவரைப் பற்றிக் குற்றச்சாட்டுக்களும் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வந்திருக்கின்றன. அவற்றில் உண்மை இருந்திருக்குமானால் குறைந்த பட்சம் இப்போது இவருக்குச் சென்னையில் மட்டுமே ஐந்தாறு பங்களாக்கள் இருந்திருக்க வேண்டும். ஐந்தாறு கார்கள் இவர் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்திருக்க வேண்டும். ஏர் கண்டிஷன் அறைகளும், ஏவலாட்களும் ஆடம்பர வாழ்க்கையுமாக இவர் திளைத்துக்கொண்டிருக்க வேண்டும். எஸ்டேட்டுக்கள், கம்பெனியில் பங்குகள், வெளிநாட்டுப் பாங்குகளில் பதுக்கல் பணம் இப்படியெல்லாம் இவர் திளைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

பாவம்! பரிதாபம்! இவர் இன்று வாழும் வாழ்க்கை திறந்த புத்தகம். இவருடைய நிதி நிலைமை பற்றி இவரே 'எனது நினைவுகள்' என்ற நூலில் சொல்லி யிருக்கிறார். அதில் யாருக்கும் சந்தேகம் வந்தால் நேரில் போய் ஆராய்ந்து கொள்ளலாம்.

நாட்டுக்கு இவர் கொடுத்திருப்பது எவ்வளவு, நாட்டிலிருந்து இவர் எடுத்துக்கொண்டது எவ்வளவு என்பதைக் கணக்குப் போட்டுப் பாருங்கள். காந்தியோடு இந்த மண்ணில் காந்தீயம் தவிடுபொடியாகி விட்டது என்று நினைப்போர், அது இன்னும் உயிரோடுதான் இருக்கிறது என்பதற்கோர் எடுத்துக்காட்டு இந்த மனிதர். காந்தீயப் பரம்பரையின் வழிகாட்டிகள் இன்னும் நம்மிடையே வாழ்கிறார்கள் என்பதற்கு இவரும் ஓர் உதாரண புருஷர்.

மனிதர் என்ற சொல்லை அதன் முழுப் பொருளையும் உணர்ந்துதான் நான் பயன்படுத்துகிறேன். இவர் நூறாண்டு வாழ்ந்து இன்னும் இளமைச் சுறுசுறுப்பு குன்றாது இந்த நாட்டு மக்களுக்குப் பணி புரிய இறைவன் அருள்வானாக! என் உளம் நிறைந்த வாழ்த்துக்கள்!

வாழி வாழி

(சௌந்தரா கைலாசம்)

அயலொரு நாட்டான் நம்மை
ஆளுதல் கூடா தென்று
புயலெனச் சீறிப் பொங்கிப்
போரிடும் மறவனாகித்
துயரறச் செய்தாய்; நாட்டில்
சுதந்திரம் துளித்து, மக்கள்
உயர்வுறச் செய்தாய்; அன்பில்
ஊறினாய்; உழைத்தாய்; வாழி!

பெற்றதோர் சுதந்தி ரத்தைப்
பேணியும் நின்றாய்; கற்று
முற்றிய அறிவால் நாட்டு
முதல்வரும் ஆனாய்; வந்து
சுற்றிய துயர றுத்துச்
சுகம்மலர் வித்தாய்; தொண்டில்
பற்றுடை யவனே! தேச
பக்திமிக் கவனே வாழி!

பிறந்தநன் னாளில் அன்பு
பெருகிட வாழ்த்து கின்றோம்
அறந்திரண் டுருண்ட கந்தன்
அருள்திறத் தாலே, நன்றி
மறந்தறி யாத சான்றோர்
மதித்திடும் தகுதி யோடும்
நிறைந்தநன் னெஞ்சத் தோடும்
நீடூழி வாழ நீயே!

YOU CAN TRUST TVS

Did you know that 83% of the road transport operators in India own just one or two trucks? Over the past 60 years we've perfected the fine art of serving such enterprising entrepreneurs in the South.

We'd call it an integrated service, covering all the areas in which you need the help of expertise with *understanding.*

We offer you a choice of chassis, arrange hire purchase finance, provide insurance, build the body to suit your specific transport need, provide tyre retreading, engine reconditioning, servicing and repairs.

We reach you proven spare parts through 1000 outlets.

We put the best plant equipment and highly qualified and trained personnel on your job. What's more, we have learnt over the years to serve efficiently and economically.

Total involvement in your needs and problems is the crux of TVS service. You can trust TVS to keep *your profits up and your maintenance costs down.*

T. V. SUNDRAM IYENGAR & SONS PRIVATE LIMITED,
Madurai



TVS

TVS-6081R

With best compliments from :

SHAIK MOHAMED ROWTHER AGENCIES,

Merchants, Steamer Agents, Stevedores & Contractors,

16, First Line Beach, Madras-1.

Branches at : Kakinada, Masulipatnam, Guntur, Karaikal, and Nagapattinam

Agents :

The Scindia Steam Navigation Company Ltd.
Scindia Steamships (London) Ltd.
Bombay Steam Navigation Co., (1935) Ltd.
The United States Navigation Co., Inc.

Telephone No. 22535 (3 Lines)

Cable Address :

SHAIKAGENT (General)
JALANATH (Coastal) } Scindia
SAMUDRAPAR (Overseas) } Line

Telex : SCINDIA MS 334

"அலை ஓசை" படித்தீர்களா?

முற்போக்கு நடுநிலை நாளிதழ்

★ சூடான அரசியல் செய்திகள் !

★ சுவையான சினிமா செய்திகள் !!

★ ஓராண்டு காலத்தில் எந்தப் பத்திரிகையும் சாதிக்காத அளவு அதிகமாக விற்பனை யாகும் ஒரே ஏடு !!!

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்க :—

சர்குலேஷன் மானேஜர்,
"அலை ஓசை"
P. B. 1002
1-B, ஹார்லிஸ் ரோடு,
சென்னை-10.

SUGAR —

ENERGY

GIVING

FOOD

VITAL TO

THE NATION'S

HEALTH

We manufacture the best quality SUN FLOWER Brand white crystaline sugar (Grades D—30 and E—30). The molasses produced by us are most suitable for processing into pharmaceuticals, cattlefeed & industrial a'cohol.

We are striving to reduce sugar shortage in the country by raising our cane crushing capacity from 2000 tonnes per day to 30C0 tonnes by the end of this year.

ARUNA SUGARS LTD.

Regd. Office:
"MECO HOUSE"
5th Floor,
10 A/1, Mount Road,
MADRAS-2.

Factory:
PENNADAM,
SOUTH ARCOT DISTRICT,
TAMILNADU

SAFE ON TVS RETREADS

TVS retreads look like new tyres. But the meticulous care we take at every stage of the retreading process is not just to ensure good looks. It is to ensure perfect road grip like a new tyre. They have a long, new life ahead of them.

Every tyre you give to TVS is checked and rechecked for sand grains or minute impurities that could cause tread looseness. Highly skilled technicians work on the most modern retreading machines. Did you know TVS make their own camelback to ensure durability?

No wonder TVS retreads give you more tyre miles per rupee than any other.

You can trust TVS — the largest retreaders in India

TVS

YOU CAN TRUST TVS

SUNDARAM INDUSTRIES PRIVATE LIMITED
Bangalore - Coimbatore - Kalamassery - Madras - Pudukkottai - Salem - Secunderabad - Tirunelveli - Vijayawada - Visakhapatnam

TVS-6073 R

With the best compliments of :

SRI BALAJI INDUSTRIES

General Engineering Fabricators

Prop: K. Balasubramanya Chetty & Sons

386, BAZAAR ST., REDHILLS P.O. MADRAS-52

Approved Contractors for:

D. G. S. & D., New Delhi

Southern Railway, Madras

Integral Coach Factory, Madras-38

Madras State Electricity Board, Madras - 2

WITH BEST COMPLIMENTS OF:

★

The Madras
Aluminium Company Limited

'JAYALAKSHMI'

RACE COURSE : : COIMBATORE - 18

Factory : : METTUR DAM - 2

(Tamil Nadu).

The learned sages have explained that the fruit of simple knowledge devoid of action is one; and the fruit of action devoid of true knowledge is another.

A man can attain his goal only if knowledge and action go together, i.e. when his actions are guided by the true knowledge of the universe, the cause and the Creator.

—YAJURVEDA
(Chapter 40 : Mantra 10)

Dalmia Cement (Bharat) Limited

Dalmiapuram (Tamil Nadu)

H. O. 4-SCINDIA HOUSE, NEW DELHI-1.

With best compliments from

ARVIND DISTILLERY P. LTD.

KADAMPULIYUR

(Via) Panruti, South Arcot Dist.

Phone: 181. Grams: ARVIND

Manufacturers of high quality rectified spirit, denatured spirit, methylated spirit and arrack

We have plans to manufacture Indian-make foreign liquors and Fenny from cashew apple

Regd. Office:

"MECO HOUSE" (V Floor),

11. A/1, MOUNT ROAD,

MADRAS-2.

Phone Nos.: 83615, 83616 & 87943

Grams: Anusham.

WITH THE BEST COMPLIMENTS

FROM

South India Viscose Limited

COIMBATORE-18

MANUFACTURERS OF

BEST QUALITY RAYON YARN,

STAPLE FIBRE AND WOOD PULP.

Our heartiest felicitations to Shri M. Bhaktavatsalam on the completion of 50 years of dedicated public service and we wish him many more years of service to society.

THE ENFIELD INDIA LTD.,

MADRAS - 19.

With Best Compliments from

Industrial Chemicals Limited

Manufacturers of

'SANKAR BRAND" Calcium Carbide

Conforming to I. S. Specifications

1040 — 1960 — 'A' Grade

Registered Office :
"Dhun Building",
175/1, Mount Road,
MADRAS-2.

Factory ;
Sankarnagar P. O.
TALAIYUTHU R. S.
Tirunelveli Dist.

Sole Selling Agents

SRI KRISHNA & SONS

MADRAS, CALCUTTA, DELHI & BOMBAY

SOUTHERN RAILWAY

The people of our land vary in customs, habits, traditions and costumes as much as our scenery and climate. And yet, the cementing bonds of centuries-old culture transform the apparent diversity into a living harmony.

Knitting this vast and varied country together and sustaining its social and economic edifice are the INDIAN RAILWAYS—Asia's largest and the World's Second largest single Railway System, thus contributing to Nationa Integration.

Nearly 14 lakhs of Railway men with exemplary dedication place Service before Self and Country before everything.

Issued by
The Chief Public Relations Officer,
Southern Railway
No. Pub. 4/11/1/A/784

With best wishes for

Bhaktavatsalam - Fifty Years of Public Life

SALEM TEXTILES LIMITED
Selliampalayam, Narasingapuram
Attur Talk. (Salem Dist.)
Phone: Office: Salem—5152 Resi: Salem—5576
Office: Attur — 393 & 343
Telex: No. 040 — 210
Salem Code: Saltex
Telegrams: "SPINNING" Spindles: 12,496

Spinners of Quality Yarn in 34s Cones & 80s and 100s Warp Cones and Hanks by Egyptian Cotton.

For Details Contact:

SALEM TEXTILES LIMITED
4-B, SALAI ROAD, SALEM-1.


India's strength lies not in numbers
but in healthier and better educated citizens
small families make for
HEALTHY CHILDREN
GREATER SHARE OF
PROSPERITY FOR EVERYONE
BETTER CHANCES OF
GOOD EDUCATION

ONWARD GOES THE CARAVAN

A Year draws to a close and another begins............ ..
And the world moves on...... ....searching, discovering,
And Again.........Man on the Moon......Now his eyes
On Venus.................

Onward he goes........

We, at Simco Meters Limited, do our bit to contribute to the onward journey. We began with Electricity Energy Meters of many Kinds..............

Now, we are in the world of Electronics making precision Instruments for Radio, Television and Tel-Communication Industries. Something attempted, something done, as the poet said, we move on, in keeping with the spirit of the times and Chimes.

With the best compliments from :—

SIMCO METERS LIMITED,

METER FACTORY ROAD,

Post Box No. 46,

TIRUCHIRAPALLI-1.
TAMILNADU

GOVERNMENT PLANS WILL MATERIALISE

— The Tamil Nadu Governmet Offers Twenty-five percent of share cap'tal to workers in public sector;

— Proposes to nationalise all bus transport within five years;

— Eleminates exemptions from land ceiling;

— Helps freedom-fighters

— Honours Martyrs and

— Works for Pleasure and Prosperity Through many ideal schemes

THESE SCHEMES WILL MATERIALISE IF ONLY PEOPLE REALISE THEIR RESPONSIBILITY.

— Therefore, extend your co-operation Without any reservation.

Issued By :

Department of Information and Public Relations,

GOVERNMENT OF TAMILNADU

With All Good Wishes

FOR

Many Happy Returns of The Day

TO

SHRI M. BHAKTAVATSALAM

From :

TARAPORE & CO.

ENGINEERS & CONTRACTORS

DHUN BUILDING

175/1, MOUNT ROAD, MADRAS-2.

The South Madras Electric Supply Corporation Limited

TENNUR, TIRUCHIRAPALLI-17

o——o

- Licensees for the distribution of electrical energy in the district of Tiruchirapalli (Tamil Nadu) serving 83,000 consumers situated in an area of over 8,28,800 hectares.

- Enquiries for power supply and facilities will be promptly attended to.

Twins to serve you

LUCAS-TVS

LUCAS
INDIAN SERVICE

Lucas-TVS builds quality into automobile electrical equipment,

Lucas Indian Service maintains it.

LUCAS-TVS LIMITED,
PADI, MADRAS 50
LUCAS INDIAN SERVICE LIMITED,
MADRAS—BOMBAY—CALCUTTA

With best compliments of :

MADRAS CEMENTS LTD.,
(Factory at Tulukkapatti, Sattur Taluk)
"RAMAMANDIRAM"
RAJAPALAIYAM

(*Manufacturers of:* RAMCO BRAND Portland Cement)

Sold and Distributed by:

'RAMCO CEMENT' Distribution Co. Private Ltd.,
"LAKSHMI NIVAS", Rajapalaiyam.

SOUTHERN ASBESTOS CEMENTS LTD.,
(Factory: ARKONAM)

(*Manufacturers of*: 'RAMCO' Asbestos Cement Sheets)

RAJAPALAIYAM MILLS LIMITED
RAJAPALAIYAM
(Modern Spinning Mills)

JAYARAM MILLS LIMITED
RAJAPALAIYAM

(*Manufacturers of:* GREY GADA)

THE RAMARAJU SURGICAL COTTON MILLS LTD.,
RAJAPALAYAM

(*Manufacturers of:* Antiseptic Dressings &
Proprietors: Sudarsanam Spinning Mills)

GOWRIHOUSE METAL WORKS,
RAJAPALAIYAM

(*Manufacturers of* Wood screws, Wire Nails &
Cut—tacks)

AND

P. A. C. RAMASAMY RAJA POLYTECHNIC,
P. A. CHINNIAH RAJA Memorial High School.
Founder: P. A. C. RAMASAMY RAJA



The manufacturers of

SANKAR CEMENT

have won the Govt. of India's Certificate of Merit for meritorious performance in Exports during 1968-69. Made for quality, durability and granitic strength, SANKAR CEMENT *continues* to strengthen India's foreign exchange reserves, too!

Guaranteed by ISI hallmark

INDIA CEMENTS LTD.
Dhun Building, Madras-2
Over 25 years' standing — ever expanding!
'Everest Buildings', 9th Floor,
46-C, Chowringhee Road, Calcutta-16
'Kasturi Buildings',
171-172, Jamshedji Tata Road, Bombay-20
K9, South Extension Part I, New Delhi-49

For FREE TECHNICAL ADVICE, CONTACT: CEMENT SERVICE BUREAU, 'THE GROVE', MADRAS-18

PDSIC-1753A R

WE MAKE PRODUCTS

BEHIND PRODUCTIVITY

★ Greater Productivity is the Greatest Need of the Hour.

★ Behind Productivity lies Planning.

★ And behind Planning, Papers and Boards!

★ Alive to this need, we produce quality papers and Boards, to provide the literal and figurative base for productivity.

Seshasayee Paper and Boards Limited

CAUVERY R. S. P. O.

ERODE – 7

(SALEM DISTRICT)


New Beat in the heart of
TAMIL NADU
Twenty years ago: Madras was a quiet city. Industrially backward.
But today Madras has become the heart of industrial development of Tamil Nadu. And there's a new beat. The beat of Madras Refineries at Manali, the once sleepy-eyed village, releasing new forces towards greater industrial growth.
MRL, with a refining capacity of 2.5 million tonnes of petroleum products, has instantly become the mother industry, creating a new dimension to a vast petro-chemical complex – fertilisers, speciality oils, carbon black, detergents, pesticides, cosmetics and feedstock for other items like clothing, furniture, utensils and even food proteins.
MRL is a shining example in India's oil industry—a monument to our self-discovery since freedom and to our progress in developing our latent resources.
MRL
—Generating new forces for industrial growth
MADRAS REFINERIES LIMITED
122-D, Mount Road, Madras-6.
maaMRL/3-M